மாலை 48 மணி 4 ஏப்ரல் 2006 விலை ரூ10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

பார்போற்றும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்

திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் கோவில்

நோய் தீர்க்கும் அதிசய தலமரம்

மதுரை அரசாளும் மீனாட்சியே !

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

பண்ணாரி அஞ்சல், சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்,

தொலைபேசி எண் - 04295-243289

முக்கியத் திருவிழா - குண்டம் பெருந்திருவிழா

ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதத்தில் பங்குனி உத்திரத்தை அடுத்து சமீபத்தில் வரும் திங்கட்கிழமை இரவு ''குண்டம்'' திருவிழா நடைபெறுகிறது.

2006ஆம் ஆண்டு குண்டம் திருவிழா விவரம்

10.4.2006 திங்கள், இரவு குண்டம் திருவிழா

11.4.2006 செவ்வாய் அதிகாலை 4 மணி.

17.4.2006 திங்கள், மறுபூசை

குண்டம் திருவிழாவிற்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடி வழிபாடு நடத்திப் பக்தர்கள் (தீ மிதித்து) குண்டம் மிதித்து வழிபாடு செய்கின்றனர்.

தினசரி பூஜை

தினசரி 4 காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. கால அபிசேகம் கட்டணம் ரூ.250/-

காலை	5.30	காலசந்தி பூஜை
மதியம்	11.30	உச்சிக்கால பூஜை
மாலை	5.30	சாயரட்சைபூஜை
இரவு	8.30	அர்த்தஜாம பூஜை

கட்டண விவரங்கள்

1. காலப்பூஜை அபிசேகக் கட்டணம்	ரூ. 250/-
2. தங்கக் கவசம் சாத்துபடிக்கு	ரூ. 251/-
3. சிறப்புத் தனிஅனுமதி கட்டணம்	ரூ. 25/-
4. தனி அனுமதி கட்டணம்	ரூ. 10/-
5. இலவசதரிசனம்	கட்டணமில்லை.

ON LINE E- PUJA RATES

Mail @ bannariamman.com.

ARCHANAI	Rs. 100/-
GOLD KAVACHAM	Rs. 325/-
ANNADHANAM	Rs. 1500/-
ABHISHEKAM	Rs. 325/-
FREE PRASADAM (KATTALAI)	Rs. 1300/-

அன்னதானம்

திருக்கோயிலில் அன்னதானத்திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. பக்தர்கள் தாங்கள் விரும்பிய நாட்களில் அன்னதானம் செய்ய ரூ.1500/- செலுத்தியும் (150 நபர்களுக்கு), அன்னதான நிரந்தரக் கட்டளைக்கு ரூ.15,000/- செலுத்தியும் பங்கேற்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதற்கு வருமான வரிச்சட்டம் 80 ஜின் படி 50% வரிவிலக்கு உண்டு. அன்னதானத்திற்கு நன்கொடையாக அரிசி, காய்கறி மற்றும் இதரப் பொருட்கள் வழங்கலாம்.

கருணை இல்லம்

இத்திருக்கோயிலில் 100 குழந்தைகளைக் கொண்ட கருணை இல்லம் சிறப்பாக நடைபெறுகிறது. (சிறுவர் 50, சிறுமியர் 50)

தங்கத்தேர்

தங்கத்தேர் 9 அடி உயரத்தில் சுமார் ரூ.53 லட்சத்தில் (திருக்கோயில் நிதி) செய்யப்பட்டு 2006 மார்ச் 2ம் தேதி வெள்ளோட்டம் சிறப்பான முறையில் நடைபெற்றது.

தங்கரதப் புறப்பாடு கட்டணம் ரூ. 1,001/-

சி.வி. இராஜேந்திரன்,
தலைவர், அறங்காவலர் குழு.

ஆர். ராஜப்பா
சி.வி. கோதண்டராமன்,
ராஜாமணி தங்கவேல்,
வீ. புருஷோத்தமன்,
ப. வீரப்பகவுடர்,
(பரம்பரை அறங்காவலர்கள்)

தி. சுவாமிநாதன், பி.ஏ., பி.எல்.,
துணை ஆணையர்/ செயல் அலுவலர்

டாக்டர். கே.ஜி. ரங்கநாதன், எம்.எஸ்.,
என். ஜம்பு (எ) சண்முகம்,
எஸ்.கே. பழனிச்சாமி,
எம். ராஜேந்திரன்,
பி. ரங்காள்.
(அரசு நியமன அறங்காவலர்கள்)

திருக்கோயில்

திருவள்ளுவர்	ஆண்டு 2037	விய-சித்திரை
மாலை 48	மணி 4	ஏப்ரல்-2006

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

அண்மையில் 9.3.2006 அன்று திருப்போரூர் அருள்மிகு கந்தசாமித் திருக்கோயிலில் நடைபெற்ற நூதன மரத்தேர் பிரதிஷ்டை கும்பாபிஷேக வெள்ளோட்ட விழாவில் நான் பங்கேற்றேன்.

திருப்போரூர் வாழ் பொதுமக்களும், ஆன்மீகச் சான்றோர்க[illegible]கத் திரளாக இத்தேர்த் திருவிழாவில் பங்கேற்றதோடு அவர்களின் பெருமகிழ்ச்சியையும், நன்றியையும் என[illegible]டம் தெரிவித்தனர்.

''ஐயா! இந்தப் புகழ்மிக்க திருக்கோயிலுக்கென்று தனியாக மரத்தேர் இல்லாத குறை இருந்தது. பிரம்மோற்சவத்தேர்த் திருவிழாவும் சிறிய சட்டத்தேரில் மட்டுமே கொண்டாடப்பட்டு வந்தது''.

''இக்கோயிலுக்கென்று தனியாக புதிய மரத்தேர் உருவாக்கித் தந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைவோம். என்றென்றும் பெருநன்றி உடையவர்களாக இருப்போம் என்ற வேண்டுகோள் தமிழக அரசிடம் எங்களால் வைக்கப்பட்டது''.

''இக்கோரிக்கையை உடனடியாக ஏற்றுத் தேர்த்திருப்பணிக்கென்று ரூபாய் இருபது லட்சங்களை ஒதுக்கித் தந்து இவ்வளவு விரைவாகக் கலையழகு மிக்க மரத்தேரை உருவாக்கித் தந்து எங்கள் நெஞ்சங்களில் பால் வார்த்த தமிழக அரசைநாங்கள் எவ்வளவு பாராட்டினாலும் தகும்'' என்று உளமார, வாயாரத் திருப்போரூர் மக்களும், சான்றோர்களும் வாழ்த்திய போது **''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே!''** என்ற நம் திருஞானசம்பந்தர் பெருமானின் தேவாரப் பாடலே என் நினைவுக்கு வந்தது.

அறநிலையத்துறை வாயிலாக நாளும் குறிப்பிடத்தக்க திருப்பணிகள் பலவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்ற போதும் மார்ச்சுத் திங்களில் மட்டும் மூன்று தங்கத்தேர் வெள்ளோட்ட விழாக்கள் நடைபெற்று இருப்பது எனக்கு மிக்க பெருமகிழ்ச்சி அளிப்பதாகும்.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில், பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் ஆகிய இம்மூன்று திருக்கோயில்களிலும் தங்கத்தேர் திருப்பணி நிறைவு பெற்று வெள்ளோட்ட விழாக்கள் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வாழ்த்த நிகழ்ந்துள்ளமையும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியினைத் தந்துள்ளது.

இத்தனைக்கும் சிகரம் வைத்தாற் போல் 17.3.2006 அன்று தமிழகத்தின் நூற்றுக்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டுத் திருக்குடநீராட்டு விழாக்கள் நடைபெற்றிருப்பது அறநிலையத்துறை வரலாற்றில் பொற்காலச் சரித்திரமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவை பற்றிய சிறப்புக் கட்டுரைகளும், அரிய படங்களும் இத்திருக்கோயில் இதழில் வெளியாகியிருப்பது ''திருக்கோயில்'' இதழ் வாசகர்களுக்குத் திகட்டாத பெருவிருந்து என்பதில் ஐயமில்லை.

அனைவரும் ''திருக்கோயில்'' இதழைப் படித்து மகிழ்ந்திட அன்புடன் வேண்டுகின்றேன்.

''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்''

வாசகர்களுக்கு அன்பான ''விய'' தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

அன்புள்ள

(த. பிச்சாண்டி, இ.ஆ.ப.)
ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை - 600 034.

திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் திருத்தேரோட்ட விழா

அன்னம் அளிக்குமூர் அண்டினரைக்
காக்குமூர்
சொன்னமழை போற் சொரியுமூர் -
உன்னினர்க்குத்
தீது பிணிதீர்க்குமூர் செவ்வேள் இருக்குமூர்
ஓது திருப்போரூர் எம் ஊர்.
- திருப்போரூர் சந்நிதிமுறை.

சென்னையில் இருந்து மாமல்லபுரம் செல்லும் பழைய மகாபலிபுரம் சாலையில் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருப்போரூர் என்னும் திருத்தலம். இத்திருத்தலத்தி[illegible]ள்மிகு கந்தசாமி திருக்கோயில் கிழக்[illegible] பார்த்த நிலையில் பிரணவ மலையின் கீழ்புறம் அமைந்துள்ளது. பிரணவ மலைக்கும் திருக்கோயிலுக்கும் இடையே பழைய மகாபலிபுரம் சாலை செல்லுகிறது. இங்கிருந்து மாமல்லபுரம் 15 கிலோமீட்டர் தொலைவிலும் திருக்கழுக்குன்றம் 22 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளன. திருப்போரூர், செங்கல்பட்டுக்கு வடகிழக்கே 27 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

தொண்டை நாடு என அழைக்கப்படும் இப்பகுதியில் முருகப் பெருமானின் திருத்தலமாக திருத்தணியும், திருப்போரூரும் சிறப்புற்று விளங்குகின்றன. இவை தொன்மை மிகுந்த முருகன் திருக்கோயில்களாக விளங்குகின்றன.

பெரும் பாலும் மற்ற முருகன் திருக்கோயில்கள் யாவும், காலத்தால் பிற்பட்டவையே. பனங்காடாய்க் கிடந்த இந்தப் பகுதியில் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், தவஞானி, சிதம்பர சுவாமிகள்

திருப்போரூரில் நூதன மரத்தேர் வெள்ளோட்ட விழா

திருப்போரூர் அருள்மிகு கந்தசாமித் திருக்கோயிலில் நூதன மரத்தேர் வெள்ளோட்ட விழா 9.3.06 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. நம் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திருமிகு **த. பிச்சாண்டி, இ.ஆ.ப.,** அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் மு. கண்ணபிரான், பி.எஸ்.ஸி., அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்.

இதழின் உள்ளே ....

1. திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் திருத்தேரோட்ட விழா 2
2. நோய்தீர்க்கும் அதிசய தலமரம் - மா.குணசேகரன் 4
3. மயிலை திருவிழாக்கள் அன்றும், இன்றும் - பருத்தியூர் டாக்டர் கே.சந்தானராமன் 5
4. காலச்சுவடுகள்: தென்காசி ஆலயம் கண்ட பராக்கிரம பாண்டியன் - நிறைமதி பி.எல்., 8
5. அருள்மிகு சௌடாம்பிகையம்மன் - அருள் செல்வி 9
6. உடும்பும் சிவபக்தியும் - முனைவர் டி.செல்வராசு 10
7. புத்திபலம், மனோபலம், ஆத்மபலம் - "எழுத்துச்சித்தர்" பாலகுமாரன் 13
8. மதுரை அரசாளும் மீனாட்சியே - புலவர் சோமசுந்தரம் 17
9. மகாபாரதம் - முனைவர் த.அமிர்தலிங்கம் 20
10. திருவிளையாடல் புராணம் - இரா.அரங்கசாமி 22
11. கேள்வி - பதில் 25
12. திருமந்திர உபதேசம் - "திருமந்திரச்செல்வர்" டி.வி.வெங்கட்ராமன் இ.ஆ.ப.(ஓய்வு) 27
13. தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - உரோமரிஷி - முனைவர் இரா.செல்வக்கணபதி 29
14. விதியை வெல்லும் தேவாரப் பதிகங்கள் (நீதிக்கதை) - டாக்டர் தி. பாலசுப்பிரமணியம் 31
15. செங்கோலுடன் காட்சிதரும் குணசீலம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் - ஏ.கிருஷ்ணன் 33
16. கருடாழ்வார் அம்சமான மதுரகவி ஆழ்வார் - திருமதி இந்திரா ஆரா அமுதன் 35
17. பார் போற்றும் பண்ணாரி மாரியம்மன் 37
18. திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் கோவில் - இராஜ்குமார் 39

என்பவரால் இத்திருக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் அருகிலேயே இருந்த ஓடையையும் திருக்குளமாகத் திருத்தம் செய்து கொடுத்தவரும் இவரே. திருக்கோயில் அருகிலேயே கண்ணுவப் பேட்டை என்ற இடத்தில் ஒரு புதிய திருமடம் அமைத்துத் திருப்போரூர் ஸ்ரீகந்தசுவாமி திருக்கோயில் பூசைகளை சிதம்பர சுவாமிகள் கவனித்து வந்தார்கள்.

கற்கோயில் திருப்பணி முடித்த தவஞானி சிதம்பர சுவாமிகள், ''திருப்போரூர் சந்நிதிமுறை'' என்று அழைக்கப்படும் 726 திருப்பாடல்களை, ஸ்ரீகந்தசுவாமி பெருமான் மீது பாடியுள்ளார்.

ஸ்ரீவள்ளி, தெய்வானை உடனுறைபவராய் உள்ள ஸ்ரீகந்தசுவாமி மூலவர். மூவரும் சுயம்பு வடிவினர். செதுக்காத திருமேனியராய் முருகப் பெருமான் இங்கு எழுந்தருளியிருப்பது தனிச் சிறப்புடையதாகும். மூவருக்கு இன்றும் அபிஷேகம் எதுவும் நடைபெறுவதில்லை. புனுகுச்சட்டம் மட்டுமே சாத்தப்படுகிறது.

கிழக்கு முகமாக உள்ள மூலவர் சந்நிதியில் அபிஷேக ஆராதனை செய்யப்படுவதற்காகக் கூடுதலாக வள்ளி, தெய்வானை முருகன் சிலைகள் சிறிய வடிவில் ஒரு பீடத்தில் அமைக்கப் பட்டுள்ளது. அபிஷேக ஆராதனைகளுக்காகவே, இச்சிறு மூர்த்தங்கள் ஆதிகுரு சிதம்பர சுவாமிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஸ்ரீசக்கர ஸ்தாபனம் எனப்படும் திருச்சக்கரம் ஒன்றும், தவஞானி சிதம்பர சுவாமிகளால் நிறுவப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. திருப்போரூரில் இந்தச் சக்கரத்திற்குச் செய்யப்படும் வழிபாடு சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தத்தால் சிறப்புப் பெறும் இத்தலத்திற்கு யுத்தபுரி என்கிற ஒரு பெயரும் உண்டு. கடலிலே போர் புரிந்த இடம் திருச்செந்தூர் என்றும், நிலத்திலே போர் புரிந்த இடம் திருப்பரங்குன்றம் என்றும், விண்ணிலே போர் புரிந்த இடம் இத்திருப்போரூர் என்றும் புராண வாயிலாகவே தெரியவருகிறது. எனவேதான் இத்தலம் யுத்தபுரி, சமரபுரி, போரியூர், செருவூர், போரிநகர், சமரப்பதி, போரி, சமதளப்பூர் எனப் பல பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்போரூர் என்றதும் நமக்கு நினைவிற்கு வருவது தவஞானி சிதம்பர சுவாமிகளும், அவர் கட்டுவித்த கற்கோயிலாம் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலும், அவர் வெட்டுவித்த வள்ளையார் ஓடை எனப்படும் வற்றாத திருக்குளமுமேயாகும்.

இவர் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு



மதுரையில் பிறந்து வளர்ந்து புலமை மிக்கவராய் சிதம்பரக் கவிராசராக விளங்கி மதுரை மீனாட்சி அம்மன் மீது மீனாட்சியம்மை கலிவெண்பா எனும் நூலை இயற்றியுள்ளார். விருத்தாசலம் என்று அழைக்கப் படும் திருமுது குன்றத்தில் உள்ள குமாரதேவ மடத்தின் மடாதிபதியாகிய குமாரதேவரால் இவர் ஆதரிக்கப்பட்டு வீரசைவ நெறியில் ஈடுபடுத்தப் பட்டார். இவர் தம்முடைய குருவின் அருளொடு வடக்கு நோக்கிப் பயணித்து, பனங்காடாக விளங்கிய திருப்போரூர் எனும் இத்தலத்திற்கு வருகைப் புரிந்தார்.

பிரணவ மலைச் சாரலில், வள்ளையார் ஓடையின் அருகில் திருக்கோயில் அமைக்கும் திருப்பணியைத் துவங்கி, இத்திருக்கோயிலைக் கட்டி முடித்து அருகிலேயே ஓடிய ஓடையை, திருக்குளமாக வடிவம் கொடுத்து முடித்து, பூசைமுறைகளையும் ஏற்படுத்திக் கவனித்து வரலானார்.

நோய் தீர்க்கும் மருந்தாய் பயன்படும் அதிசய தலமரம் - களர் உகாய்

மா.குணசேகரன், தலமர ஆய்வாளர்,

திருஞானசம்பந்தரால் அன்புடன் அப்பர் என அழைக்கப்பட்ட திருநாவுக்கரசர் அவதாரத்தலம் கடலூர் மாவட்டம் திருவாமூர் அருள்மிகு பசுபதீசுவரர் திருக்கோவிலுக்கு அருகில் உள்ளது. இங்கு களர் உகாய் எனும் தலமரம் உள்ளது. இம்மரம் தமிழகத்தின் வேறு எந்த திருக்கோவில்களிலும் தலமரமாக இல்லை. சைவத்தில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் வழிபடப்படுகிறது, இதில் தலச்சிறப்பு முக்கியமாய் தலமரத்தை ஒட்டியே அமைகிறது.

''அதிசய தலமரம்'' என்ற தலைப்[illegible] ஆகஸ்ட் 2004 திருக்கோயில் இதழில் வந்த க[illegible]க்குச் சில சந்தேகங்களுக்கு விளக்கம் தேடி ஆராய்ந்ததில் பல ஆச்சர்யமூட்டும் தகவல்கள் கிடைத்தன.

இந்த மரத்தின் தாவரவியல் பெயர் 'சால்வடோரா பெர்சிகா' (Salvadora percica L.var.wightiana) எனப்படும். இது சால்வடோரேசி எனும் தாவரக் குடும்பத்தை சேர்ந்தது.

பெரும்பாலும் பெரிய மரங்களைத் தொற்றி ஏறும் கொடி அல்லது பெரிய குத்துச் செடியாக வளரும் தன்மையுடையது இந்தத் தாவரம். ஆனால் இவ்வளவு பெரிய மரம் போன்ற அமைப்பு (GBH 654 cm) சுற்றளவு 654 செ.மீ, உயரம் 8மீ. காடுகளில் இல்லை. இது வயது முதிர்ச்சின் காரணமாக இருக்கலாம்.

அப்பர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் அவர் பிறப்பிற்கு முந்தய காலத்திலிருந்து வாழும் மரம் இது, எனவே இதன் வயது சுமார் ஆயிரத்தி நானூறு ஆண்டுகள் இருக்கும்.

இவ்வகை மரத்தின் இலை, பூ, பழம், விதைகளில் காணப்படும் இயற்கை சேர்மம், குளுக்கோசடு, பல வகை வேதிப்பொருள்கள் மற்றும் எண்ணெய் இவை பலவகை நோய் தீர்க்கும் மருந்தாய்ப் பயன்படுகிறது.

இவரே திருக்கோயில் அருகே கண்ணுவர் பேட்டை என்கிற இடத்தில் வீர சைவமடம் ஒன்றையும் நிறுவி, மக்களின் ஆன்மீகத் தேவைகளை உணர்ந்து நிறைவு செய்து வந்தார். கி.பி. 1659ம் ஆண்டில் இவர் முக்தி அடைந்தார். தமிழகத்தில் அமைந்துள்ள வீர சைவ மடங்களில் இதுவும் ஒன்றாக அன்றுமுதல் இன்றுவரை விளங்கி, தமிழ்ப் பண்பாட்டையும்தமிழ்நாட்டு மக்கள் தம் வாழ்வு நெறியையும், மேன்மைப்படுத்தி வளப்படுத்தி வருகின்றது. சுமார் 400 ஆண்டுகளாக 13 மடாதிபதிகள் இம்மடத்தில் இருந்து அருளாட்சி செய்து திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயிலையும் பராமரித்து வந்துள்ளார்கள்.

தற்போது இம்மடத்தின், 14வது மடாதிபதியாக தவத்திரு சிதம்பரசிவஞான சுவாமிகள் அருளாட்சி புரிந்து வருகிறார்கள். ஆதிகுருவாகிய தவஞானி சிதம்பர சுவாமிகள், திருப்போரூர் கந்தசுவாமி பெருமான் மீது **''திருப்போரூர் சந்நிதி முறை''** எனும் நூலை இயற்றியுள்ளார்.

திருப்போரூர் முருகன் மீது சிற்றிலக்கியப் பாடல்கள் ஏராளமாக வந்துள்ளன. இத்திருத்தலம், அருணகிரிநாதர் சிதம்பர சுவாமிகள், வள்ளலார் பெருமான், பாம்பன் சுவாமிகள், சாந்தலிங்க சுவாமிகள் போன்ற அருட்கவிஞர்களால் பாடப் பெற்றுள்ளது. ''சகல வேதமுமே தொழு சமரமாபுரி'' - என்றும் ''போரி மாநகர் மேவிய பெருமானே'' - என்றும் அருணகிரிநாதரால் தம் திருப்புகழில் இத்திருப்போரூர்ப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

''இல்லறத்தான் அல்லேன் இயற்கை துறவியல்லேன்
நல்லறத்து ஞானி அல்லேன் நாயினேன் சொல்லறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்த திருப்போரூரா
என்றே நான் ஈடேறுவேன்''.

என்று தவஞானி சிதம்பர சுவாமிகள் தமது திருப்போரூர் சந்நிதி முறையில் இப்பெருமானை உள்ளம் உருக வேண்டுகிறார்.

''திருப்போரூர் அம்மானே'' - என ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் தாம் அருளிய **''திருப்போரூர் பதிகம்''** என்னும் பாடலில் இத்தலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இத்திருக்கோயிலுக்கென ரூ. 20 லட்சம் செலவில் கலையழகு மிக்க மரத்தேர் அண்மையில் அமைக்கப்பட்டு, வெள்ளோட்ட விழா 9.3.2006 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளது. இத்திருத்தேர் வெள்ளோட்ட விழாவில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆணையாளர் **திருமிகு த.பிச்சாண்டி, இ.ஆ.ப.,** அவர்கள் கலந்து கொணடு சிறப்பித்தார்கள்.

மயிலை திருவிழாக்கள் அன்றும் இன்றும்

பருத்தியூர் டாக்டர் K.சந்தானராமன், M.A., D.Litt., Ph.D.,



மயிலாப்பூரில் திருஞானசம்பந்தரின் காலத்துக்கு முன்பிருந்தே திருவிழாக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. எலும்பு பெண்ணாகப் பாடிய சம்பந்தர் பதிகத்தின் ஏழாவது பாடலில், **''மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலை''** என்று குறிப்பிடுவதிலிருந்து இதனை அறியலாம். அத்துடன், **'மடநல்லார்'** என்ற குறிப்பிலிருந்து மகளிர், திருவிழாக்களில் மிகுந்த ஆர்வம் காட்டி வருவதும் தெளிவாகிறது.

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி ஆகிய முதல் நான்கு மாதங்களில் முறையே அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் திருநட்சத்திரங்கள் திருமயிலாப்பூரில் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. ஆகவே, மயிலைத் திருவிழாக்கள் அடியார் திரு நட்சத்திரங்களுடன் தொடங்குகின்றன. பங்குனி உத்திரத்தில் இறைவன் திருக்கல்யாணப் பெருவிழாவுடன் நிறைவு பெறுகின்றன. இது ஒரு சிறப்பான அமைப்பாகும்.

திருஞானசம்பந்தர் மயிலை திருவிழாக்களைப் புரட்டாசி அட்டிட்டலில் தொடங்கி, ஆவணி பெருஞ்சாந்தி விழாவுடன் நிறைவு செய்கிறார், சம்பந்தர் புரட்டாசி மாதத்தில் மயிலைக்கு எழுந்தருளியது இவ்வமைப்புக்குக் காரணமாக இருக்கலாம். அல்லது அட்டிட்டல் என்ற அன்னதானத் திருவிழாவுக்கு அளித்த முக்கியத்துவமாகவும் இருக்கலாம்.

மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை

கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சாமமர்ங்கான்

களர் உகாயின் மறுபெயர் களரிவாகை

திருவாமூரில் களரி வாகை என்ற ஒரு பழமையான விருட்சம் உள்ளது. இன்றைக்கு அதுதான் தலவிருட்சமாக அமைந்துள்ளது. அதன் அடியைப் பார்த்தாலே தெரியும் அதன் பழமையும், புராதனப் பெருமையும். களரி என்றால் கொடி. வாகை என்பது மரம். அடிப்பாகம் மரம் போன்ற அமைப்புக் கொண்டது. கிளையில் உள்ள காம்புத்தண்டுகள் கொடி போன்ற அமைப்பு கொண்டது. இதன் இலை நன்மருந்து. இதனைச் சுவைத்தால் பல சுவைகளை உணரலாம். இனிப்பு, கசப்பு, விறுவிறுப்பு, காரம் என இது பல்சுவைதரும். களர்டகாய் என்றும் இம்மரத்தினைக் கூறுவர். களர் என்பது களர்நிலம். களர்நிலத்தில் வளரும் (உகாய்) வாகைமரம் என்ற பெயர்க்காரணமும் சொல்லப்படுகிறது. இதன் பழம் செந்நிறம். மிளகளவு அது இருக்கும்.



இவ்விருட்சத்தினை சித்திரை சதயம் (திருநாவுக்கரசு பெருமான் முக்தியடைந்தது) திருநாளில் குருபூஜை செய்து வழிபட்டு வலம் வருகின்றனர். இவ்விருட்சத்தினைத் திருநாவுக்கரசு சுவாமிகளாகவே மக்கள் எண்ணி வழிபடுகின்றனர்.

- டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்
''நாவுக்கரசரின் நற்றமிழ் வாழ்வு'' என்ற நூலிலிருந்து

ஒட்டிட்ட பண்பின் உருத்திரப் பல்கணத்தார்க்கு

அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்?

அனைத்து நிலப்பகுதிகளையும் பாடுவதில் வல்லவர் சம்பந்தர். கடலைச் சார்ந்த நெய்தல் பகுதியான மயிலையில் புன்னை மரங்கள் நிறைந்திருந்த செய்தியைக் கூறுகிறார். இன்றும் புன்னை மரமே மயிலையின் தலவிருட்சமாக விளங்குகிறது. இறைநெறியில் ஒட்டிய பண்புடன் அதாவது, அத்துவிதக் கலப்புடன் திகழும் ஈசனடியார்களுக்குத் திருவமுது படைக்கும் திருவிழாவே அட்டிட்டல் ஆகும்.

ஐப்பசி திருவோணத்தில் நடைபெற்ற திருவோணத் திருவிழாவைச் சம்பந்தர் குறிப்பிடுகிறார். இதனைத் திருமாலே முன்னின்று நடத்தியதாகத் தலவரலாறு உரைக்கிறது.

கார்த்திகை மாதத்தில் **''தையலார் கொண்டாடும் விளக்கீடு''** விழா நடைபெற்ற சிறப்பைச் சம்பந்தர் போற்றுகிறார். பெண்கள் இன்றும் தீபத்திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். தற்காலத்தில் வைகாசிப் பௌர்ணமியை ஒட்டி, இலட்சதீப விழா நடைபெறுகிறது. எண்ணெய் விளக்குகளுடன் மின்விளக்கு அலங்காரமும் இடம் பெறுகிறது.

மார்கழி மாதத்தில் அன்று தொட்டு இன்று வரை திருவாதிரைத் திருநாள் நடைபெறுகிறது. ஆருத்ரா தரிசனத்துக்கு முன்னால் பத்து நாட்கள் திருவெம்பாவை விழா நடைபெறுகிறது. பத்து நாட்களிலும் திருவெம்பாவை விளக்கச் சொற்பொழிவுகள் இடம் பெறுகின்றன. ஆருத்ராவுக்கு முதல் நாள் இரவு, கூத்தப் பெருமானுக்குச் சிறப்பு அபிஷேகம் நடைபெறும். மார்கழிமாதப் பௌர்ணமி நாளில் ஆருத்ரா தரிசனம் நிகழும். கடற்கரைத் திருத்தலங்களில், திருவிழாக்கள் பௌர்ணமியில் நடத்துதல் ஆகம மரபாகும்.

தைப்பூசத் திருவிழாவில் அடியார்களுக்கு, **''நெய்பூசு தெண்புழுங்கல்''** வழங்கப் பட்டதாகச் சம்பந்தர் கூறுகிறார். அதாவது, நெய்யால் மறைக்கப்பட்ட தெள்ளிய சோறு வழங்கப்பட்டது. பொதுவாக, திருமால் கோயில்களில் நெய் கலந்த பிரசாதங்கள் வழங்கப்படுவதை நாம் அறிவோம். **''பாற்சோறு முழங்கை வழிவார மூட நெய்பெய்து''** என்ற ஆண்டாள் திருப்பாவை மிகவும் பிரபலமானது. **''கூடாரை வெல்லும்..''** என்று தொடங்கும் அப்பாசுரத்தை, 'சக்கரைப் பொங்கல் பாட்டு' என்றே கூறுவதுண்டு. மயிலாப்பூர் கபாலீச்சரத்தில் அத்தகைய நெய்கலந்த நிவேதனம் வழங்கப்பட்டது என்பது ஒரு சுவையான செய்தியாகும்.

தற்காலத்தில் தைப்பூசத்திலிருந்து மூன்று நாட்களுக்குத் தெப்பத் திருவிழா நடைபெறுகிறது. கடந்த சில ஆண்டுகளாகத் திருக்குளத்தில் தண்ணீர் இல்லாமல் இருந்தது. அப்போதும் 'நிலைத்தெப்ப' விழாவாக நடைபெற்றது. இந்த ஆண்டுக் குளத்தில் தண்ணீர் நிறைந்துள்ளது. எனவே, தெப்பம் நீரில் மிதந்து உலா வந்தது. முதல் நாள் கற்பகாம்பாள் உடனுறை கபாலீச்சுவரர் தெப்பத்தில் உலா வருவார். அடுத்த இரண்டு நாட்களுக்கு வள்ளி தெய்வயானை உடனுறை சிங்காரவேலர் தெப்பத்தில் உலாவருவார்.

மாசி மகத்தில் மயிலையில் கடலாட்டுத் திருவிழா நடந்ததாகச் சம்பந்தர் குறிப்பிடுகிறார். தற்காலத்திலும் மாசிமகத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. கபாலீச்சுவரருடன் மயிலையில் உள்ள மற்ற சிவாலய மூர்த்தங்களும் கடற்கரைக்கு எழுந்தருளுகின்றனர். அவ்விழாவில், நடேசன் சாலையிலுள்ள தீர்த்தபாலீச்சுவரர் முதலில் தீர்த்தம் பாலிக்கிறார். அதனாலேயே அப்பெருமானை, தீர்த்தபாலீச்சுவரர் என அழைக்கின்றனர்.

பங்குனி உத்திர நாள் என்று சம்பந்தர் குறிப்பிடும் பங்குனிப் பெருவிழாவே மயிலையின் ஆண்டுப் பெருவிழாவாகும்.

ஈசனுடன் பதினெண் கணங்களுக்கும் சிறப்பு செய்யும் திருவிழாவைச் சம்பந்தர் **'அட்டமி நாள்'** என்று குறிப்பிட்டுள்ளார். தற்காலத்தில் இது சித்திரா பௌர்ணமி விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

வைகாசி மாதத்தில் **'பொற்றாப்பு விழா'** நடந்த செய்தியைச் சம்பந்தர் கூறுகிறார். பொன்+தாம்பு=பொற்றாப்பு. அதாவது, பொன்னூசல் திருவிழாவே அக்காலத்தில் பொற்றாப்பு என. அழைக்கப்பட்டது. இவ்விழா, இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களில் **'பெருஞ்சாந்தி'** நடைபெற்றதாகச் சம்பந்தர் கூறுகிறார். தற்காலத்தில் இது 'பவித்ரோத்ஸவம்' என்ற பெயரில் நடைபெறுகிறது. பெருஞ்சாந்தி என்பது குடமுழுக்கு என்று கூறுவோருமுளர். ஆண்டு தோறும் குடமுழுக்குச் செய்ய இயலாது என்பதனால், அது பவித்ரோத்ஸவமே என ''சோமசம்பு பத்ததி'' என்ற நூலை ஆதாரங்காட்டி விளக்குகிறது தருமையாதீனப் பதிப்பு.

தற்காலத்தில் 'மயிலை-பங்குனிப் பெருவிழா,' **'அறுபத்துமூவர் விழா'** என்றே அனைவராலும் அறியப்படுகிறது.

இவ்விழா பங்குனி மாதம் பௌர்ணமியில் திருக்கல்யாணம் நடைபெறும் வகையில் தொடங்குகிறது. அதாவது பங்குனி வளர்பிறை

சஷ்டியில் கொடியேற்றத்துடன் தொடங்கும். இரு வேளைகளிலும் ஐந்திருமேனிகள் (பஞ்சமூர்த்தி) உலாநடைபெறும்.

மூன்றாவது நாள் விழாவில் காலை அதிகாரநந்தி மீது கபாலீச்சுவரர் பவனிவருவார். மனிதராகப் பிறந்து, சிவபுண்ணியச் செயல்களால் ஈசனுலகை அடைந்து, அங்கு நந்தியாக அதிகாரம் செலுத்தும் பதவியைப் பெற்றார் ஒருவர். அவரே அதிகாரநந்தி என்று அழைக்கப்பட்டார். ஆதலால் அவர் நந்தியின் முகமும், மனித உடலும் பெற்றுத் திகழ்பவர். அதிகாரநந்தி வாகன சேவை பெரும்பாலும் தொண்டை மண்டலப் பகுதியில் உள்ள திருக்கோயில்களில் தான் நடைபெறுகிறது.

ஐந்தாம் நாள் இரவு வெள்ளி விடைக்காட்சி நடைபெறுகிறது. கற்பகாம்பாளுக்குத் தனியே தங்க ரிஷபவாகனம் உள்ளது. சண்டேஸ்வரரும் சிறிய வெள்ளிவிடையில் எழுந்தருளுவார். கணபதி, மூஷிக வாகனத்திலும், முருகன் மயில் வாகனத்திலும் உலா வருவார்கள். அன்று கரகம், காவடி போன்ற கிராமியக் கலைநிகழ்ச்சிகளும், வாணவேடிக்கையும் இடம்பெறும்.

ஏழாவது நாள் திருத்தேர் உலா நடைபெறும். எட்டாவது நாள் மாலையில்தான் கபாலீச்சுரர் அறுபத்து மூன்று நாயன்மார்களுடன் விமானத்தில் பவனி வருவார். அறுபத்துமூவர் விழாவைக் காண இலட்சக்கணக்கான மக்கள் வருகின்றனர். ஆங்காங்கே அன்னதானக் கூடங்களும், தண்ணீர்ப் பந்தல்களும் அமைக்கப்படுகின்றன.

ஒன்பதாம் நாள் மாலையில் கபாலீச்சுரர் இரவலர்(பிட்சாடனர்) கோலத்தில் உலா வருவார். தாருகாவனத்தில் ஈசன் இரவலராகச் சென்று முனிவர்களுக்கும், அவர்களுடைய பத்தினிகளுக்கும் பாடம் புகட்டிய ஐதீக விழாவாக, பிட்சாடனர்உலாநடைபெறுகிறது.

பத்தாம் நாள் இரவு திருக்கல்யாணம் நடைபெற்றவுடன் இறைவன் கயிலாய வாகனத்தில் பவனி வருவார். இராவணன் கயிலையைப் பெயர்த்தெடுக்கும் காட்சியை நினைவுபடுத்தும் வகையில் அந்த வாகனம் அமைந்திருக்கும். கயிலையில் அம்பிகையுடன் ஈசன் அமர்ந்திருக்க, இராவணன் மலையின் கீழே அழுந்தியிருப்பதைக் காணலாம். இராவணன் ஒன்பது தலைகள் மற்றும் பத்தொன்பது கரங்களுடன் இருக்கும் அரிய காட்சியை அந்த வாகனத்தில் காணலாம். ஏனெனில், இராவணன் தனது ஒருதலையை வீணைக்குக் குடமாகவும், இரு கரத்தை வீணையின் தண்டாகவும் அமைத்தே சாமகானம் பாடி இறைவனின் அருளைப் பெற முயற்சித்தான்.

தொடர்ந்து பத்து நாட்களுக்கு விடையாற்றிக் கலைவிழா நடைபெறும். இசைஅரங்குகளும், சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

தற்காலத்தில் வசந்தோற்சவமும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது. மாதமிருமுறை நடைபெறும் காபாலீச்சுரப் பிரதோஷ விழா மிகவும் பிரபலமானது.

ஆவணியில் பன்னிரு திருமுறை விழாவும் கபாலீச்சரத்தின் சிறப்பு விழாக்களில் ஒன்றாகும். பன்னிரெண்டு நாட்களுக்குத் திருமுறை பாராயணமும், திருமுறை விளக்கச் சொற்பொழிவுகளும் நடைபெறும். பதின்மூன்றாவது நாள் இடம்பெறும் திருமுறை காண்டல் மற்றும் **திருமுறைகள் யானை மீது உலா வருதல்** போன்ற நிகழ்ச்சிகளும் குறிப்பிடத்தக்கவை.

ஆயிரம் ஆண்டுகள் பாரம்பரியம் உடைய திருவிழாக்கள் இன்றளவும் மயிலையில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பக்தர்கள் இவ்விழாக்களைக் கண்டுப் பயன் அடைவார்களாக!

வாசகர் எண்ணங்கள்

''திருக்கோயில்'' இதழில் அரிய பல தலவரலாறுகள் இடம் பெறுவதால் ''திருக்கோயில்'' இதழ் படித்தாலே திருத்தல யாத்திரை புரிந்து வந்த பரவசநிலை உண்டாகி விடுகின்றது.

- ஆர். இரமேஷ், திருநெல்வேலி

சேலத்தில் மகிமை பெற்று விளங்கும் குமரகிரி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கட்டுரை மிகவும் அருமை, வீதியில் பாத்திரம் விற்று வாழ்க்கையைத் தொடங்கிய ஒரு பக்தர், குமரகிரி முருகர் அருளால் கோடீஸ்வரர் ஆன நிகழ்ச்சி கலியுக அற்புதம். கலியுக வரதன், கண்கண்ட தெய்வம் சேலம் அருள்மிகு குமரகிரி முருகன் என்பதைப் படித்தபோது எப்போது சேலம் செல்வோம், குமரகிரி முருகரைத் தரிசிப்போம் என்ற ஆர்வமே நெஞ்சில் பொங்கித்ததும்புகின்றது.

- அழகர்சாமி, திருவரங்கம்

சொந்த வீடு குடிபுக வரம் அருளும் ''சிறுவாபுரி முருகன்'' கட்டுரையில் கண்டுள்ள செய்திகள் யாவும் உண்மையிலும் உண்மை. சொந்த வீடு வாங்கிக் குடிபுக வேண்டும் என்ற எங்கள் நீண்டகால ஆசைஇந்த ஆண்டு ஜனவரியில் சிறுவாபுரி முருகர் ஆலயம் சென்று வந்த உடனே நிறைவேறி விட்டது என்ற நல்ல செய்தியைத் ''திருக்கோயில்'' வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

- சரஸ்வதி, சமூகசேவகி, சென்னை - 06

எழுத்துச்சித்தர் பாலகுமாரன் அவர்களின் ''புத்திபலம், மனோபலம், ஆத்மபலம்'' கட்டுரை எளிய இனிய ஆற்றொழுக்கு நடையில் அமைந்து, மிகச்சிறந்த மனத்தெளிவை உண்டாக்குகின்றது.

- ஆ. சண்முகம், விழுப்புரம்

காலச்சுவடுகள்

தென்காசி ஆலயம் கண்ட பராக்கிரம பாண்டியன்

நெல்லை மாவட்டம் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி நடத்தி வந்த பாண்டியர்கள் **''தென்காசிப் பாண்டியர்கள்''** என்று சிறப்பிக்கப்பட்டார்கள்.

இவர்களுள் மிகவும் புகழ் பெற்றவன் பராக்கிரம பாண்டியன்.

வீரமும் பக்தியும் ஒருங்கே நிரம்பப் பெற்ற இப்பராக்கிரம பாண்டியனை **''மதுரையை மீட்டான்''** எனவும், இலங்கை மீது படைஎடுத்துச் சென்று சிங்கை, அனுராதபுரம் ஆகிய நகரங்களைக் கைப் பற்றினான் எனவும் வரலாறுகள் தெரிவிக்கின்றன.

சிறந்த சிவபக்தனான பராக்கிரம பாண்டியனின் கனவில் ஒருநாள் காசி விசுவநாதர் தோன்றிக் **''காசியில் என் கோவில் சிதைந்து கிடக்கிறது. எனவே தென்காசி என விளங்குமாறு புதிய கோயில் ஒன்று நீகட்டுவாயாக''** என்று ஆணை பிறப்பித்தார்.

இறைவரின் ஆணைக்கு இணங்க சிற்றாறு என்று சொல்லப்படும் ஆற்றங்கரையில் காசி விசுவநாதர் கோவிலைப் பராக்கிரம பாண்டியன் கி.பி. 1429ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி 17 ஆண்டுகளில் அதாவது கி.பி. 1446இல் இவ்வாலயத்தைக் கட்டி முடித்ததாக வரலாறு கூறுகின்றது.

இக்கோயிலைக் கட்டிய காரணத்தால் **''காசி கண்ட பாண்டியன்''** என்று தமிழக வரலாறு பராக்கிரம பாண்டியனைச் சிறப்பித்துப் போற்றுகின்றது.

சிற்பப் பேரெழில் மிக்க இவ்வாலயத்தைக் கலைச் செல்வம் என்றே போற்றிடல் வேண்டும். நடராசர், காளிதேவி, ஊர்த்துவதாண்டவர், ரதி, மன்மதன், தமிழன்னை முதலிய கலையழகில் சிறந்த சிலைகளை இன்றும் இக்கோயிலில் காணலாம்.

பிற்காலப் பாண்டியர்கள் இக்கோவிலில் வைத்தே முடிசூடிக் கொண்டபடியால் பாண்டியர் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது இக்கோயில் என்று கூறலாம்.

பராக்கிரம பாண்டியன் மிக்க தமிழறிவும் கொண்டவன். இவன், தான் எழுதிக் கல்வெட்டில் பொறித்துச் சென்றுள்ள நான்கு பாடல்கள் திருக்கோயில்கள் பால் நம் முன்னோர்கள் எத்தகைய மதிப்பும், ஈடுபாடும் கொண்டு கண்ணென அவற்றைப் போற்றிப் பராமரிக்க முற்பட்டார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

தமிழ்நாட்டில் எத்தனையோ மன்னர்கள் கோவில்கள் கட்டியுள்ளார்கள். ஆனால் தானே பாடல்கள் பாடி அவற்றைத் தான் கட்டிய கோவிலில் கல்வெட்டாகப் பொறித்து வைத்த ஒரே மன்னன் பராக்கிரம பாண்டிய மன்னனே.

பராக்கிரம பாண்டியனின் போற்றுதலுக்குரிய அக்கல்வெட்டுப் பாடல்கள் பின்வருமாறு:

''மனத்தால் வகுக்கவும் எட்டாத கோயில் வகுக்க முன் நின்று
எனைத்தான் பணி கொண்ட நாதன் தென்காசியை என்றும் மண்மேல்
நினைத்து ஆதரஞ்செய்து தங்காவல் பூண்ட நிருபர்பதம்
தனைத் தாழ்ந்திறைஞ்சித் தலை மீதில் யானும் தரித்தனனே''

''ஆராயினும் இந்தத் தென்காசி மேவும் பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்து அதனை
நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன்
பாரோர் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே''

''அரிகேசரிமன் பராக்கிரம மாறன் அரன் அருளால்
பரிசேர் பொழில் அடி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத்தேன்; அன்பு பூண்டு இதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார் பொற்பாதம் என்சென்னியதே''

''சாத்திரம் பார்த்திங்குயான் கண்ட பூசைகள் தாம் நடாத்தி
ஏத்தி அன்பால் விசுவநாதன் பொற் கோயில் என்றும் புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்கிரம மாறன் பரிவுடன்நம்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கும் அடைக்கலம் கூறினனே''

தான் கட்டிய திருக்கோவிலுக்குக் காவலாக இருப்போர் பாதங்களைத் தம் தலைமேல் கொண்டு



போற்றுவதாகப் பராக்கிரம பாண்டியன் பாடியுள்ள அருமையை நாம் எண்ணி எண்ணி வியத்தல் வேண்டும்.

பராக்கிரம பாண்டியன் ஒன்பது நிலைக் கோபுரமாக இராசகோபுரத்தை அமைக்கவும் திருப்பணிகள் மேற்கொண்டு, அப்பணி அவன் தம்பி குலசேகர பாண்டியன் காலத்தில் நிறைவு பெற்றுள்ளது.

50 ஆண்டுக் காலங்களில் உருவாக்கப் பட்ட இராசகோபுரம் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் சேதம் ஆகி மொட்டைக்கோபுரமாகத் திகழ்ந்து வந்தது.

பல்லாண்டுக் காலமாக யாரும் திருப்பணி மேற் கொள்ள வராத நிலையில் **திருப்பணிச் செம்மல் திருமிகு சிவந்தி ஆதித்தன்** அவர்களின் தலைமையில் அமைந்த திருப்பணிக்குழு மொட்டைக் கோபுரத்தை மீண்டும் ஒன்பது நிலை இராசகோபுரமாக உயர்த்த 18.11.1984 அன்று திருப்பணி தொடங்கப்பெற்று 6 ஆண்டுகளில் வேலைகள் முடிந்து 25.6.1990 அன்று திருக்குட நீராட்டுவிழா மகத்தான முறையில் நடந்தேறி பராக்கிரம பாண்டியனின் கல்லெழுத்து உயிர்பெற்றுச்சிறந்தது.

1990 ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் மகா கும்பாபிஷேகம் நடத்த டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் அவர்களைத் திருப்பணிக்குழுத் தலைவராக தமிழக அரசு 9.6.2003ல் நியமித்தது.

தென்காசி அருள்மிகு காசி விசுவநாத சுவாமி இராஜகோபுரம் மீண்டும் திருப்பணி செய்யப்பட்டு, புதுவர்ணம் தீட்டப்பட்டு இராஜகோபுரமும் சன்னதி விமானங்களும் தற்போது ஜொலிக்கின்றன. இத்திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் 17.3.06 அன்று மதியம் 12.01 மணிக்கு மேல் 12.25 மணிக்குள் மிகச் சிறப்பாக நிகழ்ந்துள்ளது. தென்காசி நகரே மீண்டும் புத்தெழுச்சி பெற்றுள்ளது.

அருள்மிகு சௌடாம்பிகையம்மன்

அருள் செல்வி

தேவர்கள் மற்றும் மனிதர்களுக்கு ஆடைநெய்து தர சிவபெருமானால் நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவிக்கப் பெற்றவர் தேவல முனிவர்.

''தேவலரே! ஆடைநெய்யும் பணிபுரிய பூலோகம் செல்க, அதற்குமுன் திருமாலிடம் சென்று அவரது உந்திக் கமலத்திலுள்ள தாமரை நூலைப் பெற்றுச் செல்க'' என்று திருவருள் புரிந்தார் சிவபெருமான்.

பார்வதி தேவியும் ''மகனே ! நீநினைக்கும் போதெல்லாம் நான் வந்து உனக்கு உற்ற துணையாய் உன்னைக் காப்பேன்'' என்று வரம் தந்தருளினார்.

தேவல முனிவரும் திருமாலை வணங்கி அவரிடம் உந்திக் கமல நூலைப் பெற்றுப் பூலோகம் கிளம்பினார்.

ஆடை நெய்யும் ரகசியம் அபகரிக்க முயன்ற அரக்கர்கள் தேவல முனிவரைச் சூழ்ந்து கொண்டு அவரைப் பல ஆயுதங்கள் கொண்டு தாக்க முற்பட்டனர். நூல் பறிபோகும் நிலையில் ''அம்மா! பராசக்தி காப்பாற்று'' என்று பராசக்தியை நோக்கித் துதித்தார் தேவல முனிவர்.

அன்னை பராசக்தி சிம்ம வாகனத்தின் மீதுதோன்றினார். அவரது கண்கள் சிவந்தன. அவரது நான்கு திருக்கரங்களிலும் சூலம், சக்கரம், தண்டம், வாள் ஆகிய ஆயுதங்கள் ஒளியுடன் திகழ்ந்தன.

அம்பிகையின் திருமுடியின் மேல் கோடி சூரியப்பிரகாசமுள்ள சூடாமணி என்னும் ரத்தினம் மிளிரக் கீரிடம் பேரொளி வீசியது.



அந்தச் சூடாமணி காரணமாக அம்பிகைக்குச் சூடாம்பிகை, சூடாநாயகி, சௌடேஸ்வரி, சௌடாம்பிகை எனும் பெயர்கள் உண்டாயின.

அரக்கர்களை அழித்துத் தேவல முனிவரைக் காத்த சௌடாம்பிகை ''மகனே! இனி நீ தடையில்லாமல் ஆடைகளை நெய்யலாம். இன்று அமாவாசைநாள். இந்த அமாவாசைஇரவில் அரக்கர்களிடமிருந்து உன்னைக் காப்பதற்காக நான் சௌடேஸ்வரி அவதாரம் எடுத்தேன். என்னால் இன்று நீயும் பிழைத்தாய். அதனால் இந்த அமாவாசை நாளே உனக்கும், எனக்கும் பிறந்த நாளும் ஆகும். இன்று முதல் நீயும் உன் சந்ததியினரும் ஒவ்வொரு அமாவாசையன்றும் என்னைத் தியானித்துச் சீரும் சிறப்பும் அடைவீர்கள் எனத் ''தேவல முனிவருக்கு ரிஷபக்'' கொடியையும், வாளையும் அளித்தார்.

தேவலர் நெய்து தந்த ஆடைகள் தேவர்களின் அங்கங்களை அலங்கரித்தபடியால் அவர்கள் தேவாங்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். நாமும் ஆடை அணியும் போது அம்பிகை சௌடேஸ்வரியையும், தேவல முனிவரையும் நினைத்து வழிபடுவோமாக!

உடும்பும் சிவபக்தியும்

டாக்டர் டி. செல்வராஜ்

திருக்காளத்தி மலைமேல் குடுமித் தேவரைத் தரிசித்த திண்ணனார் அவரை உடலார- உள்ளமார- உயிரார இறுக்கமாகத் தழுவிப் பக்திப் பரவசம் அடைந்தார்.

''வங்கினைப் பற்றிப் போதா
வல்லுடும்பு என்ன நீங்கான்''

(திருக்கண்ணப்ப நாயனார் புராணம் 116)

''தன்னுடைய வளையை அல்லது மரப் பொந்தைப் பற்றிக் கொண்டு வெளியில் போகாத மிக்க வலிமையுடைய உடும்பைப் போலக் குடுமித் தேவரைப் பற்றிய பிடியைத் திண்ணன் நெகிழ விடவில்லை'' என்று நாணன் என்ற வேடன், காடன் என்ற வேடனிடம் கூறினான்.

திண்ணனார் ஆறே நாள்களில் முத்தி பெறுவதற்கு அவர் கொண்ட பக்தி வெறி முதற் காரணம். துணைக் காரணங்களில் உடும்பும் ஒன்றாகும்.

உடும்பு : இது மலையோணான். ஓணானைப் போன்ற வடிவமுடையது. ஊர்ந்து செல்வது. ஏறக்குறைய இரண்டடி நீளமுடையது. மலைகளின் இடுக்குகளிலும், காடுகளிலும் வளை தோண்டி வாழ்வது. இதன் கால்கள் குறுகியும் உடல் நீண்டும் இருக்கும். கால்களும், நகங்களும் உறுதியானவை.

வேடர்கள் விரும்பி வேட்டையாடும் உயிரினங்களில் உடும்பு முக்கியமானது. அதன் இறைச்சி மிக்க சுவையானது; ஊட்டச் சத்து மிக்கது. உடம்பு வலிமை பெற, அதன் இரத்தத்தை உடம்பில் தடவிக் கொள்வர்கள். மூட்டுவலி, வாத நீக்கத்திற்கு இந்த இரத்தம் சிறந்த மருந்து.

திண்ணனார், குடுமித் தேவர்மேல் கொண்ட பக்தி மயக்கத்தைப் புலப்படுத்த நாணன், தன் குலத்தினர் நன்கறிந்த உடும்பை உவமையாக உரைத்தான்.

உடும்பின் வயிற்றில் கயிற்றைக் கட்டி அதை உயரமான மதிளின் மேல் ஏற விடுவர் ; அல்லது எறிந்து வீசுவர். உடும்பு ஏதோ ஒரு பற்றுக் கோட்டைப் பற்றிக் கொள்ளும். அந்த ''உடும்புப்பிடி'' நழுவாது. தொங்கும் கயிற்றைப் பிடித்தபடி மதிள்மேல் ஏறுவர். கோட்டை மதிள்மேல் ஏறத்துடிக்கும் வீரர்களும், பெரிய மாளிகைகளில் திருட முயலும் திருடர்களும் இவ்வாறு உடும்பைப் பயன்படுத்துவர் என்பர்.

திண்ணனார் பொத்தப்பி நாட்டில் (இது ஆந்திராவில் கடப்பை மாவட்டத்தில், புல்லம்பேட்டை தாலுகாவிலுள்ளது) உடுப்பூரில் (குண்டக்கல் அரக்கோணம் ரயில் பாதையில், இராசம்பேட்டைக்கு அருகில் உள்ளது. உடுக்கூர் என்று இன்று வழங்கப்படுகிறது) அவதரித்தார்.

அவர் அவதரித்த ஊரின் பெயரில் உடும்பு என்ற பெயர் ஒளிந்திருப்பதை உற்று நோக்கலாம். உடும்பு + ஊர் = உடுப்பூர். அவரை அறிமுகப் படுத்தும் போதே உடும்பும் அறிமுகமாகிறது.

ஊனமுத வழிபாடு :

திண்ணனார் குடுமித் தேவரைக் கண்ட நாள் முதல் அவரும், சிவகோசரியாரும் மாறி மாறிப் பூசைகள் செய்தனர். இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. ஐந்து நாள்கள் கடந்தன. ஆறாம் நாள்:-

திண்ணனாரது அன்பின் திறத்தைச் சிவகோசரியாருக்குப் புலப்படுத்த அருள் உள்ளம் கொண்ட இறைவன் தமது வலக்கண்ணில் இரத்தம் வழியும்படி செய்தார். சிவகோசரியார் லிங்கத்தின் பின்னால் ஒளிந்து கொண்டு அங்கு நிகழ்வனவற்றைக் கவனித்தார்.

கால தாமதம் ஏற்படவே திண்ணனார் ஓடி வந்தார். தேவரின் கண்ணிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்டார். அவர் வாயில் கொணர்ந்த அபிடேக நீர் வழிந்தது ; கைகளிலிருந்த ஊனமுதும், வில்லும் வீழ்ந்தன ; தலை மேல் இருந்த பல வண்ண மலர்கள் சிதறின. திகைத்து நின்றார்.

திண்ணனார், வழியும் இரத்தத்தை முதலில் நிறுத்த முயலவில்லை. மாறாக, ''இத்தகைய தீமையைத் தேவருக்குச் செய்தவர் யார்?'' என்று மலைச்சாரலில் தேடி வரலானார். அங்கு அவர் வேடரையோ, விலங்குகளையோ காண முடியவில்லை. தேவரிடம் மீண்டு வந்து நின்றார்.

தீமை செய்தவரைத் தண்டிக்க நினைக்கிறார் திண்ணனார். பழி தீர்ப்பது வேடர்களின் மூர்க்கமான பண்பு. இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். திண்ணனார், ஒளிந்திருந்த சிவகோசரியாரைக் கண்டிருந்தால், தேவருக்கு ஏற்பட்ட தீமைக்குச் சிவகோசரியாரே காரணம் என்று இவரைக் கொன்று எறிந்திருப்பார். இறையருளால், சிவகோசரியார் தப்பித்தார். பக்தி வெறிக்கும், கோப வெறிக்கும் இடையில் அகப்பட்டு, நெருக்கடிப் பட்டுச் செய்வது அறியாமல் திண்டாடினார் திண்ணனார்.

தேவரின் புண் ஆற மருந்தைத் தேடி மீண்டும் திண்ணனார் புறப்பட்டார். பல மூலிகைகள், மருந்து களுடன் மீண்டும் வந்தார். அவற்றைத் தேவரின் இரத்தம் வழியும் கண்ணில் பிழிந்தார். அப்படியும் இரத்தம் நிற்கவில்லை. அடுத்துச் செய்யக்கூடிய செயல்தான் என்ன?

ஊனுக்கு ஊன் :

''ஊனுக்கு ஊன் உற்ற நோய் தீர்க்கும்'' என்ற பழமொழி திண்ணனாரின் சிந்தனையில் முகிழ்த்தது.

''உற்றநோய் தீர்ப்பது ஊனுக்கு
ஊனெனும் உரைமுன் கண்டார்'' (பாடல் 177)

இந்த அடிதான் திருக்கண்ணப்ப நாயனாரது வரலாற்றுக்கே அடிப்படையானது ; உயிர் நாடியானது ; ஆணிவேர் போன்றது .

திருக்கண்ணப்பனார் கல்வியறிவு இல்லாதவர். ஆனல், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருத்தொண்டத் தொகையில், (பாடல் -2) கல்வியறிவு மிக்கவராக,

''கலைமலிந்த சீர்நம்பி
கண்ணப்பர்க்கு அடியேன்''

என்று அவரே அடைமொழியுடன் சிறப்பிக்கின்றார்.

மற்றும், பிறவிக் குருடரான தண்டியடிகளை, ''நாட்டமிகு தண்டிக்கு... அடியேன்'' (பாடல் 5) என்று புனைந்திரைப்பது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

ஊனுக்கு ஊன் : ஊனில் விளைந்த நோய்க்கு அந்த ஊனே மருந்தாகும்.

மனித உடம்பில் காயம்பட்டு ஒரு சிறு குழியோ, கீறலோ, பிளவோ ஏற்பட்டால், உடனே அவை அடையும் வண்ணம், உடும்பின் இறைச்சியை வெட்டி, மூலிகைகளுடன் சேர்த்து, ஒட்டுவது வேடர் குலத்து மருத்துவ முறையாகும். இத்தகைய சிகிச்சைக்கு உடும்பின் இறைச்சியைத் தவிர வேறு உயிரினங்களின் இறைச்சி பயன்படுவது இல்லை. மனித, உடும்பின் இறைச்சிகள் ஒன்றுடன் ஒன்று இயைந்து பொருந்தும் இயல்புடையன என்பர். கலை மலிந்த, அனுபவ அறிவு மிக்க திண்ணனார் ''ஊனுக்கு ஊன்'' என்ற முதுமொழியை நினைந்தார். இதற்கு அடுத்த நிலையைச் சிந்தனை செய்தார்.

பிரளய வெள்ளத்தில் விலகி நின்ற ஒற்றியூர்

ஒரு பிரளய காலத்தில் பிரளய வெள்ளம் பூமியை விழுங்க வந்தது.

அப்போது பிரம்மதேவனின் தவத்தால் அந்தப் பிரளய வெள்ளம் ஒற்றி(விலகி) இருக்கும்படி திருவருள் புரிந்தார் சிவபெருமான்.

பிரமன் தவம் இருந்து சிவபெருமான் திருவருளை வேண்டிப் பெற்று மீண்டும் உலகைப் படைத்த இடம் தான் ஒற்றியூர் - திருவொற்றியூர் ஆகும்.

கண்ணுக்குக் கண் :

ஊனுக்கு ஊன் மருந்தானால் கண்ணுக்குக் கண் மருந்தாக வேண்டும்.

''இதற்கினி என்கண் அம்பால்
இடந்து அப்பின் எந்தை யார்கண்
அதற்கிது மருந்தாய்ப் புண்ணீர்
நிற்கவும் அடுக்கும்''

(பாடல் 178)

''கண்ணுக்குக் கண்ணே மருந்து'' என்று எண்ணித் துணிந்த திண்ணனார் அம்பினால் தனது வலக்கண்ணை அகழ்ந்தெடுத்துத் தேவரின் வலக் கண்ணிடத்தில் அப்பினார். உடனே கண்ணில் வழிந்த இரத்தம் நின்று விட்டது. ''நன்று நான் செய்த இம்மதி'' என்று நகைத்துத் தம்மைத் தாமே பாராட்டிப் பெருமிதத்துடன் களித்தார்.

இப்போது தேவரின் இடக்கண்ணில் இரத்தம் வழிந்தது. திண்ணனார் கண்டார். ''இதற்காக நான் பயப்பட மாட்டேன். என்னிடம் தக்க மருந்து இருக்கின்றதே'' என்று தமது இடக்கண்ணைத் தோண்டி எடுத்து அப்ப முயன்றார். தேவர் திண்ணனாரின் திருக்கையைத் தடுத்து, ''நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!'' என்று மும்முறை மொழிந்தருளினார். திண்ணனார் இவ்வாறு திருக்கண்ணப்ப நாயனார் ஆயினார். இவ்வாறு இவர் செயற்கரிய செய்வதற்கு உடும்பு ஒரு முன்னோடியாக அமைந்திருப்பது மீண்டும் ஒரு முறை கவனிக்கத்தக்கது.

உடும்பும், திருத்தலங்கள் சிலவும்

உடும்புடன் தொடர்புடைய திருத்தலங்கள் சில வருமாறு :-

1. மாகறல் (தொண்டைநாடு : காஞ்சிபுரத்தி

சௌடாம்பிகை அம்மன் விழாவில் பக்தர்கள் மார்பில் கத்தி போடுவதேன்?

தேவல முனிவரின் ஏழாவது அவதாரமாகத் தோன்றியவர் தேவதாசமையன்.

இவர் சௌடாம்பிகை அம்மனுக்குக் கோயில் கட்டி அம்பிகையை எழுந்தருளுமாறு வேண்டிக் கொண்டார்.

அம்பிகை சம்மதித்தார். தாம் வரும்போது தேவதாசமையனும், அவர் இனத்தவர்களும் முன்னே நடக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் பின்னால் வரும் தன்னைத் திரும்பிப் பார்க்கக் கூடாது. திரும்பிப் பார்த்தால் அதே இடத்திலேயே தான் நின்று விடுவேன் என்று அம்பிகை நிபந்தனைவிதித்தார்.

அதற்கு இசைந்த தேவதாசமையனும், அவர் இனத்தவர்களும் முன்னே சென்றனர்.

அம்பிகை பின் நடந்து வருவதை உணர்த்தும் வண்ணம் அம்மனின் பாதத் தண்டைகள் முழங்கிக் கொண்டிருந்தன.

ஓர் ஆற்றுப்படுகையில் அம்பிகை நடந்து வரும்போது தண்ணீரின் சப்தத்தில் தண்டைச் சத்தம் கேட்கவில்லை, அதனால் சௌடாம்பிகை வரவில்லையோ, என்று பக்தர்கள் திரும்பிப் பார்த்தார்கள். அம்பிகை பக்தர்கள் திரும்பிப் பார்த்த காரணத்தால் அதே இடத்தில் நின்று விட்டார்.

தேவதாசமையனும், பக்தர்களும் தங்கள் தவறுக்காகக் கதறினார்கள். தங்கள் தவறுக்குப் பிராயச்சித்தமாகத் தங்களுடைய கத்திகளை எடுத்து மார்பில் வெட்டிக் கொண்டனர்.

பக்தர்களின் பக்தியைக் கண்டு மகிழ்ந்த அம்பிகை, அவர்கள் மார்பில் கத்தியால் வெட்டிக் கொண்டபோது அதைத் தானே தாங்கிப் பக்தர்களுக்குத் துன்பம் நேராமல் பார்த்துக் கொண்டாள்.

பக்தர்கள் கட்டிய ஆலயத்திற்கு எழுந்தருளிப் பக்கத்துணை இருந்து சகல வரங்களும் தந்து அருள் பாலிக்கிறார் அருள்மிகு சௌடாம்பிகை அம்மன்.

லிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ளது. இராசேந்திர சோழனுக்காக இறைவன் பொன் உடும்பாகத் தோன்றினார். அவன் துரத்தவே ஓடிப் புற்றில் ஒளிந்து, பின் வெளிப்பட்டருளினார். அங்கே சோழன் சிவாலயத்தைக் கட்டினான்.

இராசேந்திர சோழனுக்குக் காட்சி அளித்த பொன் உடும்பின் வால் வடிவத்தில் லிங்க பாணம் சிறியதாக அமைந்துள்ளது. ஆவுடையார் பெரியது. இத்தகைய அமைப்புடைய லிங்கம் வேறு எந்தத் திருத்தலத்திலும் இல்லை.

2. ஒசூர் : இது தர்மபுரியிலிருந்து வடமேற்கே 84 கி.மீ. தூரத்தில் உள்ளது. கோயில் அமைந்துள்ள மலைக்கு ஐந்து பெயர்கள் உள்ளன. இறைவன் உடும்பு வடிவில் வந்து தங்கியதால் அதற்கு ''உடும்புமலை'' என்ற பெயர் அமைந்தது.

1. அட்டை : தன்வந்திரி பாற்கடல் கடையப் பட்ட போது அதில் அவதரித்தவர். முதல் மருத்துவர். ஓர் அட்டையைக் கையில் ஏந்தியவர். அட்டை மருத்துவத்துறையில் பயன்படுகின்ற ஓர் உயிரினம். இது ஒன்றைப் பற்றினால் விரைவில் விட்டுவிடாது.

யானைக்கால் வியாதி, பெரிய கட்டிகள் முதலிய நோய்களின்போது, ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சீழையும், கெட்ட இரத்தத்தையும் வலியில்லாமல் உறிஞ்சி எடுக்க அட்டை பயன்படுகிறது. இது உறிஞ்சிப் பருத்ததும் அகற்றப்படும்.

2. குரங்கு : தென்குரங்காடுதுறை, வட குரங்காடுதுறை, கபிஸ்தானம், குரங்கணில் முட்டம் முதலிய பல திருத்தலங்களில் குரங்குகள் வழிபட்டன.

3. முதலை : ''முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா'' என்பது பழமொழி. முதலை பற்றிய கஜேந்திரன், செயலற்று, ''ஆதிமூலமே'' என அபயக்குரலுடன் விளித்தது. அது கூப்பிடு தூரத்தில் வீற்றிருந்த எம்பெருமான் நாராயணன் உடனே கஜேந்திரனை விடுவித்து மோட்சமளித்த திவ்ய தேசம் கவித்தலம்; காஞ்சிபுர அட்டபுயகரம். முதலையின் மூர்க்க புத்தி கஜேந்திரனுக்கு மோட்சம் அளித்தது.

4. பல்லி : ஹேமன், சுக்லன் என்ற இருவர் ஒரு சாபத்தினால் பல்லிகள் ஆனார்கள். திருக்கச்சி வரதராசப் பெருமாளை வழிபட்டு சாப விடுதலை அடைந்தனர்.

கோயில் பிரகாரத்தில் இரண்டு பல்லிகள் உள்ளன. பெருமாளை வழிபட்ட பிறகு இந்த இரு பல்லிகளையும் வழிபட்டால் எல்லா நோய்களும் குணமாகின்றன.

சுசீந்திரம் கோயிலில் ஓர் அழகான மன்மதன் சிலை உள்ளது. மன்மதன் கையிலுள்ள கரும்பு வில்லில் ஒரு சிறு பல்லி ஒட்டிக் கொண்டிருப்பதைக் காணலாம். அது கரும்பின் இனிப்புச்சுவையைச்சுவைக்கிறதாம்!

முடிவுரை : மனம் உடும்பின் பிடிபோல் - அட்டையின் பிடிபோல் - குரங்கின் பிடி போல்- முதலையின் பிடிபோல்- பல்லியின் பிடிபோல் இறைவனது திருவடிகளை மிக இறுக்கமாகப் பிடித்துக் கொள்வதே பக்தி.

இவ்வாறு பக்தியின் தன்மையை இரகசியமாகப் புலப்படுத்தவே உடும்பு முதலிய உயிரினங்களின் வடிவங்களை ஆலயங்கள் பல இடங்களில் வடிக்கின்றனர். அவற்றைச் சார்ந்த தல புராணங்களைப் புனைகின்றனர்.

புத்திபலம் மனோபலம் ஆத்மபலம்

''எழுத்துச்சித்தர்'' பாலகுமாரன்

(முன்தொடர்ச்சி)

குழந்தை பிறந்ததைப் பார்க்கும் பொழுதும், ஒரு கிழவர் இறப்பதைப் பார்க்கும் போதும் மனம் திடுக்கிட்டுப் போகிறது. எல்லா அமைதியும் அங்கு நிலைகுலைகின்றன. எல்லா கெட்டிக்காரத்தனமும் அங்குக் கேள்வியாகிறது.

நான் இந்த விதம்தான் குழந்தையாகப் பிறந்தேனா? நான் இப்படித்தான் ஒரு நாள் மரணமடையப் போகிறேனா என்ற இரண்டு கேள்விகளும் துளைத்து எடுக்கும்.

நான் மீண்டும் இப்படிக் குழந்தையாய்ப் பிறப்பேனா? எங்கே எப்படி எந்த இடத்தில்? என்று இன்னொரு அலையல் ஏற்படும்.

இது வெற்றி பெற்றவருக்கு கூடுதலாகவே ஏற்பட வாய்ப்பு உண்டு. உலகத்தின் எல்லாப் பகுதியையும் ஜெயித்து விட்டோம். உலக வாழ்க்கையில் பல சுகங்களை அடைந்து விட்டோம். மனம் சொல்பேச்சைக் கேட்டுக் கொண்டு அமைதியாக இருக்கிறது என்று அவர்கள் நினைத்தாலும் இறப்பின் போதும், பிறப்பின் போதும் எல்லா மனிதர்களும் கலவரமடை கிறார்கள்.

குழந்தை எங்கிருந்தது? எங்கிருந்து எப்படி உண்டாயிற்று? இந்தக் குழந்தை தாயின் வயிற்றிலிருந்து உண்டானது தான். தந்தையின் அணுவிலிருந்து தோன்றியதுதான். எல்லாம் புரிகிறது.

ஆனால், இந்தக் குழந்தை இதற்கு முன்பு எங்கிருந்தது? என்னவாக இருந்தது? இதற்குள்ளே உயிர் தோன்றியது எப்போது? உருவம் எடுத்தது எப்போது? இந்த உயிரின் முந்தைய நிலை என்ன? அப்போது என்ன உடலாக இருந்தது என்று கேள்விகள் எழுகின்றன.

எவ்வளவு தள்ளி விட்டாலும், அட இதெல்லாம் எதற்கு இப்போது என்று அதைப் புறக்கணித்தாலும், மறுபடி மறுபடி ஏதோ ஒரு சமயத்தில் அது முன்வந்து உங்கள் முன்பு பூதாகரமாய் நிற்கும். விடை தெரியாத கேள்வியாக இருக்கிறதே என்று மனம் சஞ்சலப்படும். விடை தெரிந்தவர் யார் உண்டு என்று விடை தெரிந்தவரை விசாரிக்கத் துவங்கும். விடை சொன்னவர் என்ன விடை சொன்னாலும் மனம் ஏற்காது. சந்தேகத் தோடே பார்க்கும்.

எத்தனை தெளிவாகச் சொன்னாலும் அப்படியா என்று அந்த நேரம் சமாதானமாகுமே தவிர இறப்பு, பிறப்பு கேள்விகள் மறுபடியும் அது சரியோ என்ற கேள்வியோடு மீண்டும் பூதாகாரம் ஆகும். புத்தியின் வெற்றியும், மனதின் ஆளுமையும் ஒருபொழுதும் இந்த இடத்தில் சமாதானமாக மாட்டா. அந்த இரண்டு கேள்விகளும் சொல்லும் போதே இன்னொரு கேள்வியும் வந்து நிற்கும்.

அப்படியானால் நான் யார்?

இது உயிர் என்றால் இந்த உயிர் என்னிடத்தில் எங்கே இருக்கிறது? அந்த உயிரின் தன்மை என்ன. இருப்பு எங்கே? நீ சிரிக்கும் போதும், அழும் போதும் அது என்ன செய்து கொண்டிருக்கிறது.? நான் பாடும் போதும், பேசும் போதும் அது என்ன விதமாக இருக்கிறது? நான் கோபப்படும் போதும், கொஞ்சும் போதும் அதனுடைய செயல் என்ன? அது மனதா, புத்தியா, உடலா அல்லது வேறு ஏதேனுமா? இந்த அலசலுக்குத்தான் ஆன்மீகம் என்று பெயர்.

உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும், எல்லா மதங்களிலும் இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. எல்லா மனிதர்களும் இந்த விசாரத்தைத் தனக்குள்ளே கொண்டுதான் இருக்கிறார்கள். உலகத்தின் எல்லாத் தத்துவங்களும் இதை அடிப்படையாய்க் கொண்டுதான் பேசப் படுகின்றன. இதுதான் நேரிடையாக முகத்தில் குத்துகின்ற கேள்வியாக இருக்கிறது.

எந்த மடாதிபதி பதில் சொன்னாலும், எந்தத் தத்துவவாதி பதில் சொன்னாலும், எவ்வளவு பெரிய தபஸ்வி இதற்கு விளக்கவுரை அளித்தாலும் இது உள்ளுக்குள்ளே நிறைவை ஏற்படுத்துவதில்லை. நீங்களாய் நேரிடையாய் இது குறித்த தெளிவை அடைந்தாலொழிய ஒரு நாளும் இதுபற்றி மனம் அமைதியடைவதில்லை.

ஏன் மரணம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்? சாவு வரும் போது வரட்டும் என்று எவராலும் அமைதியாக இருக்க முடிவதில்லை. ஏனெனில் மரணம் ஒரு வயதிற்குப் பிறகு தான் வரும் என்கிற வழக்கு உலகத்தில் இல்லை. எப்போது வேண்டுமானாலும், எவர் வேண்டு மானாலும், எப்படி வேண்டுமானாலும் இறந்து போகலாம் என்கிற பதட்டத்தை இந்த உலகம் இடையறாது கொண்டிருக்கிறது. நேற்று இருந்தவர் இன்று இல்லை என்கிற நியமம்தான் இந்த உலக

வாழ்க்கையின் அடிநாதமாக இருக்கிறது. இந்த நிரந்தரமற்ற நிலையை கண்டுதான் மனிதன் பதட்ட மடைகிறான்.

அப்படியானால் எது நிரந்தரம்? என்ற கேள்வியும் உடனடியாக எழுகிறது. ஆன்மா அழிவில்லாதது என்ற பெரியோர்கள் சொல்கிறார்கள். ஆன்மா நிரந்தரமானது என்றும் சொல்கிறார்கள். ஆன்மா என்ற விஷயத்தைச் சொல்லிவிட்டு பரமாத்மா ஜீவாத்மா என்றும் சுட்டிக் காட்டுகிறார்கள். பரமாத்மாவின் ஒரு பகுதி தான் ஜீவாத்மா என்கிறார்கள். ஜீவாத்மா ஒரு நாளும் பரமாத்மாவாக முடியாது என்றும் பேசுகிறார்கள்.

எது சரி?

நாம் கடவுளாவது சரியா? அல்லது கடவுளின் காலின் கீழ் இருப்பது சரியா? மறுபடியும் குழப்பம் ஏற்படுகிறது. எவர் தீர்க்க வேண்டுமோ அந்த மடாதிபதிகளே, அந்தத் தத்துவவாதிகளே அல்லது தபஸ்விகளே இதைக் குழப்புகிறார்கள். எனவே, இது கேட்டுப் பெறுவதல்ல. சொல்லிக் கொடுத்து வருவதல்ல. இது உணர்வது. **கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர்.** இங்கு மிகப்பெரிய கேள்விக்குறி இருக்கிறது. விண்டவர் கண்டிலர் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. எனவே, நேரிடையாய் தெளிவு பெறுவது தான் மிக உத்தமமான விஷயமாய் இருக்கிறது. எப்படித் தெளிவு பெறுவது? எதிலிருந்து தெளிவு பெறுவது?

எல்லோரும் சாகப் பயந்து தான் சாகிறார்கள். தன்னை அறிந்தவன் மட்டுமே மரணத்தைக் கண்டு அஞ்சாமல் வரவேற்கிறான். அவனால், மரணத்தைத் தள்ளி வைக்கவும் கூடும்.

இது பெரியோர் வாக்கு.

மரணத்தைக் கண்டு அஞ்சாமல் வரவேற்பது என்பது தன்னை அறிந்தவனால் மட்டுமே முடியும். ஐயோ ... என்ற அலறல் இல்லாமல் மரணமடைவது என்பது மிகச் சிறந்த ஞானமுள்ளவனால் மட்டுமே முடியும். மரணத்தை வரவேற்கிற தெளிவு இருந்து விட்டால், அதை நகர்த்துகின்ற திறமையும் நிச்சயம் வந்து விடும். நீஉடனடியாக மரணத்தை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்ற நிலை வந்தாலும் ''அடடே ... வரச்சொல்'' என்று இருகை விரித்து மரணத்தை இறுகத் தழுவிக் கொள்ளவும் தபஸ்வியால் முடியும்.

அதெப்படி?

ஏனெனில் அந்தத் தபஸ்விக்கு - அந்த ஞானிக்கு தான் உடம்பல்ல என்று தெளிவாகியிருக்கும். தான் ஆத்மா என்று புரிந்திருக்கும். தான் உடம்பு தாண்டி, உடம்பு எடுத்துக் கொண்டிருக்கிற, உடம்பாய் உருவாகியிருக்கிற ஒரு ஜீவன் என்று புரிந்திருக்கும். தான் என்பது, தன்னைச் சுற்றி காண்பது இந்த உடம்பையல்ல; இந்த அறிவையல்ல, இந்தக் கற்பனைத்திறன் கொண்ட மனதையல்ல. அது உள்ளிருக்கின்ற ஒரு கூர் ஒளியை.

எது இருந்தால் இந்த புத்தியும் மனமும் உடம்பும் இருக்குமோ, அர்த்தம் கொள்ளுமோ அந்தச் சக்தியைத்தான், தான் என்று அவன் கருதுகிறான். ஆக, அந்தச் சக்தியை உடம்பிலிருந்து துண்டாக பிரித்து விட அவனால் முடிந்திருக்கும். அப்படி முடிந்தால் தான் உடம்பல்ல என்ற தெளிவும் பிறந்திருக்கும்.

சென்னிமலை முருகர் விசேடம்

ஈரோடு சென்று, அங்கிருந்து பெருந்துறை வழியாகத் தாராபுரம் செல்லும் வழியில் தெற்கே சுமார் 20 கல் தொலைவில் உள்ள ஊர் சென்னிமலை.

தினந்தோறும் அதிகாலை 6 மணி அளவில் முருகனுக்கு அபிசேகம் செய்வதற்காக பூசணித் தீர்த்தம் என்று அழைக்கப்படும் தெப்பக்குளத்தில் இருந்து திருமஞ்சன நீரை இரண்டு எருதுகள் எடுத்துப் படிக்கட்டிகள் வழி ஏறிவரும் காட்சி இங்குக் காணத்தக்க விசேடங்களில் ஒன்று ஆகும்.

இது எப்படிச் சாத்தியம்? என்ன பயிற்சி?

மனம் என்பதைக் கவனிக்க இடையறாது விசாரப்படுவது என்று சொன்னோமல்லவா! மனம் என்பதை அடக்கி ஆள எண்ணங்கள் தோன்றுகின்ற இடத்திலேயே லயிக்க வேண்டும் என்று சொன்னோம் அல்லவா! அப்படி எண்ணங்கள் தோன்றுகின்ற இடத்திலேயே லயித்துக் கிடக்கிற போது அந்த எண்ணங்கள் புனிதப்படுத்தப் படுகின்றன.

கோபம் எழும் போதே கோபத்தைப் பற்றிய ஞானம் வந்துவிட்டால் அந்தக் கோபம் அளவுமிகாமல் அர்த்தத்தோடு வெளிப்படுகிறது. அகந்தை அகன்று போகிறது. ஆத்திரப்படுவது அபத்தம் என்று புரிந்து போகிறது. ஆக, எண்ணங்கள் தோன்றுகின்ற இடத்தில் மனம் இருப்பதால் மனம் சுத்தமாவது போல, அந்த எண்ணங்களைத் தோற்றுவிப்பது எது என்ற உணர்வை ஒருவன் அடைகிறபோது ஆத்மானுபவம் ஏற்பட்டு விடுகிறது.

ஆன்மா தானே முன்வந்து தன்னை அவனுக்குக் காட்டி விடுகிறது. அதுவே தன்னைக் காட்டினாலொழிய அதைப் புரிந்து கொள்ள முடியாது. இடையறாது இடையறாது அந்த ஆன்மாவை விசாரம் செய்வதற்குத்தான் தபஸ் என்று பெயர். தவம் செய்தல் என்று பெயர்.

தவம் என்பதென்ன?

ஒரு வகை தியானம்.

தியானம் என்பது என்ன?

ஒரு புள்ளியில் நிற்றலா? இல்லை. அது எந்நேரமும் முழு உணர்வோடு விழிப்போடு இருத்தல். இதற்கு மேல் இதை விளக்க முடியாது. இது சொல்லில் அடங்காத உணர்வு. விளக்க முடியாத விந்தை. பகிர்ந்து கொள்ள முடியாத ஒரு பக்குவம்.

அதனால்தான் இதைக் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் என்று சொல்கிறார்கள். இது பயிற்சியில் வருவதன்று. புத்தியின் திறனைப் போல மனதின் வலிமையைப் போல இதைப் பழக்கப்படுத்திக் கொள்ள முடியாது. என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி உடனடியாக எழும். வெறுமே சும்மா இருக்க வேண்டியதுதான். உன்னுடைய எல்லாவிதமான அலசல்களையும், அறிவார்ந்த கேள்விகளையும் விலக்கிவிட்டு வெறுமே மௌனமாய் ஒடுங்கி உள்ளே உட்கார வேண்டியதுதான்.

உப்பில்லாப் பிரசாதமும் பலனும்

மார்க்கண்டேய முனிவரின் மகள் பூமிதேவியை எம்பெருமான் நாராயணன் மணந்த திருத்தலம் உப்பிலியப்பன் கோயில்.

''முனிவரே! உம்மகள் சிறுமியாதலால் உணவிலும், காய்கறிகளிலும் உப்புகூடச் சேர்க்கத் தெரியாது என்று கூறினீர். இன்று முதல் நான் உணவில் உப்பை விலக்கி விடுகிறேன். உப்பில்லாமல் நான் உண்ட உணவைப் பின்னர் உண்டவர்கள் ஆயிரம் சாந்திராயண விரதங்களின் பலனைப் பெறுவார்கள்'' என்று எம்பெருமானே அருளிச் செய்தபடியால் உப்பிலியப்பன் திருக்கோயிலில் தயாராகும் எந்தப் பிரசாதத்திலும் உப்பு சேர்ப்பதே கிடையாது.

அந்த விதமான முயற்சியால், இந்த விதமான நகர்வினால் இதை அடையமுடியும் என்று நினைத்தீர்களென்றால், நீங்கள் இந்த விஷயத்திற்கு அப்பால் போகிறீர்கள். விலகிவிடுகிறீர்கள். எந்தவித முயற்சியுமில்லாமல், வெறுமே வெறுமே வெறுமே கிடக்க முடிகிறபோது உள்ளுக்குள்ளே வேறு ஒரு விஷயம் கிளம்புகிறது. இந்த வெறுமே இருப்பது கூட முயற்சியற்று இயல்பாக நடைபெற வேண்டும். **''செத்தாரைப் போல திரி''** என்று சொல்லப்பட்டது இது குறித்துத்தான்.

ஆனால், **''செத்தாரைப்போல திரி''** என்பதும் ஒரு முயற்சியல்ல. முயற்சிகள் அனைத்தையும் கீழே உதறிவிட்டுக் கிடப்பதுதான். அது ஒரு பரமானந்த நிலை. இது தானாய் நடைபெற வேண்டிய ஒரு விஷயம்.

நேதி ... நேதி... நேதி...இது இல்லை இது இல்லை என்று எல்லாவற்றையும் விலக்கிவிட்டு, எது விலக்க முடியாமல் உள்ளே இருக்கிறதோ அதுவே ஆன்மா என்பதை ஒருவன் உணர வேண்டும். உடம்பு நானல்ல. புத்தி நானல்ல. பெயர் நானல்ல. மனம் நானல்ல. இந்தச் சொத்து சுகங்கள் எல்லாம் நானல்ல. இந்தப்பட்டம் பதவிகள் எல்லாம் நானல்ல. நான் யார்? நான் யார்?... என்று கதறினால் உள்ளுக்குள்ளே பெரும் கூவல் கூவி, உள்ளுக்குள்ளே பெரும் கூவலோடு அழுதால் ஏதோ ஒன்று உடைந்து ஏதோ ஒன்று தோன்றுகிறது. இதையும் சொல்லில் விளக்க முடியாது.

சரணகமலாலயத்தில் ஒரு கணநேரம் மட்டும் நிற்கின்ற யோக்கியதை வந்துவிட்டால், நமக்குள்ளே இருக்கின்ற பேரொளியைக் கண்டுவிட்டால் இந்த உலகத்தோடு நாம் பின்னிப் பிணைந்து கொண்டிருக்கிற பல விஷயங்களோடு அறுபடுகிறோம்.

நான் அறுத்து விட்டேன். நான் அறுபட்டு விட்டேன் என்று சொல்லிக் கொள்ளாமலே அறுபடுகிறோம். அறுந்தது தெரியாமலேயே நகர்ந்து விடுகிறோம். அறுந்ததை எவருக்கும் அறிவிக்காமலேயே மௌனமாய் உள்ளுக்குள் மூழ்கிவிடுகிறோம்.

நான் எதுவுமில்லாதவன், வெறும் கோமணதாரி, ஸந்நியாசி என்று சொல்லிக் கொள்பவர்களெல்லாம் ஏதேனும் பிடித்துக் கொண்டு தொங்குபவர்கள். எதுவுமற்று உள்ளே இருப்பவருக்கு எதையும் சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. எந்த அறிவிப்பும் அவனைப் பற்றித் தேவை யில்லை. அவன் அடையாளமில்லாதவனாகப் போய் விடுகிறான். மற்றவருக்கு ஏதேனும் அடையாளமாக அவன் இருப்பினும் அவனுக்கு அவன் எந்த அடையாளமும் இல்லாமல் மாறிவிடுகிறான்.

மற்றவர்கள் உங்களை பித்தர் என்றோ, பேயர் என்றோ, பாலர் என்றோ சொல்லிக் கொள்ளட்டும். உங்களுக்குள் நீங்கள் எதுவுமில்லை. வெறுமே... வெறுமே... இருக்கிறீர்கள். வெளி வேஷம் என்ன போட்டுக் கொண்டாலும் உள்ளுக்குள்ளே இடையறாது ஒரு களிநடனம் ஓடிக் கொண்டு இருக்கிறது. அந்தச் சுடரொளியோடு மனம் வாழ்ந்து கொண்டிருக்கும். இதுதான் ஆன்மபலம். உண்மையில் இந்த அறிவே மரணம்.

பறவைகள் போன வழியும், மீன்கள் போன பாதையும், ஞானிகள் நடந்த வழியும் மற்றவருக்குத் தெரியாது. இது பின்பற்றக் கூடிய விஷயமல்ல. இது ஒட்டுமொத்தமாய், கும்பல் கும்பலாய் கைகோர்த்துக் கொண்டு போகிற விஷயமல்ல. மதம் தாண்டியது. கடவுள் வழிபாடு தாண்டியது. இது தத்துவங்கள் தாண்டியது. இது ஒரு தனிவிஷயம்.

மதங்கள் இதற்கு அண்மையில் கொண்டு போய் விடுமேதவிர இந்த வழி மதத்தின் வழியல்ல. மதங்களின் வழி இந்த வழியை ஒருகாலும் சொல்லித்தராது. மதங்களைப் பிடித்துக் கொண்டிருப்போர், இதிலிருந்து அன்னியப் படுவோர், கடவுள் வழிபாடுகளைப் பிடித்துக் கொண்டிருப்போர் இதிலிருந்து விலகியிருப்போர் இது தனித்த வழிபாடு. தனித்த மதம். இதில் இன்னொருவர் பங்கு என்பதே இல்லை என்பதை உணர்வர். இன்னொருவர் கூட்டு என்பதே இல்லை என்பதை உணர்வர்.

இதைத் தெரிந்து கொண்டவருக்கு, இதைத் தெரிந்து கொண்ட மற்றொரு ஜீவனைத் தெரிந்து விடும். அங்குப் பேச்சும் இல்லை. பாராட்டும் இல்லை. அடடே... நீயும் என் கட்சியா என்ற கூவல் இல்லை. இது ஒன்று சேர்ந்து உரத்து முழக்கமிடுவதல்ல. தனித்தனியாய்ப் பிரிந்து தன்னுள்தான் மூழ்கிக் கிடப்பது.

தன்னை அறிந்தவர்கள் பெரியவர்கள் என்று சொல்லப்படுவார்கள். இந்தப் பெரியவர்கள் ஒரு உபதேசமும் செய்வதில்லை. ஒரு வழியும் காட்டுவதில்லை. வெறுமே இருப்பார்கள். அவர்கள் இருப்பே நல்ல மழையைக் கொண்டுவரும். அவர்கள் இருப்பே மற்றவர்களுடைய நோயை குணமாக்கும். அவர்கள் இருப்பே மற்றவர்களை சுகப்படுத்தும். ஏனெனில் அந்த மனம் அப்படிப்பட்ட ஒரு கனிவை, முழுமையை அடைந்தது. புத்தி இன்னும் விகசித்து, பெரிதாய் விவரித்துக் கிடப்பது. அந்த மனமும், புத்தியும் அந்த ஆன்மாவிற்கு அடிமையாய் கிடக்கின்றன. எனவே, அந்த ஆன்ம சொரூபம் எல்லா விதத்திலேயும் இந்த உலகத்தை ரட்சித்து வருகிறது. அதுவும் கடவுளும் ஒன்றே. அதுவும் குருவும் ஒன்றே. அதுவும் இயற்கையும் ஒன்றே.

இது எப்படி ஒருவருக்குள் ஏற்படும்? எங்ஙனம் ஒருவருக்குக்கிடைக்கும்?

அது குருவால் மட்டுமே கிடைக்கக்கூடிய பேரருள். ஆசிர்வாதம். சாக்குப் போக்கிற்காக தன்னை நெருங்கிய சீடரிடம் பல்வேறு விஷயங்களைச் சொல்லி, இந்த குரு அவருக்கு உண்மையில் பிரம்ம ரகசியத்தைப் போதிப்பார். ஆன்ம தரிசனத்தை உணர்த்துவார். பக்குவப்பட்ட மனதிற்கு இது தானாக நிகழும். இந்தத் தானாக என்பதை குருவின் அருள் ஏற்படுத்தும்.

புலி, புலிக்குட்டியை நக்கித்தான் புலியாக்கும். பக்குவமடைந்தவரை குரு புரிந்து கொண்டு தன்னருகே அழைத்து தலையைத் தடவி, முதுகைத் தடவி உள்ளுக்குள்ளே தன் பார்வையைச் செலுத்தி, அந்தத் தீயை, அந்தக் கங்கை ஊதி பெரிதாக்குவார். தழல் பெரிதாகி சகல அகங்காரங்களையும் விழுங்கி விடும். இருப்பது தழல் மட்டுமே. அந்தத் தழலிலிருந்து வரும் மொழி சுற்றியிருப்போரை பல்வேறு விதங்களில் சுகப்படுத்தும்.

விளக்கால் விளக்கேற்றுவது போல எந்த ஓசையும் இல்லாமல், எந்த அறிவிப்பும் இல்லாமல், எந்த ஆர்ப்பாட்டமும் இல்லாமல் அது நிகழும். ஆர்ப்பாட்டமாய் செய்யப்படுபவையெல்லாம் மனித யத்தனங்களே. வெறும் வெளிவேடங்களே. புத்தியின் தந்திரங்களே. சத்தியம் ஒருகாலும் ஆர்ப்பாட்டம் பண்ணாது. அது மிக அமைதியானது. மிகக் கடினமானது. அழிவில்லாதது- அது தன்னை தான் சத்தியமென்று ஒருகாலும் வெளிப்படுத்திக் கொள்ளாது. அது வெறுமேயிருக்கும். உணர முடிந்தோர் உணர்வர்.

எனவே, லோகாயத வெற்றிகளைப் பெறுகின்ற புத்திபலத்தைவிட, உங்களின் ஆசைஅபிலாஷைகளை அடக்குகின்ற மனோபலத்தை விட, நீயார் என்று தெரிந்து கொள்கின்ற, நான் யார் என்று ஞானம் பெறுகின்ற இந்த ஆன்ம பலமே மிக முக்கியமானது. இந்த புத்திபலமும், மனோபலமும் ஆன்மபலம் பெறவே உதவுகின்றன.

உதவாதவை வெறும் குப்பை. மதங்கள் இதற்கே அழைத்துப் போகின்றன. அப்படி உன்னை இந்த மதம் அழைத்துப் போகவில்லையென்றால் உனக்கு மதம் புரியவில்லை என்று அர்த்தம். உனக்கு கடவுளை அறியும் நாட்டமில்லை என்று அர்த்தம். நீஎதையோ கற்பனை செய்து கொண்டு. ஏதோவொரு குழுவோடு சேர்ந்துகொண்டு வெறும் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறாய் என்று அர்த்தம். தன்னை அறியும் கலையே மிகப்பெரிய விஞ்ஞானம்.

ஞானிகள் ஒருபோதும் தங்களை முன்னிலைப் படுத்திக் கொள்வதேயில்லை. அந்நிலை வந்தபிறகு பிறப்பும், இறப்பும் தாண்டிய ஒரு பேருண்மை புரிய ஆன்மா வேறு இடத்தில் நிலை கொண்டுவிடும். அங்கே இனி பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. இந்து மதம் மிக மிகத் தெளிவாக இதைச் சொல்கிறது. புரிந்து கொள்ளத்தான் பலருக்கும் பொறுமையில்லை.

குரு பேசிவிட்டு மௌனமாய் அமர்ந்திருந்தார். அவர் கண்கள் கலங்கியிருந்தன. மெல்ல கண்ணீர் வழிந்து கன்னம் நனைந்தது. இது அழுகை இல்லை. ஆனந்தமுமில்லை. ஒரு கரைதல். காணாமற் போதல், தன்னுள் நிற்றலின் தெளிவில் ஏற்பட்டது.

சிஷ்யை கைகூப்பி வணங்கி விழுந்து நமஸ்கரித்தாள்.

''இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்ட உனக்கு நன்றி'' என்று சிஷ்யையை நோக்கி குரு கைகூப்பினார்.

இதை உனக்கு நான் சொல்லவில்லை. உனக்கு சொல்லிக் கொடுக்கின்ற எண்ணமும் இல்லை. இது எனக்கு நானே தன்னந்தனியாய் சொல்லிக் கொண்டது. இங்கே சொல்பவரும் இல்லை. கேட்பவரும இல்லை. ஒரு விஷயம் மட்டும் அனாதியாய் அதன் பாட்டுக்குக் கிடக்கிறது'' என்று பேசி முடித்தார்.

''உனக்கு எப்பொழுது புரியுமோ, எப்பொழுது புரிய வேண்டுமோ அப்பொழுது புரியும். அதுவரை காத்திரு. உன்னுடைய எல்லா முயற்சிகளையும் விட்டுவிட்டு உன்னை கவனித்தபடி இரு'' என்று கட்டளையிட்டார்.

சிஷ்யை மீண்டும் விழுந்து வணங்கினாள். ''குரு குப்பை. சிஷ்யர் கோழி. ஓயாது கிளறிக் கொண்டிருந்தால்தானே ஏதேனும் கிடைக்கும்''.

குரு மீண்டும் உரத்த குரலில் சிஷ்யையைப் பார்த்துச்சொன்னார்.

சிஷ்யை விடைபெற்றாள்.

குரு அமைதியாக அமர்ந்திருந்தார். யார் சிஷ்யை? யார் குரு?

கேள்வி வருகிறதா?

இப்படி யாருமில்லை. இரண்டுமே உள்ளே நடக்கின்ற விசாரம். நானே கேள்வி. நானே பதில். நீங்களே கேள்வி. நீங்களே பதில். இன்னொருவர் இதில் சம்மந்தப்படவேயில்லை. இதற்குப் பெயர்தான் விசாரப்படுதல். விசாரித்து அறிதல்.

திருக்கோயில்
திங்கள் இதழ்

தனி இதழின் விலை	ரூ 10/
ஓராண்டுச்சந்தா	ரூ 120/
பத்து ஆண்டுச்சந்தா	ரூ 1000/
ஆயுட்காலச்சந்தா	ரூ 1500/

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

''திருக்கோயில்'' இதழில் விளம்பரம் செய்து பயனடைவீர்!

திருத்திய விளம்பரக் கட்டண விவரம் :

1. பின் பக்க அட்டை வெளிப்புறம் (வண்ணத்தில்)	ரூ 15,000/
2. முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 10.000/
3. பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ 7,500/
4. உள்புறம் முழுப்பக்கம்	ரூ 5,000/
5. உள்புறம் அரைப்பக்கம்	ரூ 3,000/

இதற்கான பணவிடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, 119, உத்தமர் காந்தி சாலை சென்னை 600 034 என்ற முகவரிக்கு அனுப்பவும்.

மதுரை அரசாளும் மீனாட்சியே!

புலவர் ச. சோமசுந்தரம், எம்,ஏ., பி.எட்.,

அன்னை பராசக்தி, காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், கவின் மிகு மதுரையிலே மீனாட்சியாகவும் கனிவுறக் காட்சித் தந்து காசினியைக் காத்து அருள்கின்றாள். எனினும் அன்னை செங்கோல் ஏந்தி அரசோச்சும் அற்புத புண்ணிய பூமியாக விளங்குவதால் மதுரை அறுபத்து நான்கு பீடங்களுள் முதன்மையான உயர்ந்த பீடமாக, சியாமளா பீடமாக, துவாத சாந்தத் தலமாகப் போற்றப்படுகிறது.

சிவபெருமான் தம் திருமுடியிலுள்ள பிறையின் அமுதமாகிய மதுரத்தை இத்திருக்கோயில் விமானங்களிலும் கோபுரங்களிலும் தெளித்தார் என்ற சிறப்புப் பற்றியே மதுரை என்ற திருப்பெயர் ஏற்பட்டது.

ஆலமரத்தை முகப்பில் எல்லையாகக் கொண்ட காட்டில் இறைவன் ஆணைப்படி ஆலகால நாகமொன்று, தன் தலையும் வாலும் கூடுமாறு வளைத்துக் காட்டிய இடத்திலே இத்திருக்கோயில் அமைந்ததால் இம்மதுரை மாநகரை ஆலவாய் என்றே பாடுகின்றார்.

கூடல் என்றால் ஒன்று சேர்தல் என்று பொருள். சங்கம் வைத்துத் தங்கத் தமிழ் வளர்த்து அங்குப் புலவர்கள் உவப்ப தலை கூடியதால் கூடலாயிற்று

கடற்கோள்களால் சிதறுண்ட பாண்டியர்களின் பல்வளங்களும் மீண்டும் கூடியதால் கூடலாயிற்று.

வருணன் கடலை யேவிப் பெரும் புகழ் மதுரையை அழிக்கக் கருதினான். சிவபெருமானோ நான்கு மேகங்களை அழைத்து அந்தக் கடல்நீரைக் குடிக்குமாறு செய்ய, சினங்கொண்ட வருணன் மீண்டும் பெருமழை பெய்யச் செய்தான். அப்போது அந்த நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகி, மழையினின்று காத்தன. எனவே நான்மாடக்கூடல் என்ற பெயரும் உண்டாயிற்று.

நகர அமைப்பு : காஞ்சி திருவாரூர், திருநெல்வேலி, இராமேஸ்வரம் போன்றப் பெருந் தலங்களில் மதிற்சுவர்களை அடுத்துத் தேரோடும் வீதி ஒன்று மட்டுமே உள்ளது.

ஆனால் இத்திருக்கோயிலுக்குள்ளே ஆடிவீதி என்ற பெரிய வீதியுள்ளது. வெளிப்புறத்தேயும் சித்திரை வீதிகள் 4, ஆவணி மூல வீதிகள் 4, மாசி வீதிகள் 5, வெளிவீதிகள் 4 ஆக 16 வீதிகளும் வளைந்தும் நெளிந்தும் அமையாமல் நேராக சீராக நூல் பிடித்துக் கட்டப்பட்டது போலக் காட்சித் தருகின்றன. கோயிலை நடுநாயகமாக வைத்துச் சுற்றிலும் சிறிய பெரிய சதுரமாக வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொற்றாமரைக் குளம் : தெய்வத் திருப்பாதங்களைத் திருத்தாமரை என்பர். இத்தகைய புனிதமிகு பொற்றாமரைகள் மலரும் பொற்றாமரைக் குளமொன்று இத்திருக்கோயிலில் இருக்கிறது.

விருத்திராசூரன் என்ற அசுரனைக் கொன்றதால் இந்திரனைப் பிரம்மஹத்தி பாவம் பிடித்துக் கொண்டது. விண்ணிலும் மண்ணிலும் அவனைப் படாத பாடுபடுத்தியது. புண்ணிய தீர்த்தங்கள் எதில் மூழ்கியும் பயன் ஏற்படவில்லை.

ஒரு நாள் பாண்டிநாட்டுக் கடம்ப வனத்தின் வழியாகப் போய்க் கொண்டிருந்தபோது அக்கொலைபாவம் தன்னை விட்டு நீங்கியதாக உணர்ந்தான். தேடிப் பார்த்தபோது ஒரு குளமும் அதன் கரையில் கடம்ப மரநிழலில் ஒரு சிவலிங்கமும் இருப்பதைக் கண்டான்.

எனவே பொற்றாமரைகளை எடுத்து அர்ச்சனை செய்தான். அந்தச் சிவலிங்கத்திற்கு ஒரு அழகான விமானமும் கட்டி முடித்துத் தெய்வலோகம் திரும்பினான். அந்த சிவலிங்கமே மதுரை சொக்கலிங்கமாக விளங்கும் மூலவரானார்.

தமிழ் அரங்கேற்றம் : தமிழ்ப் புலவர்கள் கவிதைகளை இயற்றி, கவிஞர்கள் முன்னிலையில் விளக்கியபின் பொற்றாமரைக் குளத்தில் இடுவர். தாமரைத் தாங்கிகொண்டால் நல்ல நூல். தண்ணீரில் மூழ்கினால் சங்கப் பலகை ஏற்றுக் கொள்ளவில்லை

நந்தி

ஆலயத்தில் பலிபீடத்திற்கும் சிவலிங்கத்திற்கும் இடையில் அமைந்திருக்கும் நந்தி, பாசத்தைத் துறந்த ஆன்மாவின் சின்னம். பாசத்தை விட்டால் சிவஒளியிலே ஐக்கியமாகலாம் என்பதை நந்தி உணர்த்துகின்றது.

என்று கருதப்பட்டது.

இக்குளக்கரையில்தான் திருக்குறள் அரங்கேற்றம் நடைபெற்றது. இதன் நினைவாக குளத்தின் தென்புறத்தில் 1330 அருங்குறளும் வெண்ணிறக் கல்லில் பொறிக்கப்பட்டு உள்ளது. தேவார திருவாசகப் பதிகங்களும், சிவஞான போதப் பாடல்களும், அபிராமி அந்தாதிப் பாடல்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

''தவளத் தாமரை தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே''

என்ற பாடல் எழுந்தது.

திருக்கோயில் சிறப்பு : கிழக்கு மேற்காக 920 அடி, தெற்கு வடக்காக 740 அடி நீளமுள்ள மதிற் சுவர்களைக் கொண்டது. 15 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. திருக்கோயிலை வலம் வந்தால் ஒரு கிலோ மீட்டர் நடந்ததற்குச் சமம், சிற்பக்கலை, கட்டிடக் கலை முதலிய ஆயகலைகள் அறுபத்தி நான்கையும் வளர்த்து வந்திருக்கிறது.

சமுதாய நல மையமாய், புலவர் கூடும் மேடையாய், வண்ணக்களஞ்சியமாய், அமுது படைக்கும் அறச்சாலையாய், ஓவியக் கருவூலமாய், சிற்பக்கூடமாய், இசைக்கலையின் இருப்பிடமாய் விளங்கி வந்திருக்கிறது. 33,000 சிற்பங்களை ஒரு தொகுதியாக இவ்வாலயத்தில் காணலாம். கட்டிடக் கலைஞர்களின் கைவண்மைக்கு எடுத்துக் காட்டாகவும், கதை வேலைப்பாட்டிற்கு எடுத்துக் காட்டாகவும் உள்ளன. கல்லெல்லாம் கவிபாடும், கதை சொல்லும்.

எல்லாத் திருக்கோயிலிலும் இறைவனுக்கு இடது புறமாக இறைவி இருக்க இங்கு மட்டும் வலப்புறத்தே இருக்கும் காட்சியைக் காணலாம். மணமேடையில் இருப்பது போலக் கிழக்கு நோக்கியவாறு இருக்கின்றனர். எல்லா வகையிலும், அன்னைக்கே முதலிடம் வழங்கப்படுகிறது.

கரிக்குருவிக்கும், பன்றிக்குட்டிகளுக்கும், அருள்பாலித்த அம்மையும் அப்பனும் அருள் சுரக்கக் காட்சித் தருகின்றனர்.

அம்மன் சன்னதி வழியாகக் கோயிலுக்குள் நுழைந்து அம்மனை வழிபட்ட பிறகே சொக்கரை வணங்கி மீண்டும் அம்மன் சன்னதி வழியாகவே வீட்டிற்குத் திரும்புகின்றனர்.

பெயர் சிறப்பு : அன்னை கயல் போன்ற கண்களைப் பெற்றிருப்பதால் அம் கயல் கண்ணி என்றும், மீன் கொடிக்கு உரியவள் ஆதலால் மீனாட்சி என்றும் போற்றி வணங்குகின்றனர்.

மீன் தன் முட்டைகளைப் பார்வையாலே தன் வயப்படுத்தி குஞ்சுப் பொரிப்பது போலத் தன்னை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் ஊழ்வினைகளையும் தன் மீன் போன்ற கண்களின் அருட்பார்வையால் அகற்றி அவர்கட்கு அருள் பாலிக்கிறாள். ஆகையால் தான் பாரதி, ''அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாம்'' எனப் பாடுகின்றார்.

அங்கயற்கண்ணி, அபிடேகவல்லி, தடாதகை பிராட்டி, மாணிக்க வல்லி, தமிழறியும் பெருமாட்டி என்ற பல பெயர்களும் அன்னை மீனாட்சியை அலங்கரிக்கின்றன.

கொண்டையில் முத்துக் கொண்டை என்ற அணிகலனும், தலையில் மணிமுடியும், மூக்கில் மாணிக்க மூக்குத்தியும், காதுகளில் சூரிய சந்திரத் தோடுகளும், நெற்றியில் மங்கள குங்குமமும் அணிந்து, எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமாக, நரை பழுத்த துறைத் தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையாகத் திகழ்கின்றாள்.

அங்கயற்கண்ணியின் அருட்கொடை

திருமலை மன்னருடைய ஆட்சிக் காலத்தில் ஐந்து வயது வரையில் ஊமையாய் இருந்து முருகன் திருவருளால் பேசும் ஆற்றல் பெற்று கந்தர் கலிவெண்பா பாடிய கவிவாணர் காசிக்கு செல்ல மதுரைக்கு வந்தார்.

கந்தனைப் பாடிய சுந்தரத் திருவாயால் தமிழ் அன்னை மீனாட்சி மீது பிள்ளைத் தமிழ் பாட வேண்டினார். ஆறுகால் மண்டபத்தில் அமர்ந்து திருமலை நாயக்கர் முன்னிலையில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றினார்.

தேனினுமினிய தெள்ளுதமிழில் வருகைப் பருவத்து ஒன்பதாவது பாடல் ''தொடு கடவுட் பழம் பாடல்'' என்ற பாடலை உளமுருகப் பாடினார். பாடலைக் கேட்ட அன்னை ஒரு குழந்தை வடிவில் தோன்றி, மன்னர் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றிக் கவிஞர் கழுத்தில் அணிவித்து மறைந்தது. அனைவரும் அங்கயற்கண்ணியின் அருளை வியந்து போற்றினர்.

கண்ணொளி வழங்கிய கருணை

அமைச்சர் நீலகண்ட தீட்சதரின் வேண்டுகோளின்படி திருமலை நாயக்கர் வசந்த விழாமண்டபத்தைக் கட்டினார். உள் மண்டபத்

தூணில் சுந்தரமூர்த்தி ஆச்சாரி என்பவர் திருமலை மன்னன், அவருடைய மனைவியர் சிலைகளை வடித்துக் கொண்டிருந்தார். அப்போது அரசியின் உருவத்தில் பெருந்தொடையில் ஊனம் ஏற்பட்டது. எவ்வளவு கவனமாகச் செதுக்கியும் செப்பனிட முடியவில்லை. அப்போது அங்கு வந்த அமைச்சர் ஊனம் அப்படியே இருக்கட்டும் என்று ஆணையிட்டுச் சென்றார். அரசியின் பெருந் தொடையில் சிலையில் ஊனம் ஏற்பட்ட இடத்தில் தழும்பு ஒன்று இருந்தது. திருமலை மன்னனுக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய மறைவான செய்தியை அமைச்சர் எங்ஙனம் அறிந்தார் என்று அரசன் ஐயம் கொண்டான். குற்றமொன்றும் தாம் செய்யாத போது கொற்றவன் ஐயம் உற்றதை உணர்ந்து அன்னை அங்கயற்கண்ணியை வேண்டி, சூடத்தைக் கொளுத்தித் தன்னிரு கண்களிலும் வைத்துக் குருடாக்கிக் கொண்டார். செய்தி மன்னருக்கு எட்டவே மிகவும் வருந்தித் துன்புற்றான். அன்னையின் திருவருளால் மீண்டும் கண்ணொளியை அமைச்சர் பெற்றார். அன்னையின் அருட்திறம் கண்டு ஆனந்தப் பேருவகையோடு நன்றி பெருக்கோடு போற்றி வழிபட்டார்.

ஆங்கிலேயரின் அன்பு காணிக்கை

இன்றைக்கு 170 ஆண்டுகட்கு முன்னர் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவராக ரோஸ்பீட்டர் என்னும் ஆங்கிலோ கிருத்துவர் நீதி தவறாது நேர்மையான முறையில் மக்கள் நலங் கருதியே ஆட்சி செய்து வந்ததால் ''பீட்டர் பாண்டியன்'' என்றே மக்கள் இவரை அழைத்தனர். பிறப்பால் கிருத்துவரே ஆயினும் அன்னை மீனாட்சியின்பால் அளவு கடந்த பக்தியுடையவர்.

ஒரு நாள் நள்ளிரவில் இடிமின்னலுடன் பெரு மழை பெய்து கொண்டு இருந்தது. ரோஸ் பீட்டர் அப்போது தம் மாளிகையின் மாடியில் ஒரு கட்டிலில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு சிறுமி துரையின் கட்டில் அருகே வந்து கையைத் தட்டி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஆட்சியாளரை எழுப்பிவிட்டு மிக விரைவாகக் கீழே இறங்கி ஓடினாள்.

ரோஸ் பீட்டர் திடுக்கிட்டெழுந்து சிறுமியைப் பின்தொடர்ந்து கட்டிடத்திற்கு வெளியே ஓடினார். அடுத்த வினாடியிலேயே இடிந்து விழுந்து மாடி சரிந்து தரைமட்டம் ஆவதையும், தாம் படுத்திருந்த கட்டில் முறிவதையும் கண்டு அதிர்ச்சி அடைந்தார். அந்த சிறுமி கோயிற் கோபுரத்துக்குள் நுழைவது போன்ற காட்சி அவருக்குத் தோன்றியது. அன்னையே தன்னைக் காப்பாற்றியதாகக் கருதிக் காணிக்கை வழங்க விரும்பினார். 28 தோலா எடையில் 412 சிவப்புக் கற்களும், 80 பச்சைவைரமும் 72 மரகதக் கற்களும் நான்கு முத்தும், நான்கு நீலமும், நான்கு வைடூரியமும் பதிக்கப் பெற்ற இரண்டு மிதியடிகளைச் செய்து, அன்னையின் இரு திருவடிகளையும் தாங்கும் வண்ணம் செய்து காணிக்கை அளித்தார்.

ஓய்வு பெற்ற பிறகும் மதுரையிலேயே தங்கி மீனாட்சி அம்மனின் அருளை நன்றிப் பெருக்குடன் போற்றினார். மீனாட்சி அம்மனின் கோபுரத்தை பார்த்த வண்ணமே அவரது உடல் கல்லறையில் அடக்கம் செய்யப் பெற்றுள்ளது.

முக்கிய விழாக்கள்

இத்தகைய அருள்மிகு அன்னை மீனாட்சி அம்மனுக்கு திங்கள்தோறும் வைரகிரீடம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

வெள்ளிக்கிழமை அம்மனுக்குரிய சிறப்பு நாளாகும். சுக்கிரவார அம்மன் ஊஞ்சல் மண்டபத்திற்கு வரும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நலுங்குப் பாட்டுப் பாடித் தீபாரதனை நடைபெற்ற பின் இந்த அம்மன் பள்ளியறை திரும்பும். சித்திரைத் திருவிழாவின் எட்டாம் நாள் மீனாட்சி அம்மனுக்குப் பட்டாபிஷேகம் விழா நடைபெறும். ஆறுகால் பீடங்களில் மீனாட்சி அம்மனுக்குக் கிரீடம் சாற்றிக் கையில் செங்கோல் கொடுத்தபின் ஆலயத் தக்கார் அல்லது அறங்காவலர் குழுத் தலைவர் அம்மனிடமிருந்து மேற்படி, செங்கோலைப் பெற்று அனைத்து மரியாதைகளுடன் அம்மன் கோயிலிருந்து புறப்பட்டு சுவாமி கோயில் இரண்டாம் பிரகாரம் வழியாக வலமாகக் கொண்டு வந்து மீண்டும் மீனாட்சி அம்மன் திருக்கரத்தில் சேர்ப்பார்.

மறுநாள் திக் விஜய விழாவும் பத்தாம் நாள் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண விழாவும் நடைபெறுகின்றன.

இக்காட்சிகளைக் கண்டு களிக்க - இறையருள் பெற எண்ணற்ற மக்கள்கூட்டம் கடல்போல் மோதும்.

பொன் ஊதியமலை

காங்கேயத்திலிருந்து பழநிசெல்லும் வழியில் 13 கி.மீ. தூரத்தில் உள்ளது பிரசித்தி பெற்ற ஊதியூர் மலைக்கோயில். இங்குக் கோயில் கொண்டு அருள்பாலிப்பவர் உத்தண்ட ஸ்ரீவேலாயுத சுவாமி.

கொங்கண சித்தர் இம்மலையில் தங்கியிருந்து தம் இரசவாதத்தால் பொன் தயாரித்தார் என்று கூறப்படுகின்றது.

அவர் பொன் ஊதிய காரணத்தால் இம்மலைக்குப் பொன்ஊதியமலை என்ற பெயர் ஏற்பட்டு நாளடைவில் ஊதிய மலை எனச் சுருங்கி இன்று ஊதியூர்மலை என்று வழங்கப்பட்டு வருகின்றது.

மகாபாரதம்

முனைவர் த. அமிர்தலிங்கம்

24

பத்தாம் நாள் போர் - வீடுமர் வீழ்ந்தார்.

பத்தாம் நாள் போருடன் தம்முடைய பணியை முடித்துக்கொள்வதாக வீடுமரே உறுதி அளித்திருந்த படியால் அன்றைய தினம் வரை அவரைக் கண்டால் ஓடி ஒளிந்து கொண்டிருந்த பாண்டவர் சேனையிலிருந்த பலப்பல மன்னர்களும் பத்தாம்நாள் போர் அன்று ஆர்வமாக முன்வந்து வீடுமருடன் போர் புரிகின்றார்கள்.

துருபத, மகத, கலிங்க, கருணாடக, சோனக, சிங்கள, கடார, கோசல நாட்டு மன்னர்கள் இவ்வாறு வீடுமர் மேல் ஒரு சேர வந்து அம்புகள் ஏவ, வீடுமரும் அவற்றையெல்லாம் தன் மேனியில் தாங்கி ஆரம்பத்தில் தளர்ந்தே போய் விடுகிறார் என்றாலும் சிறிது நேரத்திலேயே தம்மைச் சமாளித்துக் கொண்டு சிங்கம் போல சீறி அவர்களை எல்லாம் பொருது விரட்டி அடிக்கிறார்.

''தான் தளர்ந்தாலும் தன் வீரம் யாருக்கும் எந்நாளிலும் சாயக் கூடியதல்ல'' என்பதைத்தான் இன்றைக்கு வீடுமர் நிலை நிறுத்திக் காட்டுகிறார், பெருங்காற்றினால் வீசி எறியப்படும் புழுதியைப் போல இன்றைய தினம் வீடுமரை எதிர்க்கும் பாண்டவர் படையினர் பயந்து ஓடி வந்த வழியே திரும்புகிறார்கள். வீடுமருடைய வில் வீரத்திற்கு முன்னால் விசயனுடைய வில் வீரமும் கூட நிற்க வல்லதன்று; அதுவும் இறுதி நாளாகிய இன்று என்பதே இன்றைக்குக் காண நேரும் உண்மை.

''ஒருத்தன் ஓட என்னிதென்று அநேகர் அஞ்சி ஓடுவார்
விருத்தன் வில்வளைத்த ஆண்மை விசயனுக்கு இசையுமோ?''

என்கிறார் வில்லிபுத்தூரார்.

வீடுமருக்குத்துணையாக அப்போர்க்களத்தில் சோழவேந்தனும், கிருபாச்சாரியனும், துரோணரும், அசுவத்தாமனும், செயத்திரதனும், சகுனியும், பகதத்தனும், சல்லியனும் துரியோதனனுடைய தம்பிமார்கள் பலரும் வந்து சேர்ந்துவிட பத்தாம் நாள் போரில் மிகப் பெரிய ஆதாயத்தை எதிர் நோக்கியிருக்கும் கண்ண பெருமான், மிகப்பெரிய இழப்பினையே காணும்படியாக, பாண்டவப் படையினர் பலரும் மாண்டு மடிய நேர்கிறது என்றால் பத்தாம் நாள் போரின் கடுமையை என்னவென்று கூறுவது?

வீடுமரால் வதைத்தழிக்கப்பட்ட தலைகள், மலை போலும் தோள்கள், தாமரை மலர் போலும் கைகள், கொடிபோல் சுற்றிய குடல்கள், எலும்புகளின் வரிசைகள், அழகிய துடைகள் இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி மாளாது, எண்ணவும் நம் நெஞ்சம் தாளாது.

''எத்தனை முடித்தலைகள் எத்தனை
புயக்கிரிகள் எத்தனைக் கரக்கமலம் வேறு



வில்வத்தின் சிறப்பு

ஒரு வில்வ இலை இலட்சம் சொர்ண புஷ்பத்திற்குச்சமமாகும்.

ஒரு வில்வ இலை சிவனுக்கு அர்ப்பணித்தால் சகல பாவங்களும் நீங்கி அனைத்து நன்மைகளும் உண்டாகும்.

வில்வமரம் வளர்த்தால் அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்.

ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் கிடைக்கும்.

கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலன் கிடைக்கும்.

காசி முதல் இராமேஸ்வரம் வரையுள்ள சிவத்தலங்களை வழிபட்ட பயன் கிடைக்கும்.

எத்தனை உடற்சுமைகள் எத்தனை உறுப்பின் நிணம்
எத்தனைக் கொடிக்குடர்கள்
எத்தனை நிணத்தடிகள் எத்தனை
நரம்புவகை எத்தனை எலும்பு நிரைமேல்
எத்தனை மணித்தொடர்கள் எத்தனை
மலர்க்கழல்கள் இற்றன களத்தினிடையே''

-பத்தாம் போர்ச்சருக்கம் 25

தாம் எண்ணியதற்கு மாறாகப் போர் வெற்றித் திசையில் அன்றி வேறு திசையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக் காணுகின்ற கண்ண பெருமான், உடனே தம்முடைய பாஞ்சசன்னியத்தை எடுத்துத் தம் திருவுதடுகளில் வைத்து முழக்குகிறார். அவருடைய சங்க நாதமே, தளர்ந்து போன பாண்டவர்களுக்குப் புது வேகத்தையும், வெற்றிச் செருக்கோடு திரியும் வீடுமருக்கும் துரியோதனன் படைகளுக்கும் பயத்தையும் ஊட்டி, அர்ச்சுனனுக்கும், வீமனுக்கும் புதிய தெம்பினை உண்டாக்குகின்றது.

காண்டீபத்தில் அர்ச்சுனன் ஏவும் ஒரு அம்பு, நூறு அம்புகளாகச் சீறிச்சென்று, வீடுமருக்குத் துணையாக வந்த வேந்தர்களை எல்லாம் அஞ்சி அகலும்படிச் செய்கிறது. அதே நேரத்தில் வீமனும் தன்னுடைய ''சத்துரு காதினி'' கதைக்கு நல்ல பசி எடுத்துவிட்டது போல் பாய்ந்து பாய்ந்து தாக்கி துரியோதனன் படையை மாய்த்தழிக்கிறான்.

''தாத்தாவுக்குப் பேரர்கள் சற்றும் சளைத்தவர்கள் இல்லை'' என்பதை வீமார்ச்சுனர்கள் தம்முடைய போர்த் திறத்தால் வீடுமருக்கு உணர்த்துகின்றனர். அந்தப் பத்தாம் நாள் போரில் சோழனும் கிருபனும் துரோணரும் அசுவத்தாமனும் செயத்திரதனும் சல்லியனும் சகுனியும் துரியோதனனின் தம்பிகளும் வீடுமரைக் காக்க வந்தவர்கள் இப்பொழுது தங்களைக் காத்துக்கொள்ள வேறு வழி இல்லாமல் 'எங்கே அர்ச்சுனனின் காண்டீபம் நோக்குமோ?' 'எங்கே வீமனின் சத்துருகாதினி தாக்குமோ?' என்பதாக அஞ்சி, நின்றாலும் ஆபத்து, நடந்தாலும் ஆபத்து, ஓடினாலும் ஆபத்து என்று எண்ணிப் பறக்கின்றார்கள் களத்தை விட்டே

''அர்ச்சுனா! வீடுமரை வதைத்தழிக்க இதுதான் சமயம் தொடு கணையை, சிகண்டியை முன் நிற்கச் செய்' என்பதாகக் கண்ணபெருமானும் காலமறிந்து உடன் கட்டளையிடுகிறார். அர்ச்சுனனும் சிகண்டியை உடன் அழைத்து வீடுமருக்கு முன்னே நிற்குமாறு செய்து தானும் வீடுமர் மேல் அம்புகளைப் பொழிகிறான்.

''பேர்பெறும் சிகண்டி தலையாக முன்பு
கொண்டு உலகு
பேரும் அன்று இன்றுகொல் எனப்
போர்தொடங்கி வென்றிபுனை வீடுமன்
தடங்கண்
எதிர்போயினன் தனஞ்சயனுமே''

-பத்தாம் போர்ச்சருக்கம் 30

வீடுமர், களத்தில் சிகண்டியானவன் தனக்கு எதிர் வரப்பார்த்தவுடன் **''ஆதி அம்பை பகை இன்று மூளவந்தது''** என்று கூறியவாறே தம்முடைய ஆயுதங்களை எல்லாம் கீழே போட்டு வெறுங்கையோடு நின்றுவிடுகிறார். அதே நேரத்தில் சிகண்டியின் கணைகளும் அர்ச்சுனன் கணைகளும் வீடுமர் மேல் பாய்ந்தவண்ணம் இருக்கின்றன.

வீடுமர், பெண்ணாக பிறந்து ஆணாக மாறிய சிகண்டியிடம் போர் செய்வது தம் ஆண்மைக்கு இழுக்கு என்பதனாலேயே சிகண்டி தன்னை எதிர்த்துப் போர் செய்ய வந்ததும் பத்தாம் நாள் போரில் தம்முடைய ஆயுதங்களை எல்லாம் கீழே போட்டு விட்டு நிராயுதபாணியாக நிற்கிறார். தன்னால் மணம் மறுக்கப்பட்ட அம்பையே தன்னைக் கொல்லும் பொருட்டு சிகண்டியாக வந்திருப்பதையும் அவர் அறிந்திருப்பதனால் தான் ''ஆதி அம்பை பகை இன்று மூள வந்தது'' என்றும் கூறுகிறார்.

அம்பையின் மறுபிறப்பாகிய சிகண்டியின் கையினால் மடிவதையும் வீடுமர் விரும்பவில்லை. அதனால்தான் முதல் நாள் போரின் போதே தம்மிடம் நல்லாசியைக் கோரி வந்த கண்ண பெருமானிடமும், பாண்டவர்களிடமும் பத்தாம் நாள் போரில் சிகண்டியை முன்னிற்க வைத்து, அர்ச்சுனன் தம் மேல் கணை தொடுக்கத் தாமும் தம் போர்ப்பணியை முடித்துக் கொள்வதாக வாக்கும் அளிக்கிறார்.

சத்திய விரதனாகிய வீடுமர் அளித்த நல்வாக்கின் படியேதான் பத்தாம் நாள் போரில் சிகண்டியை முன்நிற்க வைத்து அர்ச்சுனன் வீடுமர் மேல் கணைகளைத் தொடுக்க வைக்கிறார் கண்ணபெருமான். சிகண்டியின் அம்புகளால் வீடுமரின் மேனியைத் தொட முடிகிறதே தவிர, துளைக்க முடியவில்லை. அதே நேரத்தில் துரியோதனனின் தம்பி துச்சாதனன் வீடுமருக்குத் துணையாக விரைந்து ஓடி வந்து சிகண்டியின் மேல் பல பாணங்களை ஏவி அவனுடைய வில்லையும் ஒடித்துவிட, சிகண்டி வந்த வழியே திரும்ப

நேரிடுகிறது.

வீடுமரை வீழ்த்துவதற்கான அருமையான வாய்ப்பு அர்ச்சுனனுக்குக் கிடைத்தது. ஆனால் அதைத் துச்சாதனன் நடுவில் புகுந்து தடுத்துவிட வீடுமர் மீண்டும் தம் கைகளில் வில்லினை ஏந்தி அர்ச்சுனன் மேலும், தேரைச் செலுத்தும் பார்த்தசாரதியின் மேலும் காயம் உண்டாகுமாறு கணைகளைத் தொடுக்கிறார். கண்ணபெருமான் மீதே வீடுமர் கணைகளை ஏவிக் காயப்படுத்த கடுங்கோபம் உண்டாகிறது அர்ச்சுனனுக்கு. அவனுடைய காண்டீபத்திலிருந்து தொடுக்கப்படும் நூற்றுக்கணக்கான அம்புகள் துச்சாதனனின் தேர்க்கொடியை வீழ்த்தி, தேர்க்குதிரைகளை வதைத்து, தேர்ப்பாகனையும் கொன்று, துச்சாதனனின் வில்லையும் ஒடித்து வீரசாகசம் புரிய, துச்சாதனன் வீடுமரை விட்டு விட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தரையில் குதித்துத் தப்பி ஓடுகிறான்.

அதே நேரத்தில் வில்லொடிந்து பின்வாங்கிய சிகண்டியை அர்ச்சுனன் மீண்டும் அழைத்து வந்து வீடுமருக்கு முன் நிறுத்துகிறான். ''சிகண்டி அஞ்சாதே! தைரியமாக நின்று போர் செய், கணைகளை ஏவு'' என்று சிகண்டியின் பக்கத்திலிருந்து அம்புகளைப் பொழிகிறான் அர்ச்சுனன்.

சிகண்டியின் சில கணைகளோடு அர்ச்சுனனின் ஆயிரக்கணக்கான கணைகள் பாயவும், வீடுமர் தம் மேனி முழுவதும் எள்ளிருக்க இடமின்றி அம்புகள் துளைத்துவிட அப்படியே இந்தக் குருச்சேத்திரக் களத்திலே பத்தாம் நாள் போர் நிறைவுறும் தருவாயில் சாய்ந்து விழுந்து விடுகிறார். தன்னுடைய மேனியைத் துளைத்த அம்புகள் அனைத்திலும் அர்ச்சுனனின் நாமமே பொறித்திருக்க கண்டு தம் பேரனால் தானே தம்மைச் சாய்க்க முடிந்தது என்பதாக எண்ணி, **'தனஞ்சயன் செய் பெருவாழ்வு இது'** என்று கூறி சந்தோசப்படுகிறார் வீடுமர். வீடுமரின் வீரமான வீழ்ச்சி கண்டு தேவர்கள் எல்லாம் கூட ஆனந்தக் கண்ணீர் வடித்து ஆகாயத்தில் இருந்தவாறே கற்பக மலர்மாரி பொழிந்து அவரை வாழ்த்துகிறார்கள்.

''வீடுமர் வீழ்ந்தார்'' என்ற சேதி கேட்டவுடன் அப்படி அப்படியே போரை நிறுத்திவிட்டு பாண்டவர்களும் கௌரவர்களும் அவரிருக்கும் இடத்திற்கு விரைந்து வந்து அவருடைய திருவடிகளைப் பணிந்து கண்ணீர் சொரிகிறார்கள்.

''இங்கும் தருமன் முதலா வுள்ள மன்னரும்
அங்கும் துரியோ தனனை ஆதி ஆன அரசர்
பொங்கும் கடல் உலகம் பொன்றும் அன்றுபோலச்
சிங்கம் அன்னான் பாதம் சென்னிமேற் கொண்டழுதார்.''

- பத்தாம் போர்ச்சருக்கம் 39

பாண்டவர்களும், கௌரவர்களும் ஒருசேர வீடுமரின் பெருமைகளை எல்லாம் எடுத்துக் கூறிப் புலம்பி அழுகிறார்கள். ''உங்களுடைய வீரம் என்ன? உங்களுடைய தோளாற்றல் என்ன? உங்களுடைய அத்திரப்பயிற்சி என்ன? உங்களுடைய அறிவு என்ன? அன்பென்ன? பண்பென்ன? தந்தையின் சுகத்திற்காகவே தம் சுகம் துறந்த பிதாமகரே! இனி எங்களில் யார் வென்றாலும் எங்களுக்கு முடி சூட்டி வைக்க நீங்கள் இல்லையே' என்பதாக அவர்கள் அழுது புலம்பிகிறார்கள்.

''மறமும் வாகுவலியும் வல்வில் முதல்எப் படையின்
திறமும் தேஅம் வாழ்வும் சீரும் கேள்விச் செலவும்
நிறமும் உண்மை யறிவுநெறியும் புகழும் திகழ்பேர்
அறமும் பொன்றும் நின்னொடு ஐயா அந்தோஅந்தோ.''
''தந்தை யின்ப மெய்த் தவமே இன்பமாகச்
சிந்தை தெளியு ஞானச் செல்வா செஞ்சேவகனே
முந்தை மரபுக் கெல்லாம் முதல்வா ஞாலம்முழுது
எந்தையாள வைப்பார் இனியார் கோவே என்றார்.''

- பத்தாம் நாள்போர்ச்சருக்கம் 40, 41

என்ற பாடல்களில் வில்லிபுத்தூராரும் வீடுமரின் வீழ்ச்சியைக் கண்டு கலங்கிக் கண்ணீர் விடுவதைக் காணுகிறோம்.

இப்படி கௌரவர், பாண்டவர் தோன்றவே வித்திட்ட மூலவராம் வீடுமரை அவருடைய நற்சொல்லைக் கேளாமல் போரினை உண்டாக்கி சாய்ந்து மண்ணில் விழுமாறு செய்துவிடுகிறான் துரியோதனன். அந்த துரியோதனனும் இப்பொழுது வீடுமர் வீழ்ந்துவிட்ட நிலையில் அவருடைய திருவடிகளைப் பணிந்து கதறி அழுது கண்ணீர் விடுவதைக் காண்கிறோம்.

பூபாரம் தீர்க்க வந்த கண்ணனின் கட்டளைக்கிணங்க தன் கணைகளால் வீடுமரைத் துளைத்து எடுத்துவிட்ட அர்ச்சுனனும் கண்ணீர் விடுவதைக் காணுகின்றோம். ஆனால் வீடுமருக்கோ தம்முடைய பேரர்கள் எவரிடமும்

ஏர் அழிஞ்சில் மரத்தின் ஏற்றம்

அழகும் சிறப்பும் வாய்ந்த அழிஞ்சில் மரத்தை ''ஏர் அழிஞ்சில்'' என்று கூறுவர்.

விசேடத் தன்மை கொண்ட இம்மரம் அரிதாகவே காணக் கிடைக்கின்றது.

மற்ற மரங்களைப் போன்றே இம்மரம் தழைத்து வளரும், பூக்கும், காய்க்கும், பழுக்கும். ஆனால் இம்மரத்தின் பழங்கள் பழுத்துத் தரையில் விழுந்தால் விழுந்தவுடனே துள்ளி, மரத்திலேயே ஒட்டிக் கொள்ளும்.

இம்மரத்தை சிவானந்தலகரியில் ஆதிசங்கரரும் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் சின்னகாவணம் எனும் ஊரில் அருள்மிகு நூற்றெட்டீசுவரர் திருக்கோவிலில் தலவிருட்சமாக ஏர்அழிஞ்சில் மரம் திகழ்வதைக் கண்டு வியக்கலாம்.

திருவான்மியூரில் தங்கரத வெள்ளோட்ட விழா

திருவான்மியூர் அருள்மிகு மருந்தீஸ்வர் ஆலயத்தில் ரூ. ஒரு கோடி மதிப்பீட்டில் தங்கரதம் அமைக்கப்பட்டு அதன் வெள்ளோட்ட விழா 10.3.06 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அரசுச் செயலாளர் திருமிகு **டாக்டர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.** அவர்களும், மதுரை காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் **கு.ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப. (ஓய்வு)** அவர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திருமிகு **எஸ். இராஜப்பா** அவர்களும், செயல்அலுவலர் திருமிகு **தெ.ப.ஏகாம்பரம்** அவர்களும் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

எள்ளளவும் வருத்தம் ஏற்படவில்லை. மாறாக பஞ்சசயனங்களைக் காட்டிலும் அர்ச்சுனனின் அம்பு சயனமே தமக்கு இனியதாக உள்ளதெனப் பாராட்டிக் கூறி, தன்னுடைய தலை தாழாமல் இருக்கச்செய்வாய் என வேண்டுகிறார்.

அர்ச்சுனனும் மீண்டும் மூன்று அம்புகளை ஏவி வீடுமரின் தலை உயர்ந்திருக்க தலையணை அமைக்கிறான். 'தாகமாய் இருக்கிறது' என்றும் வீடுமர் கூறுகிறார். உடனே அர்ச்சுனன் தன் காண்டீபத்தை வளைத்துப் பூமியைத் துளைத்துக் கணையினை ஏவச் சாகக் கிடக்கும் தன் அன்பு மகனைக் கட்டி அணைத்துக் கடைசி முத்தம் கொடுப்பது போல கங்கையும் பீறிட்டோடி வந்து. வீடுமரின் தாகத்தைத் தணிக்க காண்கிறோம்.

தாகம் தீர்ந்த வீடுமர், துரியோதனனுடைய கண்ணீரையும் கூட துடைத்து 'கர்ணனை இனி சேனைத் தலைவன் ஆக்கியுத்தம் செய்க' என்று அன்போடு அவனிடமும் கூறுகிறார்.

'முன்னை வினைப் பயனால் யான் வீழ்ந்தேன், நீங்கள் யாரும் அதற்காக அழ வேண்டாம். இப்பொழுது தேவர்களுக்கு இரவாகிய தட்சிணாயணக் காலம், நான் தைத்திங்கள் முதல் நாள் முதலாகத் தொடங்கும் உத்திராயண காலத்தில் உயிர்விட்டு முததிபெறுவேன். அதுகாறும் யோகத்தால் என் உயிரை நிலை நிறுத்துவேன்' என்பதாக வீடுமர் கூற தருமரும் தம்மை ஆளாக்கிய தருமசீலராம் வீடுமருக்குத் தங்கியிருக்க தங்குமிடத்தையும் உடன் அமைத்துக் கொடுக்கிறார். வீடுமரும் தாம் உயிர் விடுவதற்கு உத்தமமான உத்தராயணக் காலத்தை எதிர்நோக்கி அங்கே யோக நித்திரை கொள்கிறார்.

வருணனுடைய மகனாகத் தோன்றியவர் வீடுமர். அவர் இவ்வாறு பாரதப் போரின் பத்தாம் நாள் போரில் மண்ணில் சாய்ந்து மரணத்தை எதிர் நோக்கியிருக்கிறார். இந்தச் சோகமான செய்தியை வருணனிடம் கூற விரைந்து செல்கிறானாம் அவனுக்குத் தோழனான கதிரவன்.

''இன்றுன் மைந்தன் பட்டனன் சென்று தந்தைக்கிசைப்பன்
என்று பரிதி மேலை திக்கின் எல்லைச் சேர்ந்தான்
அன்று அருணன் அன்பால் அழுது செந்நீராறாய்
மன்ற வெங்கும் பரந்த தொக்கும் செக்கர்வானம்''

- பத்தாம் போர்ச்சருக்கம் 46

(தொடரும்)

திருவிளையாடல் புராணம்

இரா. அரங்கசாமி

அட்டமாசித்தி உபதேசித்த படலம்

முன்பு ஒரு காலத்தில், திருக்கயிலாய மலையில் சிவபெருமான் வீற்றிருந்தார். அவர் அருகே, மரகதக்கொடியினைப் போன்று உமாதேவியார் எழுந்தருளி, தமது மலர்க்கைகளிலே மகேஸ்வரனுக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அன்பு காக்கும் குருமூர்த்தியாக இருந்தருளியவாறு ஈசனார் நந்திதேவர், பிருங்கி, மாகாளர் முதலிய சிவகணத்தலைவர்களுக்கும், சனகர் போன்ற அருந்தவ முனிவர்கள் நால்வருக்கும் அமுதம் ஊற்றெடுக்கும் சிவகதையைத் திருவாய் மலர்ந்தருளிக் கூறிக்கொண்டு இருந்தார்.

அப்போது முருகக் கடவுளுக்குப் பால் கொடுத்த கார்த்திகைப் பெண்களாகிய இயக்கமாதர்கள் ஆறுபேரும் தவவேடம் பூண்டு சிவபெருமான் முன்பு வந்து நின்று வணங்கித் தொழுது, ''பெருமானே! எங்களுக்கு அட்டமா சித்திகளையும் உபதேசித்தருள வேண்டும்'' என்று வேண்டினர்.

சிவபெருமான் தமது இடது பக்கத்திலே வீற்றிருந்த உமாதேவியாரைச் சுட்டிக் காட்டி, ''இந்த உமாதேவியே எங்கும் நிறைந்த பராசக்தியாகவும் உமாமகேஸ்வரியாகவும் திகழ்பவள். அட்டமா சித்திகள் என்கிற எட்டும் சேடியர்களாய் அவளுக்குத் தொண்டு புரிகின்றனர். நான் உங்களுக்கு அப்படி அருள் புரிந்தாலும் நீங்கள் உமாதேவியைச் சிந்தித்து வேண்டினால் தான் உங்கள் தீவினைகளைப் போக்கி அட்டமாசித்திகளையும் உங்களுக்குத் தந்து அருள்வாள்'' என்றருளினார்.

பிறகு அந்தக் கார்த்திகைப் பெண்கள் அனைவரும் முந்திய ஊழ்வினையின் பயனால் உமாதேவியாரைச் சிறிதும் சிந்திக்காமல் சிவபெருமான் அருளிய அட்டமாசித்திகளை முற்றிலும் மறந்து விட்டனர். அதனால் தன் சொல்லை மீறிய அவர்களின் மீது கோபம் கொண்ட சிவபெருமான், அந்தப் பெண்களை நோக்கி ''நீங்கள் அறுவரும் என் சொற்களைப் பொருட்படுத்தாத குற்றத்தைப் புரிந்ததனால் ''பட்ட மங்கை'' என்னும் தலத்திலுள்ள ஆலமரத்தின் அடியில் கற்பாறையாகக் கிடக்கக் கடவீர்கள்'' என்று சாபமிட்டார்.

அதைக் கேட்டுப் பயந்து நடுங்கிய அந்தப் பெண்கள் ''பெருமானே ! இந்தச் சாபம் எங்களை விட்டு எப்போது நீங்கும்?'' என்று கேட்டார்கள். அதற்குச் சிவபெருமான் ''நீங்கள் ஆயிரம் ஆண்டுகள் கற்பாறையாகக் கிடந்த பிறகு நாம் மதுரையிலிருந்து அங்கு எழுந்தருளி உங்கள் சாபத்தை நீக்கி, உங்களுக்குப் பழைய வடிவங்களையும் கொடுப்போம்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

கார்த்திகைப் பெண்கள் அனைவரும் பட்ட மங்கை என்னும் தலத்திலுள்ள ஆலமரத்தின் அடியில் கருங்கற்பாறைகளாக



உருமாறிக் கிடந்தனர். ஆலமரத்திலிருந்து உதிர்ந்த கனிகளால், அவர்களின் உடல் முழுவதும் புதைந்து மறையும் வகையில் அங்கேயே கிடந்தனர்.

இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் சென்ற பிறகு, நான்மாடக்கூடற் பெருமானான சோமசுந்தரக் கடவுள் ஒப்பற்ற ஞானாசிரியனாக வடிவங் கொண்டு, நீண்ட காலமாகக் கற்பாறைகளாக உருமாறிக் கிடக்கும் கார்த்திகைப் பெண்களின் முன்பு தோன்றினார். அவர்களது சாபத்தை நீக்கி அருள் புரியத்திருவுளம் கொண்டார்.



மதுரை மீனாட்சி அம்மன

உடனே பலவகை மலர்கள் தன் மேல் பொருந்துமாறு பூத்திருந்தது போல அந்த இயக்கியர் அறுவரும் கற்பாறை வடிவம் நீங்கியும், முந்திய வடிவம் பெற்றும் எழுந்தனர். இறைவனது திருவருட் பார்வையினால் அவர்களுடைய ஆணவம் நீங்கியது. அவர்கள் சிவபெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். சிவபெருமான் அவர்களது தலைகளின் மீது தமது திருக்கரத்தை வைத்து அட்டமாசித்திகளை உபதேசித்தும் அவற்றின் தன்மைகளை விளக்கியும் அருளினார்.

அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய எண் வகைச் சித்திகள்தான் அட்டமாசித்திகள் எனப் படுவன.

மிகச் சிறிய உயிர்களில் கூட மிகச் சிறு பரமாணுவாய்ச் சென்று தங்கும் நுணுக்கமான முறைக்கு **அணிமா** என்று பெயர்.

முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் எங்கும் நீங்காமல் நிறைந்துள்ள பெருமைக்குரியது **மகிமா** என்பது.

பெருமலை போலக் கனத்த ஒருயோகி கூட மிக மெல்லிய பரமாணுவைப் போல் கனமற்று மாறும் வித்தை **இலகிமா** ஆகும்.

இதற்கு மாறாக மிக மெல்லிய பரமாணுவை எடுக்கும் போது பெருமலை எனக் கனத்திருக்கும் வகைக்குக் **கரிமா** என்று பெயர்.

பாதாலத்தில் இருக்கும் ஒருவன் பிரமலோகத்திற்குச் செல்வதும், பிரம லோகத்திலிருந்து மீண்டும் பாதாலத்திற்குச் செல்லுதலும் **பிராத்தி**யாம்.

வேறு உடலில் புகுதலும், விண்ணில் உலவுவதும், தான் இருந்த இடத்திலேயே விரும்பிய இன்பங்கள் யாவையும் வரச்செய்தலும் **பிராகாமியம்** எனப்படும்.

விண்ணிலுள்ள சூரியன் தன் உடம்பினது ஒளியால் எல்லாவற்றையும் விளங்கச் செய்வது போல, மண்ணில் உள்ள பொருள்களையும் மூன்று காலங்களையும் வானத்தில் உள்ள பொருள் களையும் ஒருவன் தன் உடம்பின் ஒளியால், தான் இருந்த இடத்திலேயே விளங்கச் செய்து அறிதலாகிய சித்தியும் **பிராகாமியம்** எனப்படும்.

தன் விருப்பம் போல் ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் புரிவதுடன், சூரியன் முதலான நவகோள்களையும் தன் கட்டளைக்குக் காத்திருக்கும் படி செய்து சிவனைப் போல வீற்றிருப்பதே **ஈசத்துவம்**.

இது தவிர அவுணர், பறவைகள், விலங்குகள், பூதங்கள், மனிதர்கள் ஆகிய பல்வகை உயிர்கள் மட்டுமின்றி அஷ்டதிக்குப் பாலராகிய எண்மரையும் தன்வசப்படுத்திக் கொள்வது **'வசித்துவம்'** எனப்படும்.

இவை யாவும் அஞ்ஞானம் அகற்றி மெய்ஞானம் கண்ட பெரும் ஞானிகளின் விளையாட்டுகள் எனினும் சிவ யோகியர் இவற்றை விரும்புவதில்லை. ஏன் எனில் அவர்கள் உடலொடு நிழல் போலத் தொடர்வன இச்சித்திகள்.

எனவே அட்டமாசித்திகளால் அடையும் பயன்களை விட எம்மை அறிந்திருக்கும் சிவயோகியர் அடையும் பயன்கள் அதிகமாகையால் அவர்கள் இச்சித்திகளை விரும்ப மாட்டார்கள் என்று சிவபெருமான் இயக்கியர் அறுவருக்கும் உபதேசித்து அருளினர். பின்னர் அந்த இயக்கியர் அறுவரும் உமாதேவியாரின் தியான வலிமை யினாலேயே அட்டமா சித்திகளையும் நன்கு பயின்று பின்னர் கயிலையை அடைந்தனர்.

திருமணத் தடை அகல குழந்தைப்பேறு உண்டாக



★ ஏழு பிரதோஷங்கள் தொடர்ந்து சென்று சிவவழிபாடு செய்தால் திருமணம் ஆகாது என்று கைவிடப்பட்ட பெண்களுக்கும் திருமணம் நடைபெற்று விடும்.

★★ தொடர்ந்து இருபத்திஓர் முறை பிரதோசவழிபாடு செய்தால் புத்திரபாக்கியம் இல்லை என்று கைவிடப் பட்டவர்களுக்கும் குழந்தைப்பாக்கியம் உண்டாதல் நிச்சயம்.

பதில்



(இந்த இதழில் வாசகர்களின் வினாக்களுக்கு அருளரசு டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் வாக்கிலிருந்து விடைகள் வழங்கப் பட்டுள்ளன என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்)

★★★ திருமதி ந. விஜயலட்சுமி, ஓட்டேரி, சென்னை - 600012

கேள்வி : ''ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே'' என்பதன் விளக்கம் என்ன? தெரிவித்திட வேண்டுகின்றேன்.

பதில் : இந்தப் பழமொழிக்குப் பெண்கள் குடும்பத்தை அழித்துவிடுகின்றார்கள் என்ற பொருள் கொள்கின்றனர். இது பிழை.

பெண்கள்தாம், குடும்பத்தைக் கைதூக்கி விடுகின்றனர். ஆண்கள் குடித்தும், குதிரைப் பந்தயத்திற்குச் சென்றும், சீட்டாடியும் குடும்பத்தை அழிக்கின்றனர். தாய்க்குலமே சிக்கனமாகக் குடும்பத்தைக் காக்கின்றது.

''அழிவதும் பெண்ணாலே'' என்னும் சொற்றொடருக்குக் கணவனுக்கு வரும் துன்பங்களை மனைவி தன் முயற்சியினால் தீர்த்து வைக்கின்றாள் என்பது பொருள். இதற்குச் சான்றுகள் சந்திரமதி, சாவித்திரி வரலாறுகள்.

★★★ த. சத்திய நாராயணன், அயன்புரம், சென்னை -34

கேள்வி : ''கொன்றால் பாவம், தின்றால் போச்சு'' என்னும் பழமொழிக்குப் பொருள் விளங்கவில்லை. தெளிவுபடுத்த வேண்டுகின்றேன்.

பதில்: ஓர் உயிரைக் கொன்றால் அந்தப் பாபம் கொன்ற ஓர் ஆத்மாவைத் தொடரும். எமன் அந்த ஆத்மாவைப் பாசக்கயிற்றால் கட்டி, அவன் தசைகளை வாயில் வைத்து அடித்து நொறுக்கி உண்ண வைப்பான். தன் மாமிசத்தைத் தானே உண்ண வேண்டி வரும்.

இதற்கு விளக்கமாக அருணகிரிநாதரின் திருப்புகழ்ப் பாடற் பகுதியை காண்க.

''வருபவர்கள் ஓலை கொண்டு
நமனுடைய தூதரென்று
மடிபிடியதாக நின்று தொடர்போது
மயலது பொலாத வம்பன்
விரகுடையனாகு மென்று
வசைகளுடனே தொடர்ந்து அடைவார்கள்
கருவியதனால் எறிந்து
சதைகள் தனையே யரிந்து
கரிய புனலே சொரிந்து விடவேதான்
கழுமுனையிலே உயிர் என்று விடும் எனும்''

என்பது அருணகிரிநாதர் வாக்கு-

★★★ ஆ. குமார், விழுப்புரம்

கேள்வி : கற்பூர புத்தி, கரிபுத்தி, கதலித்தண்டு புத்தி என்று கூறுவது என்ன? பொருள் தெளிவுபடுத்திட வேண்டுகின்றேன்.

பதில் : கற்பூரம் தீப்பட்டவுடன் பற்றிக் கொள்ளும். அதைப்போல ஒன்றைச் சொன்னவுடனே சட்டென உணர்ந்து கொள்வது கற்பூரபுத்தி எனப்படும்.

கரியில் நெருப்பை வைத்து நன்கு விசிறியபின் கரி நெருப்பாகும். அதைப்போல ஒன்றைப் பலமுறை சொன்னால் புரிந்து கொள்வது கரிபுத்தி எனப்படும்.

கதலி என்பது வாழைமரம். வாழைத்தண்டில் தீ பற்ற வைப்பது எத்தனைச் சிரமமோ, அத்தனைச் சிரமத்துடன் ஒன்றைப் புரிய உணர்வது கதலித் தண்டு புத்தி எனப்படும்.

★★★ முருகானந்தம், உறையூர்

கேள்வி : பரதகண்டத்தில் தென்னாடே அதிலும் குறிப்பாக நம் தமிழ்நாடே உயர்ந்தது என்று கூறப்படுவதற்கு என்ன காரணம் என்பதை விளக்குக.

பதில் : உலகில் ஐந்து கண்டங்கள் உள்ளன. அவைகளில் உயர்ந்தது ஆசியாக் கண்டம். காரணம் உலகம் உய்ய வழிகாட்டியுள்ள மெய்கண்டார், ஆதிசங்கரர், புத்தர், இயேசு, நபிகள் நாயகம், குருநானக், இராமானுசர் முதலான மார்க்க தீர்க்கதரிசிகள் அவதரித்தது ஆசியாக் கண்டத்தில்தான்.

ஆசியாக் கண்டத்தில் உயர்ந்தது நம் பரத கண்டம். மண்தோன்றிக் கல்தோன்றிய காலந் தொட்டு உலகில் பிறந்த மக்கள் எங்ஙனம் வாழ வேண்டும் என்பதற்கு வேதபுராணச் சாத்திர வழிகளை வகுத்தும், தொகுத்தும் வழிகாட்டிய மகரிஷிகளும் மகான்களும், மனுநீதி மன்னர்களும், நீதிநெறியாளர்களும் தோன்றியது புண்ணிய பூமியான நம் பரத கண்டத்தில் தான்.

பரத கண்டத்தில் மிகச் சிறந்த பொன்னாடு நம் தென்னாடு, தேன் தமிழ்நாடுதான். சைவ சமய ஆச்சாரியர்கள் நால்வர், பன்னிரு ஆழ்வார்கள், சந்தான குரவர்கள், பட்டினத்தார், இராமானுசர், அருணகிரியார், தாயுமானார், இராமலிங்க அடிகளார் போன்ற ஒப்பற்ற உயர் குருமாமணிகளை உலகில் வேறு எந்நாடும் பெறவில்லை.



திருமந்திர உபதேசம்

திருமந்திரச்செல்வர் டி.வி. வெங்கடராமன், இ.ஆ.ப. (ஓய்வு)

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை எடுத்துரைத்த திருமூலர் பெருமான், அந்தப் பாடலில் ''பதியணுகிற் பசுபாசம் நில்லாவே'' என்று கூறி, சிவப்பரம்பொருளின் அருள் இயக்கத்தைச் சிறப்பாகக் கோடிட்டுக் காண்பிக்கின்றார் (திருமந்திரம் 115)

உயிரானது தனது மலங்களை நீக்கிக் கொள்ளும்போது, அதற்குத் தன்னைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் தெளிவு ஏற்படுகிறது. குருவினுடைய அருளால் உயிர் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள் உயிருக்குப் பாடமாகின்றன. உயிர் அங்கேயே இருக்கிறது. ஆனால் அதன் தன்மை மாறிவிடுகிறது. இதுகாறும் அது சென்ற பாதையும், கழித்த காலமும் பயனற்றது என்ற உணர்வு பிறக்கிறது. கடவுளை நாடி, இன்ப அனுபவம் பெற வேண்டும் என்ற வேட்கை கட்டுக் கடங்காமல் போகிறது.

ஞானாசிரியன் சிவயோக நெறியைத் தந்து, சீடன் தனது புலன்களைக் கட்டுப்படுத்தி, பார்வையை அகமுகமாகச் செலுத்த உதவுகிறான். கடவுளை எங்கே பார்ப்பது? கிளையைக் காட்டி, அதன் மரத்தைக் காட்டி, அதன் வழியாகச் சந்திரனைக் காட்டி, அங்கிருந்து மற்ற விண்மீன்களைக் காட்டுவது போல, ஞானாசிரியன், இறைவன் உயிருக்கு உயிராக இருக்கும் நிலையை விளக்குகின்றான்.

அருளாளர்கள் இதைத் தங்கள் பாடல்களில் பல வகைகளில் தெளிவுபடுத்துகிறார்கள். அவர்கள் சரியை, கிரியை போன்ற நெறிகளில் ஆழ்ந்து நின்றவர்கள். மக்கள் இறைவனை எவ்வாறெல்லாம் நினைந்தும், துதித்தும், போற்றியும் பாடியும் வழிபட வேண்டுமென்பதைப் பல திருப்பதிகங்களில் விளக்கியுள்ளனர்.

அப்பர் பெருமான் ஒரு பெரும் சரியை நெறியாளர். உழவாரப் படையைக் கையிலேந்தி, திருக்கோயில்களைத் தூய்மைப்படுத்துவதாகிய மாபெரும் திருத்தொண்டிற்காகத் தம்மை அர்ப்பணம் செய்து கொண்டவர். சிவப்பரம் பொருளை எவ்வாறு சரியை நெறியில் வழிபட வேண்டும் என்பதற்கான இலக்கணத்தைத் தந்தவர். அப்பர் பெருமானின் உபதேசம் இதோ:

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சேநீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கராசயபோற்றி போற்றி யென்றும்
அலை புனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே''

(திருஆரூர் திருக்காண்டகம்)

இத்தகைய வழிபாட்டு நெறி சிவபுண்ணியம் விளைவிக்க ஏதுவாக இருப்பது மட்டுமின்றி, ஆன்மாவிற்குப் பக்குவம் சேர்ப்பதிலும் பேருபகாரம் செய்கிறது. பதமுத்தியும் கிடைக்க வழி வகுக்கின்றது.

புறவழிபாடுகளை மேற்கொள்ளும் போது, நமது உணர்வுகள் அகமுகமாகத் திரும்பினால் தான் உயிரின் வளர்ச்சிக்கு உதவும். இல்லையென்றால், பயன்கள் ஓரளவே கிடைக்கும் என்பதையும் நமது அருளாளர்கள் வற்புறுத்துகின்றனர். காரணம், அகமுகப் பார்வைதான் சிவதரிசனத்திற்கு வழிகோலும் என்பதுதான்.

உள்ளத்தில் உள்ள நற்பண்புகளாகிய தீர்த்தங்களைப் புறக்கணித்து அவற்றின் வழியாக வினைகளை நீக்கும் முயற்சிகளை மேற்கொள்ளாமல் புற அனுபவங்களுக்காக தீர்த்தங்கள் தோறும் சென்று கொண்டிருப்பது ''கல்வியிலாமை'' என்கிறார் திருமூலர்.

''உள்ளத்தின் உள்ளே உள பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார் வினைக்கெடப்
பள்ளமும் மேடும் பறந்து திரிவரே
கள்ள மனமுடைக்கல் வியிலோரே''

(திருமந்திரம் 509)

இறைவனை உள்ளத்தில் நினைத்து உருகாவிட்டால் கல்வியில் முதன்மையும், வேள்வியில் ஈடுபாடும் என்ன பலன் கொடுக்கும்?

''வேதமோதி லென் வேள்விகள்
செய்யிலென்
நீதிநூல் பல நித்தல் பயிற்றிலென்
ஓதியங்கமோ ராறு முணரிலென்
ஈசனை உள்குவார்க்கன்றி யில்லையே''

(அப்பர் - பாபநாசத் திருக்குறுந்தொகை)

அருளாளர்கள் இறைவனைத் தம்முள் அனுபவித்தவர்கள். இறைவனைக் கற்பனையால் பெற இயலாது இறை அனுபவம் இவ்வுடலிலேயே நிகழ்கின்றது. நமதுகருத்தும் காட்சியும் அகத்தே நடைபெற வேண்டும் என்பார் திருமூலர். தனது அனுபவமும் அதுவே என்கிறார்.

''மாயனை நாடி மனநெடுந்தேரேறிப்
போயினநாடறியாதே புலம்புத்
தேயமும நாடுந்திரிந்தெங்கள்
செல்வனைக்
காயமின்னாட்டிடைக் கண்டு
கொண்டேனே''

(திருமந்திரம் 2982)

திருமூலர் பெருமான் பெற்ற காட்சி நமக்கு கிட்டாதற்குக் காரணம் நாம் மலங்களால் கட்டுண்ட நிலை தான் என்று அறிந்து கொள்ள வேண்டும். மலக்கலப்பினால் வரப்பெறும் அறியாமை, இறைவனின் திரோதன சக்தியால் கூட்டுவிக்கப் படுகிறது என்று இருந்தாலும், இதை நீக்க நாம் ஒருவித முயற்சியும் மேற்கொள்வதில்லை என்பது தான் உண்மை. திரோதனசக்தியின் வலிமையையும் அதிலிருந்தே தெரிந்து கொள்ளலாமல்லவா ! திருமூலர் இதை உணர்த்துவதைப் பாருங்கள்!

''உள்ளத்தொருவனை உள்ளுறுசோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந்தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறியாதே''

(திருமந்திரம் 431)

இதுகாறும் பதி என்னும் பொருள் நம்முள்ளேயே காணக் கிடைக்கும் அனுபவம் என்று சான்றோர்கள் சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்டோம்.

''இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

''சிந்தையே கோயில் கொண்ட
எம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே''

என்றும் மாணிக்கவாசகப் பெருமான் பேசுற்றுகிறார்.

திருமந்திரம் முதல் தந்திரத்தில் உபதேசம் என்கிற பகுதியில் அடுத்து வரும் மந்திரத்தில் (116), திருமூலர் பெருமான்

அனுமனின் தாகம் தீர்த்த அனுவாவி தீர்த்தம்

கோவையிலிருந்து 12 கி.மீ தொலைவில் உள்ள இடம் அனுவாவி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்.

சஞ்சீவிமலையுடன் வந்த அனுமனுக்குத் தாகம் தீர்க்க முருகப்பெருமான் தம் வேலால் உண்டாக்கிய தீர்த்தம் அனுவாவி தீர்த்தம். இன்றும் வற்றாத சுனையாகத் தீஞ்சுவை நீரைத் தருகின்ற அற்புதத்தை இங்கு நாம் காணலாம், பருகலாம்.

''வேயின் எழுங்கனல் போலே
இம்மெய்யெனும்
கோயிலிருந்து குடிகொண்ட கோன்நந்தி''

என்று இறைநிலையை விளக்குகிறார்.

வேய் என்றால் மூங்கில் என்பது பொருள். மூங்கிலின் உள்ளே நெருப்புச் சத்தி உள்ளது. அதனால் தான் மூங்கில் மரம் காய்ந்து கிடக்கும் போது, தானாகவே பற்றிக் கொள்கிறது என்பார்கள். நான் சிறுவனாக இருந்த போது, சென்னையில் படித்துக் கொண்டிருந்த காலம். ஒரு முறை ஆனைமலை அடிவாரத்திலிருக்கும் கொழுமம் என்கிற கிராமத்திற்கு என் பெற்றோர்களுடன் சென்றிருந்தேன். அமராவதி ஆற்றின் கரையில் அமைந்திருந்தது இந்த கிராமம். அருகிலேயே அடர்ந்த காடுகள் நிரம்பிய ஆனைமலைத் தொடர். அங்கே மூங்கில் மரங்கள் ஏராளம். ஒரு நாள் மாலை, மற்ற சிறுவர்களுடன் ஆற்றங்கரையிலிருந்து மலையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மூங்கில் மரங்கள் இருந்த இடத்தில் தீப்பற்றிப் பரவிக் கொண்டிருந்தது. அங்கே நெருப்பு எப்படி வந்தது என்று ஒரு சிறுவனைக் கேட்டேன். நகர்புறத்தில் இருந்து வந்த எனக்குக் காரணம் தெரியவில்லை.

''இது தெரியாதா, உனக்கு?'' என்றான் அந்தச் சிறுவன். ''மூங்கிலுக்கு நடுவில் தீ இருக்கிறது. மூங்கில் காய்ந்தால் தானாகப் பற்றிக் கொள்ளும்'' என்றான். அப்படியும் நடக்குமா என்று வியப்படைந்தேன்.

''வேயின் எழுங்கனல்போலே'' என்கிறார் திருமூலர்.

இறைவனாகிய சோதி உயிருக்கு உயிராக நிற்கிறது. என் உள்ளம் பக்குவம் அடையவில்லை. மலங்கள் நீங்கவில்லை. ஆணவம் மறைக்கிறது. கன்மத்தில் கட்டுண்ட நிலை. மாயையே உண்மை என்ற விபரீத உணர்வு. இதற்கிடையில் இறைவன் எங்குத் தென்படுவான்?

(தொடரும்)

தமிழ்நாட்டுச் சித்தர் பரம்பரை - உரோமமுனி

"செந்தமிழ் வாரிதி" முனைவர் இரா. செல்வக்கணபதி

உரோமமுனி : வரலாறு

உரோமமுனி பதினெண் சித்தர்கள் வரிசையில் ஒன்பதாவதாகக் குறிக்கப்பட்டுள்ளார். இவரை உரோமரிஷி என்றும் சித்தர் நூலார் குறிக்கின்றனர். இவரைப் பெருநூல்காவியம் படைத்த காகபுஜண்டரின் குமாரர் எனக் குறித்துள்ளனர். இவர் செய்த நூல்களுள் ஒன்று தீட்சைஎன்பது. இவர் போகரிடம் மாணவராக இருந்து ஞானம் பெற்றவர். இவரின் ஒரு சாலை மாணாக்கர் சட்டைமுனி.

ஒரு முறை உரோமமுனிக்கும், சட்டைமுனிக்கும் பிணக்குத் தோன்ற, சினத்தில் சட்டைமுனி உரோமமுனி செய்த தீட்சைநூலைக் கிழித்தெறிய முயன்றார். அக்காலை, காகபுஜண்டர் குறுக்கிட்டு, தம்மகன் செய்த நூலைத் தம் சடைமுடியில் ஒளித்து வைத்தார். தீட்சைநூலை புஜண்டர் அகத்தியரிடம் ஒப்படைத்தார். பல ஆண்டுகள் கழித்து அந்நூலை அகத்தியர் உரோமரிஷியிடம் வழங்கினார். இவருக்கு உடம்பெல்லாம் உரோமம் மண்டியிருந்ததால் இவர் உரோமமுனி என அழைக்கப் பட்டார். உரோம நாட்டுக்கும் இவருக்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பார் கூற்று ஏற்புடையது அன்று.

உரோமமுனி : நூல்கள்

உரோமமுனி வரலாறு குறித்து வேறு செய்திகள் ஒன்றும் கிடைக்கவில்லை. அபிதான சிந்தாமணி என்ற நூல் இவர் உடலில் உள்ள ஒரு உரோமம் ஒரு பிரமன் இறந்தால் உதிரும் என்றும், இவ்வாறு 31/2 கோடி பிரம்மாக்கள் இறந்தால்தான் இவர் ஆயுள் முடியும் என்றும் குறித்துள்ளது. உரோமரிஷி இறந்தால் அட்டகோண ரிஷி என்ற சித்தரின் உடலில் உள்ள ஒரு கோணம் நிமிரும் என்றும் அந்நூல் குறிக்கிறது. இவற்றை ஏற்கவும் இயலவில்லை. தள்ளவும் கூடவில்லை.

சித்தர்கள் திருமூலரைப் போல் பல்லாண்டுகள் வாழ்ந்தவர்கள் என்பது மட்டும் உறுதி. உரோமரிஷி இயற்றினவாக உரோமமுனி நூறு, ஐந்நூறு, ஐம்புள் என்ற நூல்கள் அறிய வருகின்றன. ''உரோமமுனி ஞானம்'' என்ற சிறுநூல் ஒன்றும் இவர் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. இந்நூலுள் 26 கண்ணிகள் காணப்படுகின்றன. உலகம் முழுவதும் சித்தாடல்கள் பலவற்றைச் செய்யும் சித்தமூர்த்திகள் பலரின் பாதங்களை நம்பிக்கையோடு தொழுததனால் நான் 'உரோமன்' என்று அழைக்கப்பட்டேன் என்று ஒரு பதிவு உள்ளது.

''ஞாலவட்டம் சித்தாகும் பெரியோர் பாதம்
நம்பினதால் உரோமன் என் பேர்
நாயன்தானே''

என்ற தொடரில் - பெயர்க்காரணம் புலப்பட்டுத் தோன்றவில்லை.

உரோமமுனி ஞானம் : காப்பு

உரோமமுனி அருளிய ஞானம் அழகிய காப்புச் செய்யுள் ஒன்றுடன் தொடங்குகிறது. இதில் முதலில் ஞானகுருவின் பாதங்களே காக்கட்டும் என்று தொடங்குகின்றார். அடுத்துச் சிவனைக் காக்க வேண்டுகின்றார். சிவனை இவர்

'முத்திக்கு வித்தான முதல்'
'பரப்பிரம்மம்'
'வேதாந்தம் கடந்து நின்ற மெய்'

என்றெல்லாம் போற்றிக் காத்தருள விரும்பி வேண்டுகின்றார் சித்தர்களை. காலால் கடந்த பெரியோர்கள் என்றும், ஞானம் என்ற அமுதப்பாலுண்டு வாழ்பவர்கள் ஒன்றும், வஞ்சனைகள் முற்றிலும் இல்லாத தூயமனத்தினர் என்றும் குறித்துள்ளார்.

''காலவட்டம் தங்கி மதி அமுதப் பாலைக்
கண்டு பசியாற்றி மனச் சுவடு நீக்கி...

என்பது சித்தரின் பதிவு. சிவநெறியே சித்தர் நெறி என்பது நூல் முழுவதும் விளங்கித் தோன்றுகின்றது. இவர் பாடல் பதிப்புக்களில் ஏராளமான பிழைகள் மலிந்துள்ளன. பிராணாயாமம் பற்றியும், இடகலை, பிங்கலை, சுழிமுனை முதலிய கூறுகள் பற்றியும் பலவற்றை இந்நூல் தாங்கி நடையாடுகிறது.

பிற்காலச் சித்தர் பாடல்களில் காணப்படும் பேச்சு வழக்குவிளிகள் இவர் பாடல்களிலும் 'பாரையா', 'தேரையா', 'கூறய்யா', 'ஆரையா' என்றெல்லாம் இடம் பெற்றுள்ளன. திருமூலரின் பாடல்களில் காணப்படும் 'பிராணயாமம்' குறித்த கருத்துக்கள் பலவும் இவரது இந்நூலிலும் வழிமொழியப் பட்டுள்ளன.

சித்தி - முத்தி வாயில்கள்:

உரோமமுனி சித்தி பெறுவதற்கும், முத்தி பெறுவதற்கும் உரிய வழி முறைகளை இந்நூலுள் முன் வைத்துப் பாடியுள்ளார். நால்வகை முத்தி மார்க்கங்களுள் ஒன்று யோகம் எனப்படுவது. யோகம் என்பது கூடுதல். மனஒருமைப்பாடு. சொல் விட்டுச் சும்மா இருத்தல். உலக இன்பங்களைத் துய்க்கும் நிலையிலும் அவற்றுள் ஆழ்ந்துவிடாது அன்னியப்பட்டு நிற்றல். அந்த யோகத்தை விட்டவர்க்குச் சித்திகள் ஏதும் இல்லை. சிவ ஞானசித்திக்கு யோகமே வாயில் என்பதை உரோமமுனி,

**''ஒண்ணான மவுனமென்றே யோகம் விட்டால்
ஒரு போதும் சித்தியில்லை''**

என்கிறார்.

'ஒண்ணான மவுனம் என்னும்', என்று பாடம் ஓதினால் கருத்துச் சிறக்கும். அடுத்து முத்திக்கு வாயில் எது என்று கூற வந்த சித்தர்

**''பெண்ணார்தம் ஆசைகளை விட்டு வந்தால்
பேரின்ப முத்திவழிபேசுவேனே''**

என்று நிறைவிக்கிறார். பெண்ணாசைநீங்கினால் அவ்வாறு வீடுபேறு சித்திக்காது என்பதை உறுதி செய்கிறார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றில் சேக்கிழார் அவர் பரவையினரோடு இன்பந்துய்த்த போதும், அவ்வின்பத்திலிருந்து அன்னியப்பட்டு யோக நெறி நின்ற திறம் பேசுவது இங்கே நினைவு கூறத்தக்கது.

குரு - சீட பரம்பரை:

சித்தர் நெறியில் உபதேசபரம்பரை நீள வளர்ந்தமைந்தது. திருமூலர் மரபு, போகர் மரபு, அகத்தியர் மரபு எனப் பல மரபுகள் நிலவுகின்றன. ஆசிரியர் - மாணவர் உறவு சித்தர் மரபில் மிக உன்னதமானது. சீடர்களைப் பலகாலும் சோதித்து அவர் தகுதி அறிந்த பின்னரே மாணக்கராக ஏற்பர். இதனை விளக்கும் நிகழ்வுகள் பல சித்தர் வரலாறுகளில் காணக்கிடைக்கின்றன. சித்தர்கள் இருவகையர். ஒன்று தூய துறவு நெறி நின்றார். மற்றொன்று இல்லறத்தார். இல்லறத்தில் நின்றாலும் பந்தங்களிலிருந்து ஒருகால் விடுபட்டு வந்தாரே மாணாக்கராக இயலும். இவற்றை எல்லாம் உள்ளடக்கி உரோமமுனி

சூரியகுமாரர்கள் நால்வர்

1. எமதர்மன்
2. ஸ்ரீசனீஸ்வரர்
3. கர்ணன்
4. சித்ரகுப்தன்

**''அழைப்பதுவும் நல்லபிள்ளை ஆனால் நன்றே
ஆகாத சீடர்களைச் சேர்த்தல் தோடம்
பிழைப்பதற்கு வழிசொன்னால் பார்க்க மாட்டான்
பெண்டாட்டி மனங்குளிரப் பேசும் மாடு''**

என்று அழகிய பாடல் ஒன்றைப் பதிவு செய்கிறார். மனைவி பேச்சுக்கு மறுபேச்சுப் பேசாது தலையாட்டி நிற்பவன் என்ற பொருளில் 'பேசும் மாடு' என்று பதிவு செய்ததில் எள்ளல் கலந்து வருவது புரிகிறது.

மனித ஆயுள் - நூறு:

மனித வாழ்வு ஒரு நூறு ஆண்டுகள் கொண்டது என்று கூறும் சித்தர், ஒரு நாளைக்கு ஒரு மனிதன் மூச்சுக் காற்றை உள்வாங்கி, வெளிவிடும் செயல் இருபத்தோராயிரத்து அறுநூறு என்று கணக்கிட்டும் உரைக்கிறார். இந்த எண்ணிக்கையைக் கடவாது மூச்சுப் பயிற்சிச் செய்வார் நூறாண்டு வாழ்வர். சுவாசம் கூடினாலும், குறைந்தாலும் ஆயுள் குறையும் என்கிறார்.

''உலகத்தில் மானிடாக்காம் ஆண்டு நூறே''

**''ஆமென்றே இருபத்தோ ராயிரத்தோடு
அறுநூறு சுவாசமல்லோ ஒரு நாளைக்கு''**

என்றும்,

**''போம் என்று போனதனால் நாள் குறைந்து
போச்சுது: போகாவிட்டால் போவதில்லை:
தாம் ஒன்று நினைக்கையிலே தெய்வம் ஒன்று
தான் நினைந்த தன்மை அல்லோ விதிகள் தாமே?''**

என்றும் வரும் அரிய தொடர்கள் மனிதர்கள் நினைவு கூரத்தக்கன.

விதியை வெல்லும் தேவாரப் பதிகங்கள் (நீதிக்கதை)

டாக்டர் தி. பாலசுப்பிரமணியம்

வசிஷ்டர்பால் மதிப்பு மிகக் கொண்டவன் வரதகுணாளன். இவன் வசிஷ்டரின் ஆத்மார்த்த சிஷ்யன்.

தனது எதிர்காலம் பற்றி அறிந்து கொள்ள ஆசைப்பட்ட வரதகுணாளன் பெயர் பெற்ற சோதிடர் ஒருவரிடம் சென்றான். தனது வருங்காலம் பற்றிக் கேட்டான்.

சோதிடரோ வரதகுணாளனின் ஜாதகத்தினை நன்கு ஆய்ந்து பார்த்தார். பின்னர் அவனிடம் ''தம்பி! உனக்கு ஒரு கண்டம் வருகிறது. விரைவில் வரும் அக்கண்டத்தில் நீஉயிர் பிழைக்க மாட்டாய்'' என்று அறுதியிட்டுக் கூறிவிட்டார்.

எப்பொழுது மரணம், எவ்வாறு மரணம் என்பதனை சோதிடரால் துல்லியமாகச் சொல்ல இயலவில்லை.

இது கேட்ட வரதன் மனமிக வருந்தினான். தமது குரு வசிஷ்டரிடம் சென்றான். சோதிடர் சொன்னதை அவரிடம் சொன்னான்.

குரு வசிஷ்டர் ''கவலைப்படாதே வரதா; உனக்கு வரும் மரணத்தைத் தவிர்த்தல் மிக எளிது. எப்பொழுது எப்படி எதனால் மரணம் சம்பவிக்கும் என்பதனை அறிந்து விட்டால் அதனை நாம் தவிர்த்துவிடலாம்'' என்றவர் தனது சிஷ்யனை உடன் அழைத்துக் கொண்டு எமனுலகம் சென்றார்.

விசிஷ்டரைக் கண்ட எமதர்மன் அவரை மரியாதையுடன் வரவேற்றான். அமரச் சொன்னான். வந்த நோக்கம் என்ன என்று வினவினான்.

வசிஷ்டர் தமதருகில் இருந்த தனது சீடன் வரதகுணாளனைச் சுட்டிக் காட்டி, இவன் நமது சீடன்; இவனின் மரணம் எப்பொழுது, எப்படி, எதனால் வரும் என்பதனை மட்டும் தெரிந்து கொள்ளவிரும்பி இங்குவந்தேன் என்றார்.

இதனைச் செவிமடுத்த எமதர்மன் சித்திரகுப்தனை அழைத்தான். ''வரதகுணாளனின் ஏட்டினை எடுத்து அவனது மரணம் என்று? எப்படி? என்றுபார்த்து சொல்'' என்றார்.

சித்திரகுப்தன் : ''பிரபோ மன்னியுங்கள். தாங்கள் அறியாத ஒன்றா இது? இறந்தவன் ஏடுதானே என்னிடம் வரும். இருப்பவன் ஏடு என்றைக்கும் என்னிடம் வாராதே. மேலும் ஏடுகளுள்ள அறைக்கு என்னால் செல்லவும் இயலாது; யாருடைய ஏட்டினையும் எடுக்கவும் இயலாதே. இந்நிலையில் இவருக்கு உதவிட என்ன செய்வதென்றே எனக்கு புரியவில்லை பிரபோ''.

எமன் : வசிஷ்டரே இங்கு நேரில் வந்து கேட்பதால், உன்னிடம் கேட்டேன், ஏட்டினை எடுத்துத் தருமாறு. இனி என்னால் ஆவது ஒன்றுமில்லை.

வசிஷ்டர் : அப்படி என்றால் ஏட்டினைப் பார்க்க என்னதான் வழி?

சித்திரகுப்தன் : முனிவரே! மன்னியுங்கள். எங்களால் உங்களுக்கு ஏடு விஷயத்தில் உதவ இயலாது.

வசிஷ்டர் சிறிது யோசிக்கிறார். பின்னர் எமனிடம், ''எமதர்மரே! ஏட்டினை பார்க்க எனக்கு ஒரு உதவி செய்ய இயலுமா?

எமதர்மன் : சொல்லுங்கள். உதவக் காத்து இருக்கிறோம். ஆனால் உதவிடும் உபாயத்தினை மட்டும் தாங்களே கூறுங்கள்.

வசிஷ்டர் : ஏடுகளுள்ள அறைக்கு என்னை அனுமதியுங்கள். நானே தேடி எடுத்துப் பார்த்து விட்டுப் பின் அதனை அங்கேயே வைத்துவிட்டு வந்து விடுகிறேன். (எமனும், சித்திரகுப்தனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்).

எமன் : (சித்திரகுப்தனை நோக்கி) சித்ரகுப்தா! ஏடுகளுள்ள அறைக்கு வசிஷ்டரை அனுமதித்து விடு. அவர் தமது திறத்தால் ஏட்டினை எடுத்துப் பார்ப்பதில் நமக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

சித்திரகுப்தன் : ஆகட்டும் பிரபோ! அப்படியே செய்கிறேன்.

வசிஷ்டரும் அவர்தம் சீடரும் ஏடுகளுள்ள

அறைக்கு அனுமதிக்கப்பட்டனர். தமது தவ வலிமையாலும், அரிய பெரும் ஆற்றலாலும் எப்படியோ தேடி வரதகுணாளனின் ஏட்டினை வசிஷ்டர் எடுத்து விட்டார். மகிழ்ச்சி பொங்க அதில் என்ன எழுதியிருக்கிறது என்பதை படிக்க ஆரம்பிக்கிறார்.

வரதன் அவர் அருகிலேயே நிற்கிறான். ''வசிஷ்டர் எமலோகம் வந்து எமனிடம் அனுமதி பெற்று, ஏட்டறையில் நுழைந்து, தமது தவத்தின் திறத்தால் வரதகுணாளனின் ஏட்டினை எடுத்து இவன் எப்படி, எப்பொழுது இறப்பான் என்பதனை அறிந்து கொள்ளு முகத்தான் ஏட்டினைப் படித்து அறியும் பொழுது ஏட்டறையிலேயே திடீரென மாரடைத்து தனது இன்னுயிரை இழப்பான் வசிஷ்டரின் சிஷ்யன் வரதகுணாளன்'' என்று அவ்வேட்டில் எழுதி இருந்தது. படித்து முடித்த அப்பொழுதே பக்கத்தில் நின்றிருந்த சீடன் வரதன் நெஞ்சைக் கையால் பிடித்தபடி சுருண்டு விழுந்து மடிந்தான். நிமிர்ந்து பார்த்தார் வசிஷ்டர். வரதகுணாளன் இறந்து கிடக்கிறான்.

யாருக்கு என்னென்ன எப்படி எப்படி நிகழுமோ, அப்படித்தான் ஊழ்வினை நடத்துவிக்கும். பேராற்றல் உடைய சிவபெருமானால் சஞ்சிதத்தில் இருந்து ஊட்டப் பட்டதால் ஊழானது பெருவலி எனப்பட்டது. இதனை அனுபவித்தே ஆக வேண்டும். மாற்ற இயலாது என்பது இக்கதை மூலம் பெறப்படு கின்றது.

ஆனாலும் இதனையும் மாற்றஓர் உபாயம் உண்டு. இறைவனை உள்ளன்போடு வேண்டி, திருமுறைகளை தொடர்ந்து ஓதினால் ஊழ்வினைகளை மாற்றி அமைத்து விடலாம். இதற்குப் பிரமாணம் தேவாரங்களில் நிறைய உள்ளன.

வசிஷ்டர் வரதகுணாளனுக்கு வரும் மரணம் எப்பொழுது, எப்படி என்று ஆராயாமல், அவனிடம் திருமுறைகளைப் படனம் செய்து சிவனை உள்ளன்போடு வழிபடு. உனது ஊழ்வினை மாற்றியமைக்கப்படும் என்று சொல்லி இருப்பாரே யானால் வரதனுடைய மரணம் தவிர்க்கப்பட்டு நிச்சயமாகத் தள்ளி வைக்கப் பெற்றிருக்கும் ; மாற்றி அமைக்கப்பட்டிருக்கும்.

ஊழ்வினையால் அரவு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகன் மூத்த திருநாவுக்கரசை, அப்பர் பதிகம் பாடி மீண்டும் உயிர் பிழைக்க வைத்ததும் : அவிநாசியில் சுந்தரர், முதலையுண்ட சிறுவனை பதிகம்பாடி உயிர்ப்பித்தருளியதும் இங்கு நாம் சிந்திக்க வேண்டும்.

அப்பர் பெருமான் பதிகம் பாடி இறைவனைத் தொழுதே, சூலை வந்த பொழுதும், நீற்றறையில் இட்ட பொழுதும், நஞ்சைஉண்ணுவித்த பொழுதும், யானை கொல்ல வந்த பொழுதும், கடலில் கல்லில் கட்டி போட்ட போதும் மரணத்தினையும் தவிர்த்தார். அச்சுதக்களப்பாளர் திருவெண்காட்டுப் பதிகம் படித்துத்தான், தனக்கு பிள்ளைப் பேறில்லாத ஊழ்வினையை மாற்றியமைத்துப் புத்திர பாக்கியம் பெற்றுய்ந்தார்.

நாமும் மெய்க்கண்டநாதரைப் பெற்று உய்ந்தோம். எனவே நாம் செய்த ஆகாமியம் (தொல்வினை), சஞ்சிதம் (வருவினை), பிரார்த்தம் (ஊழ்வினை) ஆகிய வினைகளை, திருமுறை ஓதலால் மாற்றி அமைத்துவிட இயலும் அல்லது அடியோடு சுட்டெரித்துவிட இயலும்.

வெல்லவே இயலாத பெருவலியான ஊழினை, மந்திர ஆற்றல் மிக்கச் சொற்களைக் கொண்ட திருமுறைகளைப் படனம் செய்து வெல்லலாம். வென்று பேரின்பம் பெற்றுய்யலாம் என்பது ஈண்டு பெறப்படும்.

''படைக்கலமாக உன் நாமத்து எழுத்து அஞ்சு என் நாவில் கொண்டேன்
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூநீறு அணிந்துன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்து அரனே''

- அப்பரடிகள்

வித்தியாசமான நவகிரகங்கள் உள்ள ஆலயங்கள்

1. கங்கை கொண்ட சோழபுரத்தில் - ஒரே கல்லில்
2. இராமநாதபுரம் மாவட்டம் தேவிப் பட்டணத்தில் கடலுக்குள் 9 தூண்கள்
3. திருக்கோளிலியில் ஒரே வரிசை
4. திருவாரூரில் ஒரே வரிசை
5. வைத்தீஸ்வரன் கோயிலில் ஒரே வரிசை
6. சூரியனார் கோயிலில் தனித்தனி சன்னதி.
7. கொட்டையூரில் - வாகனங்களுடன்
8. தாழம்பேட்டைப் பழூவூர் கோயிலில் - தேவிமார்களுடன்
9. சுசீந்திரம் தாணுமால் அயன் கோயிலில் - மண்டபத்தின் மேல் பகுதியில்
10. உடுப்பியில் - ஒன்பது துவாரங்கள்.

செங்கோலுடன் காட்சி தரும் குணசீலம் ஸ்ரீபிரசன்ன வேங்கடேசப்பெருமாள்

ஏ.கிருஷ்ணன்

குணசீலம் ஸ்ரீ பிரஸன்ன வேங்கடாஜலபதி பெருமாள் திருக்கோயில் திருச்சி மாவட்டம் திருச்சி - சேலம் நெடுஞ்சாலையில் காவிரி நதியின் வடகரையில் குணசீலம் என்ற இடத்தில் அமைந்துள்ளது. இக்கோயில் மிக முக்கிய பிரார்த்தனை ஸ்தலமாகும, எம்பெருமாள் சிறந்தவரப்பிரசாதி. சரணாகதவத்ஸலன். அன்புக்கு ஆட்படும் தயாமூர்த்தி. இவ்விடம் பெருமாள் நின்ற கோலத்தில் திருமகளைத் திருமார்பில் தாங்கிச் செங்கோலுடன் சுயம்பு மூர்த்தமாக சேவை சாதிக்கிறார் என்பது விசேஷமாகும்.



குணசீலமகரிஷி

பத்திரகாஸரமத்திலுள்ள ஸ்ரீ தால்பிய முனிவரின் ஆத்மார்த்த சீடர் குணசீலர். குருவின் பாதசேவை செய்வதில் தன்னைப் பரிபூர்ணமாக ஈடுபடுத்திக் கொண்டவர்; கடும் தவம் புரிந்தவர். திருவேங்கடமாமலையில் திருவேங்கடவனை குணசீலர் தரிசிப்பதற்க்காக சென்றார். அவ்விடம் பெருமாளின் சௌந்தர்யத்தில் மனம் ஆழ்ந்தது. அடியேனுடன் என்றென்றும தாங்கள் உடனிருக்க வேண்டும் என்றும் எனது ஆஸ்ரமத்தில் எழுந்தருளி அருள் பாலிக்க வேண்டும் என்றும் மனமுருகிப் பிரார்த்தித்தார்.

அன்புக்கு ஆட்படும் தயாமூர்த்தியான பெருமாள் குணசீலரின் பிரார்த்தனைக்குக் இரங்கி குணசீலமகரிஷி தவம் புரிந்த ஆஸ்ரமத்தில் ஸ்ரீ தேவியுடன் பிரஸன்ன வேங்கடா ஜலபதியாக கிருதயுகம், புரட்டாசி மாதம் சனிக்கிழமை சிரவண நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் திவ்ய மங்கள சொரூபத்தோடு எம் பெருமாள் காட்சி அளித்தார் என்பது வரலாறு! இவ்விடம் நேரில் பிரஸன்னமானதால் வேங்கடாஜலபதி பிரஸன்னவேங்கடாஜலபதி என்று அழைக்கப்படுகிறார்.

மேலும் குணசீலர் எம் பெருமாளிடம் ''எனக்கு பிரஸன்னமான தாங்கள் தங்களை நாடிவரும் பக்தர்களுக்கு முன்வினை அனைத்தும் நீக்க வேண்டும். சித்தப்பிரமையுடையவர்கள் இவ்விடம் வந்தால் தெளிவு அடைய வேண்டும். தீராத நோய் தீர வேண்டும், நின் அடியார் நின்னிடம் கேட்டதும். நினைப்பதும் நடக்க வேண்டும். மேலும் இந்த ஸ்தலம் பிரார்த்தனை ஸ்தலமாக வேண்டும், எல்லாருக்கும் எல்லா நலனும் பெற வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். இதைக் கேட்ட எம்பெருமான் ''அவ்வாறே ஆகுக!'' என்று வரம் தந்து ''இவ்விடம் செங்கோலுடன் காட்சி தருவோம். சகலநோய்களும் தீரும்'' என்று அருள்பாலித்தார்.

மேலும் குணசீலமகரிஷியின் ஆஸ்ரமத்தில் பெருமாள் அருள்பாலித்ததால் இவ்விடம் குணசீலம் என்ற பெயர் விளங்கியது என்பது விசேஷமாகும்.

பிறகு குணசீலர் மனநிறைவோடு தம் குருநாதருடன் பத்ரிகாசிரமம் புறப்பட்டார். மேலும் பெருமாளைத் தவறாது பூசைபுரியும் தன் சீடர்களில் ஒருவரை நியமனம் செய்துவிட்டு குருநாதருடன்புறப்பட்டார்.

புற்றில் மறைந்த பெருமான்:

காவேரி கரை, காட்டுப்பகுதி மற்றும் ஆற்று வெள்ளம் அடிக்கடி வருவதால் சீடன் எம்பெருமாளைத் தனியே விட்டு புறப்பட்டு விட்டார். ஆகையால் எம்பெருமாள் தன்னை ஆற்றில் புற்று ஒன்று எழுப்பி அதற்குள் தன் அழகான சரீரத்தை மறைத்து கொண்டார் என்பது வரலாறு. திருமால் திருவுள்ளம் யார்காண்பது?

ஞானவர்மா என்ற அரசர்:

குணசீல க்ஷேத்திரத்திற்கு அருகே நிகளாபுரி என்னும் நகரத்தை ஞானவர்மா என்ற அரசர் ஆண்டு வந்தார். அரசர் ஏராளமான கோசாலைகளை அமைத்திருந்தார். பசுக்கள் மேய குணசீலத்திற்கு அருகில் மேய்ச்சல் காடும் விட்டிருந்தார். கறவை மாடுகளின் பாலை யாதவர்கள் அரண்மனைக்கு கொடுப்பது வழக்கம்.

ஆனால் ஒரு சமயம் பால்குடங்களில் பாலை நிரப்பியதும் பால் மாயமாய் மறைந்து விடுவது காணப்பட்டது. இதனைக் கண்டு பலரும் திகைத்தார்கள். இதை அறிந்த அரசன் தம்

பேய், பில்லி, சூனியம் விரட்டும் செங்கோல்

குணசீலம் ஸ்ரீ பிரசன்ன வெங்கடாஜலபதி திருக்கோயிலில் தாயாருக்கென்று தனிச் சன்னதி கிடையாது.

தாயார் அலர்மேல் மங்கையைப் பெருமாள் இந்தக் கோயிலில் தன் இதயத்திலேயே தாங்கி நிற்கிறார்.

ஸ்ரீபிரசன்ன வெங்கடாஜலபதி தம் கையில் உள்ள செங்கோல் மூலம் பேய், பில்லி, சூன்யம், சித்தப்பிரமை ஆகியவற்றை அடித்து விரட்டுவதாக ஐதீகம்.

பரிவாரங்களுடன் பசுக்கள் மேயும் இடத்திற்கு வந்தார். பாலைக் குடத்தில் நிரப்பியதும் வெறும் குடங்கள் ஆயின. அரசனும் இதை கண்டு திகைத்தார்.

அப்பொழுது அங்கு வந்த ஒரு முதியவர், ''அரசே! குணசீல மகரிஷியின் தவத்திற்காக பிரஸன்ன வேங்கடவனாக உமது நகரத்திற் குட்பட்ட இடத்தில் ஸ்வயம்புவாக எழுந்தருளி யுள்ளார். அவ்விடம் உள்ள புற்றுக்குள் எம்பெருமான் இருக்கிறார். அவர் செய்த மாயமே பால் குறைவு ஏற்படுவது'' என்று கூறினார். அரண்மனைக்குச் செல்லும் குடங்களில் உள்ள பாலைப் புற்றின் மீது குடம் குடமாக அபிஷேகம் செய்தார் அரசர். அந்தக் கணமே புற்றின் நடுவில் பிரஸன்ன வேங்கடேசன் சங்கு சக்கரம் சாட்டை தரித்தவராகவும், திருமகளைத் திருமார்பில் தரித்தவராகவும் அரசனுக்குக் காட்சி தந்தார் என்பது வரலாறு.

பிறகு அரசர் எம்பெருமான் கட்டளையின் படி வைகானஸ புரோகிதர்களை அழைத்து குடியமர்த்தி சுபமுகூர்த்தத்தில் மஹா சம்ப்ரோஷணம் செய்தார். அலங்காரப் பிரியரான ஸ்ரீனிவாசனுக்குச் சகல ஆபரணாதி களையும் செய்து அணிவித்து மகிழ்ந்தார். மேலும் அரசன் பெருமாளை உள்ளம் நெகிழ்ந்து பக்தி யுடன் துதித்தான். அதன் பயனாக மீண்டும் காட்சி அளித்தார். உலக மக்களுக்கு நல்ல உபதேசங்களைக் காட்டிக் காட்சியில் இருந்தும் மறைந்தார் என வரலாறு கூறப்படுகிறது.

குணசீலம் ஸ்ரீபிரசன்ன வேங்கடாஜலபதி பெருமாள் சன்னதி, தென்திருப்பதியெனச் சிறப்புடன் பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது. குணசிலத்தில் தாயாருக்குத் தனி சன்னதி கிடையாது. ஸ்ரீதேவியை தன் மார்பில் வைத்து இறைவன் சேவை சாதிக்கின்றார் என்பது காணலாம். மேலும் திருப்பதிக்குச் செல்ல இயலாதோர் இவ்விடம் தரிசித்தால் திருப்பதியில் சேவித்த பலன் உண்டாகும் என்பது வரலாறு. மேலும் குணசீலர் நினைவார்த்தமாக இத்தலம் குணசீலம் என்றும் அழைக்கப்படுகிறது என்பது வரலாறு.

இக்கோவிலில் தினமும் 5 காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. விசேஷமான காலம் என்பது உச்சிகால ஆராதனை நேரத்தில் சித்தபிரமை உள்ளவர்களுக்குப் பெருமாள் தீர்த்தம் முகத்தில் தெளிப்பார்கள். இதனால் பலதோஷங்கள், பயந்த கோளாறுகள் சகல உபத்திரவங்கள் தீரும் என்பது கூறப்படுகிறது. மேலும் வைகாநஸ முறைப்படி பூஜைகள் நடைபெறுகின்றன.

உற்சவங்கள்:

சித்திரைமாதம் தெப்ப உற்சவம் திருப்பவித்ரோத்ஸவம், புரட்டாசி சனிக்கிழமைகள் 5; பிரம்மோற்சவம், தனுர்மாதம், கூடாரவல்லி, ஸ்ரீவைகுண்ட ஏகாதசி, பங்குனி உத்திரம், திருவோணம் முதலிய பல உற்சவங்கள் நடைபெறுகின்றன என்பது விசேஷம்.

இவ்விடம் தாயார் திருநாமம் ஸ்ரீஅலமேலு மங்கை பிராட்டியார் என்பதாகும்.

மேலும் இவ்விடம் யாத்ரீகர்கள் விடுதிகள் உள்ளன. தீராத வினை, சித்தப்பிரமை, மனக்கவலை உள்ளவர்கள் இவ்விடம் வந்து பிரார்த்தனை செய்து வருகிறார்கள் என்பது விசேஷமாகும்.

பகீரதன் தவம் செய்து ஆகாசகங்கையை மண்ணுலகுக்கு அழைத்து வந்தது போல் வைகுண்டவாசனை, பீதாம்பரதாரியைத் தன் தவ வலிமையால் மண்ணுலகத்திற்கு அகண்ட காவேரியின் கரையில் அமர்த்திய குணசீல மகரிஷியின் வரலாறு மிகவும் பெருமையுடையது.



எங்குமுள்ள கடவுளுக்குக் கோயில் கட்டுவது ஏன்?

கடவுள் எங்கும் இருக்கிறாரே! எல்லாம் கடவுள் தானே. அப்படியிருக்க ஓரிடத்தில் கோயில் கட்டி அதில் கடவுளுக்கு உருவம் அமைத்து வழிபடுவதேன்? இந்த நியமம் எதற்காக என்றால் ஜனங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுவதற்காகத்தான். ஊர் ஒற்றுமை கோவிலால் நிறைவேறும்.

- மகாகவி பாரதியார்

கருடாழ்வார் அம்சமான மதுரகவி ஆழ்வார்

திருமதி இந்திரா ஆராஅமுதன்
திருவரங்கம்



நம்மாழ்வார் மதுரகவிகள்

தமிழ் வருடத்தின் முதல் மாதமான ''சித்திரை'' மிகவும் மகத்தான பேறு பெற்றது என்று சொல்லலாம். ஏனெனில் இந்த மாதத்தில் தான் தெய்வம், ஆழ்வார், ஆசாரியர் ஆகிய மூவரும் அவதரித்தனர்.

புனர்பூசநட்சத்திரத்தில் ஸ்ரீராமபிரானும், சித்திரை, திருவாதிரை ஆகியவைகளில் முறையே மதுரகவி ஆழ்வாரும், ராமானுஜரும் தோன்றினார்கள். பகவானுடன் அவரது வாகனமான கருடனின் அம்சமாக மதுரகவிகளும், ஆதிசேஷனின் அம்சமாக ராமானுஜரும் பிறந்தது இந்தச்சிறப்பு மிக்க சித்திரை மாதத்தில்தான்.

அந்தணர் குலத்தில் பிறந்த இந்த ஆழ்வார், வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் புலமை பெற்றிருந்தாலும், தமிழ் மொழியில் மதுரமான கவிதைகளைப் பாடிய காரணத்தினால் மதுரகவிகள் என்று அழைக்கப்பட்டார். இவர் பிறந்தது துவாபரயுகத்தில்.

அயோத்தி, மதுரா, ஹரித்வார், காசி, காஞ்சி, உஜ்ஜயினி, துவாரகா ஆகிய ஏழு முக்தி தரும் தலங்களைத் தரிசித்தபின் மீண்டும் அயோத்திக்கு வந்து சிலகாலம் தங்கி இருந்தார்.

தினமும் இரவில் அவர், தென்திசையில் உள்ள தமது ஊரான திருக்கோளூரை நோக்கி வணங்கி விட்டுத்தான் உறங்கச் செல்வார். அவ்வாறு செய்யும் போது ஒரு நாள் ஒரு பெரிய பேரொளி அவர் கண்ணுக்குத் தென்பட்டது. காட்டுத்தீயாக இருக்குமோ என்று அவர் ஐயப்பட்டார். ஆனால் தொடர்ந்து 2, 3 நாட்களிலும் அந்தத் தேஜஸைப் பார்த்தவுடன், அதைப் பற்றி அறிய ஆவல் கொண்டார். இரவில் மட்டும் தெரிந்து பகலில் மறைந்த அந்தத் தேஜஸ் அவரைச் சிந்திக்க வைத்தது.

இந்தக்காலம் மாதிரி வாகன வசதிகள் இல்லாத காலம் அல்லவா? அதைத் தேடும் பணியில் பகலில் உறங்கிவிட்டு இரவு பூராவும் நடந்து நடந்து, கோதாவரி, திருவேங்கடம், தொண்டைநாடு திருவரங்கம் எல்லாம் கடந்து வந்தார். கடைசியில் திருக்குருகூரை அடைந்தவுடன் அந்த ஒளி கோயிலுக்குள் சென்று மறைந்துவிட்டது. உள்ளூர் வாசிகளிடம் விவரம் கேட்டார். அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

கலியுகம் பிறந்த 45ஆம் நாளில் ஒரு குழந்தை பிறந்தது. இயல்பான குழந்தைகளைப் போல அது அழவுமில்லை, பால் குடிக்கவுமில்லை, இக்குழந்தை உலக பழக்கத்திற்கு மாறாக இருந்ததால், அதன் பெற்றோர் மாறன் என்று பெயரிட்டனர். பொலிந்து நின்ற பெருமானை வேண்டிக் கொண்டதனால் பிறந்த இக்குழந்தையை ''நீயே பார்த்துக் கொள்ளு'' என்று இறைவனிடம் கூறிவிட்டு புளிய மரத்தின் அடியில் ஒரு தொட்டிலில் கிடத்திவிட்டுச் சென்றுவிட்டனர். இவ்வாறு 16 வருடங்கள் உருண்டன. அக்குழந்தை வளர்ந்து புளிய மரத்தில் வசிப்பதால், தெய்வம் தான் அக்குழந்தையாக இருக்கவேண்டும் என்றும் ஆதிசேஷன் புளிய மரமாக அவருக்கு முன் வந்து தோன்றியிருக்க வேண்டும் என்றும் அபிப்ராயப்பட்டனர்.

மதுரகவிகள் புளியமரத்தின் அருகில் சென்றார். பத்மாசனத்துடன் சின்முத்திரை காட்டியபடி யோகநிலையில் மஹாதேஜஸுடன் இருக்கும் நம்மாழ்வாரைப் பார்த்து, தாம் கண்ட அந்த சோதி உரு இவர்தான் என்று புரிந்து கொண்டார்.

அவருக்குக் காது கேட்கிறதா பார்ப்போம் என்று தன் இருகைகளைத் தட்டி ஓசைப்படுத்தியவுடன், அவர் கண் விழித்து பார்த்தார். பேசுகிறாரா பார்ப்போம் என்று நினைத்து, **''செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்''** என்று கேட்க. **''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்''** என்றார் நம்மாழ்வார் பதிலுக்கு. இவர் பெரிய ஞானி என்று உணர்ந்த மதுரகவிகள் அவரை வீழ்ந்து வணங்கித் தம்மைச் சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். அவரும் தகுந்தச் சிஷ்யனுக்காக 16 வருடம் காத்திருந்ததால் ஏற்றுக் கொண்டார்.



ஆண்டாள் கண்டருளிய மாசி மகத் தெப்பத் திருவிழா

ஸ்ரீவில்லிபுத்தூரில் தெப்ப மஹோத்சவத்தின் முதல் திருநாளன்று (13.3.2006) ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீரெங்கமன்னார் உற்சவர்களும். இரண்டாம் திருநாளன்று (15.3.2006) ஸ்ரீதேவி. பூமி தேவி சமேதராய் ஸ்ரீபெரிய பெருமாள் (வடபத்ரசாயி), பெரியாழ்வார், ஸ்ரீனிவாசப் பெருமாள் உற்சவர்களும், மூன்றாம் திருநாள் (16.3.2006) அன்று சீதா, லட்சுமணன் சமேதராய் ஸ்ரீராமபிரானும், ருக்மணி, சத்யபாமா சமேதராய் ஸ்ரீகிருஷ்ணனும், மேற்குத் தொடர்ச்சி மலையில் எழுந்தளி அருள்புரியும் காட்டழகர் (உற்சவர்) ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாள் உற்சவர்களும் எழுந்தருளித் தெப்ப உற்சவத்தில் பவனி வந்து பக்தர்களுக்கு சேவை சாதித்து அருள்பாலித்தனர். ஒவ்வொரு திருநாளன்றும் ஆயிரக்கணக்கான சேவார்த்திகள் வருகைபுரிந்து தெப்ப மஹோத்சவத்தைக் கண்டு களித்தனர்.

நம்மாழ்வர்தாம் இயற்றிய ருக்வேத சாரமான ''திருவிருத்தம்'', யஜுர் வேத சாரமான ''திருவாசிரியம்'', ஸாமவேதசாரமான ''திருவாய்மொழி'' அதர்வண வேதநிகரான ''பெரிய திருவந்தாதி'' ஆகியவைகளை உபதேசித்து அர்த்தங்களையும் சொன்னார். பின் 32 வயதில் திருநாட்டை அலங்கரித்தார்.

தேவுமற்றறியேன், ஆசாரியன் தான் தனது தெய்வம் என்று அறுதியிட்டு கூறிய மதுரகவிகள் ''கண்ணிநுண் சிறுத்தாம்பு'' என்ற பாசுரங்கள் இயற்றினார். பின் நம்மாழ்வாரின் அர்ச்சை உருவத்தை திருக்குருகூரில் ஸ்தாபித்துடன், அவருக்கு நித்ய, பட்சக்ஷ, மாஸ, அயன, ஸம்வத்ஸர உத்ஸவங்களையும் நடத்தி வந்தார்.

''காரிமாறன், சடகோபன், பராங்குசர், திருக்குருகூர் நம்பி, திருவழுதி வளநாடான், திருவாய் மொழிப் பெருமாள், நாட்கமழ் மகிழமாலை மார்பினன், வேதம் தமிழ் செய்த பெருமாள்'' என்ற அடைமொழிகளை முழங்கியபடி அவர் புகழைப் பரப்பிவந்தார்.

இதைக் கண்ட சங்கப் புலவர்கள் ''எங்களுடன் வாதம் செய்து ஜயித்து சங்கப் பலகை ஏறினால் ஒழிய இத்தகைய விருதுகளை முழங்க விடமாட்டோம்'' என்று இவரைத்தடுத்தனர்.

வருத்தமுற்ற மதுரகவிகள் ஆசாரியனிடம் முறையிட்டார். நம்மாழ்வார் ஒரு கிழ பிராமணன் வடிவில் வந்து **''கண்ணன் கழலிணை''** என்ற பாசுரத்தை சங்கப் பலகையில் வைக்குமாறு பணித்தார்.

இந்தப் பாசுரத்தை ஒரு ஓலைச்சுவடியில் எழுதிய மதுரகவிகள், 300 தமிழ்ப் புலவர்கள் ஏறியிருந்த சங்கப் பலகையில் வைத்தார். சற்றைக்கெல்லாம் அந்தப் பலகை 300 புலவர்களையும் பொய்கையினுள் தள்ளி விட்டு விட்டு, இந்த ஓலைச் சுவடியை மட்டும் சுமந்தபடி சுமந்து வந்தது. அத்தனைப் புலவர்களும தட்டுத்தடுமாறி கரையேறி தம் பிழைகளை உணர்ந்து, பிராயச் சித்தமாக ஆளுக்குஒரு பாடல் வீதம் பாடினர்.

''சேமங் குருகையோ செய்ய
திருப்பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ - தாமந்
துளவோ வகுளமோ தோளிரண்டோ
நான்கும்
உளவோ பெரும உமக்கு''

இதன் அர்த்தம், ஸ்ரீமன் நாராயணனே நம்மாழ்வாராக அவதரித்து இருக்கிறார் என்ற உணர்வு ஒவ்வொருவர் பாட்டிலும் தெரிந்தது. மேலும் சங்கத்தலைவராக விளங்கும் புலவரோ

''ஈயாடுவதோ கருடற்கெதிரே
இரவிக்கெதிர் மின்மினியாடுவதோ
நாயாடுவதோ உறுவெம்புலிமுன்
நரியாடுவதோ நரகேசரிமுன்
பேயாடுவதோ அழகூர்வசிமுன்
பெருமான் வகுளாபரணன் அருள் கூர்ந்(து)
ஓவாதுரையா பிரமா மறையின்
ஒரு சொற் பெறுமோ உலகிற் கவியே''

என்று பாடினார். இவ்வாறு நம்மாழ்வாரின் பெருமையை உணர்த்திப் புலவர்கள் தம் செருக்கழித்து நம்மாழ்வர் புகழ் பரப்பினர் மதுரகவி ஆழ்வார்.

பார் போற்றும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன்

''அம்மா தாயே பண்ணாரி!
அன்னை நீயே ஓங்காரி!
சும்மா இருந்தால் பயனிலையே - உனைச்
சுற்றி வந்தால் வினையில்லையே!''

அனைத்துச் சக்திகளுக்கும் ஆதாரமாக இருப்பது பராசக்தியாகும். அப்பராசக்தியே பல்வேறு பெயர்களுடன் பல்வேறு ஸ்தலங்களிலும் குடி கொண்டுள்ளாள். அச்சக்தியே கொங்கு நாட்டின் வடமேற்கு எல்லையருகில் மைசூர் செல்லும் வழியில் பிரதானமாக வீற்றிருக்கும் அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் - மிகவும் சக்தி வாய்ந்த காவல் தெய்வமாகும்.

இத்தலம் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்திலிருந்து மேற்கே 14 கி. மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலம் அடர்ந்த வனத்திடையே அமைந்துள்ளது. தெற்கு, வடக்கு, மேற்கு ஆகிய மூன்று பக்கங்களாலும் இத்தலம் வனத்தால் சூழப் பட்டுள்ளது. அடர்ந்த காட்டுப் பகுதியில் யானைகளும், காட்டுப்பன்றிகளும், மான்களும், நரிகளும், வண்ண மயில்களும், குரங்குகளும், முயல்களும், கரடிகளும் மற்றும் மிகக் கொடிய விஷஜந்துக்களும் சர்வ சாதாரணமாக உலாவும் இத்தலத்தில் தெற்குப் பார்த்த வண்ணமாக எழுந்தருளியுள்ள அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் சுயம்புலிங்க வடிவமாக உள்ளாள்.



இன்றைக்கு சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு இவ்விடம் அடர்ந்த வனப்பகுதியாக இருந்தது. இவ்விடத்தில் வற்றாத காட்டாறு ஓடிக் கொண்டே இருக்கும். காட்டாற்றின் பெயரோ தோரணப் பள்ளம் என்பதாகும். இக்காட்டாறு இத்தலத்தின் மேற்குபுறத்தில் உள்ளது. திம்பம் மலையின் அடிவாரம், தென்குமரி தெய்வத்தின் அவதாரம் இவ்விடத்தில் நிகழப் போகிறது என்பதை உலகினுக்கு அறிவிக்கவோ என்னவோ இக்காட்டாற்றின் துறையில் பசுவும், புலியும் ஒரே இடத்தில் நீர் குடிக்கும் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.

இச்சுற்று வட்டார கிராமமக்கள் தங்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதற்கு இவ்வனப்பகுதிக்குச் செல்வது

பண்ணாரியில் தங்கரத வெள்ளோட்டவிழா

பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் ஆலயத்தில் தங்கரத வெள்ளோட்டவிழா 2.3.06 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வழக்கம். இம்மக்கள் மாடுகளுக்குப் பட்டிகள் அமைத்து வனப் பகுதியிலேயே தங்கிக் கொள்வார்கள். தினசரி காலையில் மாடுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் செல்வார்கள். பின்னர் மாலையில் மாடுகளை ஓட்டி வந்து பட்டியில் அடைப்பார்கள். காலையிலும் மாலையிலும் பாலைக் கறந்து மாட்டின் உரிமையாளருக்குக் கொடுப்பார்கள்.

ஒரு பட்டியிலிருந்து காராம்பசு ஒன்று கறக்கச் சென்றால் கறப்பதற்கு நில்லாமல் தன் கன்றுக்கும் கொடுக்காமல் இருப்பதை மாடுகளை மேய்ப்போன் அறிந்தான். மறுநாள் மாட்டினைத் தொடர்ந்து சென்று கவனித்தான். அப்பசு தன்தனத்தூறும் பாலை ஒரு வேங்கை மரத்தின் அடியில் கணம் புற்கள் சூழ்ந்த ஒரு குறிப்பிட்ட இடத்தில் தன்னிச்சையாகப் பொழிவதை மறைவிலிருந்து பார்த்தான்.

இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அவன் மறுநாள் சுற்றுவட்டார கிராம மக்கள் ஊர் பெரியவர் களிடமும் விபரத்தைச் சொல்லி அனைவரையும் அழைத்துக் கொண்டு மாட்டினைப் பின்தொடர்ந்து சென்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் (மாடு) காராம்பசு பால் சொரிவதைக் காண்பித்தான். அனைவரும் இவ்வரிய நிகழ்ச்சியினை கண்ணுற்று மெய் சிலிர்த்து நின்றார்கள். இது தெய்வத்தின் திருவிளையாடல் என்றெண்ணிக் கைகூப்பித் தொழுதார்கள்.

மக்கள் அனைவரும் அவ்விடத்தைச் சுத்தம் செய்யுங்கால் கணம்புற்கள் சூழ்ந்த ஒரு புற்றும் அதனருகில் சுயம்புலிங்கத் திருவுருவும் வேங்கை மரத்தின் அடியில் இருப்பதைக் கண்டார்கள். அப்போது அக்கூட்டத்தில் இருந்த ஒருவர் மேல் தெய்வ அருள் உண்டாகித் ''தான் கேரளா மாநிலம் வண்ணார்காடு (மண்ணார்காடு) என்ற ஊரிலிருந்து பொதிமாடுகளை ஓட்டிக் கொண்டு மைசூர் செல்லும் மக்களுக்கு வழித்துணையாக வந்தேன் என்றும் எழில் மிகுந்த இவ்வியற்கைச் சூழலில் தான் தங்கிவிடுவதாகவும், தன்னை இனிமேல் பண்ணாரி மாரியம்மன் எனப் போற்றி வழிப்பட்டு வாருங்கள்'' எனவும் அருள்வாக்கில் கூறினார்.

அன்னையின் அருள்வாக்கின்படி அவ்விடத்தில் கணங்குப்புற்கள் கொண்டு ஒரு குடில் அமைத்து கிராமிய முறைப்படி நாள்தோறும் பண்ணாரி அன்னையை வழிபட்டு வந்தனர். பின்பு ஊர் மக்களும் பெரியதனக்காரர்களும் அன்னையின் சிறப்புக் கருதி அன்னைக்கு விமானத்துடன் கூடிய சிறுகோவில் அமைத்து பத்மபீடத்துடன் திருவுருவம் அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

ஒவ்வோர் ஆண்டும் பங்குனி மாதம் உத்திரத்தை அடுத்து சமீபத்தில் வரும் திங்கட்கிழமை இரவு (செவ்வாய்கிழமை) அதிகாலை குண்டம் திருவிழா நடைபெறும். அப்பொழுது பல லட்சம் மக்கள் இங்கு கூடுவார்கள். அன்று அம்பிகைக்கு விசேஷ அலங்காரமும் பூசையும் நடைபெறும். அன்று இரவு (செவ்வாய்க் கிழமை காலை 4.00 மணியளவில் பக்தர்கள் விரதம் இருந்து மஞ்சள் ஆடை உடுத்தியும், கையில் வேப்பிலையுடனும் அக்கினிக் குண்டம் இறங்குவர். பக்தர்கள் குண்டம் இறங்கியபின் கால்நடைகளும் குண்டத்தில் இறங்கும். இந்நிகழ்ச்சியே இத்திருக்கோயிலின் சிறப்பு அம்சமாகும். இவ்விழாவிற்காக விசேஷ பேருந்து வசதிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்.

குண்டம் திருவிழா முடிந்த 7ம் நாள் திங்கட்கிழமை மறுபூசைதிருவிழா நடைபெறும். அன்று அம்பிகைக்கு விசேஷ பூசையும், மிரவணை எடுத்தலும் நடைபெறும். அவ்வமயம் பக்தர்கள் கையில் திரிசூலம் ஏந்தி மேளதாளத்துடன் திருக்கோவிலைச் சுற்றி வருவர். அன்றும் லட்சக் கணக்கான பக்தர்கள் கூடுவர்.

திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் கோவில்

ஆர். ராஜகுமார், மேலாளர்,
திருவட்டாறு

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவப் பெருமாள் கோவில் 108 வைணவத் தலங்களுள் ஒன்று. 13 மலைநாட்டுத் தலங்களில் பழமையானது.

திருவட்டாறு, நாகர்கோவில் - திருவனந்தபுரம் சாலையில் இருந்து 30கி.மீ. தொலைவில் உள்ள ஊர். இந்த ஊரின் மேற்கு, தெற்கு, கிழக்கு திசைகளில் பறளியாறு என்ற ஆறு வட்டமாகச் சுற்றி ஓடுகிறது. மூன்று புறமும ஆறு சூழ்ந்த இந்தத் தலத்தில் உள்ள கோவிலில் அருள்மிகு ஆதிகேசவன் குடிகொண்டிருக்கிறார்.

திருவட்டாறு ஊர் பற்றிய செய்தி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூறு என்ற நூலில் வருகிறது. மாங்குடிக் கிழார் என்ற சங்கப் புலவர் இந்த ஊரை ஆண்ட குறுநில மன்னனை வட்டாற்று எழினியாதன் எனப் பாடுகிறார். திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் கோவிலை நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். இவர் கேசவனை வாட்டாற்றான் எனப் புகழ்கிறார். கி.பி. 16ஆம் நூற்றாண்டில் திருக்குருகைப் பிரானும் கேசவனைப் பாடியுள்ளார்.

ஆதிகேசவனைப் பற்றிய தலபுராணம் மலையாளத்திலும் சமஸ்கிருதத்திலும் உள்ளது. ஒரு முறை பிரம்மா யாகம் செய்த போது மந்திர உச்சாடனங்கள் பிறழ்ந்ததால், யாகத் தீயிலிருந்து தீபகேசி என்ற அரக்கன் பிறந்தான். இவன் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் துன்பம் கொடுத்தான். அதனால் எம்பெருமான் அவனை வதை செய்து, சேஷனின் கீழ் அடக்கி அதன்மேல் பள்ளி கொண்டார்.

பாம்பணையின் கீழ் அகப்பட்ட கேசன் தன் 12 கைகளால் அழிவு செய்ய முயன்ற போது,

பெருமாள் அவனது 12 கைகளிலும் 12 ருத்திராட்சங்களை வைத்தார். அவை 12 சிவாலயங்களாக மாறின. அவையே திருமலை தொடங்கித் திருவட்டாறு கோவிலைச் சுற்றியுள்ள 12 சிவாலயங்கள். மகா சிவராத்திரி விழாவில் பக்தர்கள் இக்கோவில்களை ஓடியவாறே தரிசித்துவிட்டு இறுதியில் ஆதிகேசவர் கோவிலுக்கு வரும் வழக்கம் இன்றும் உள்ளது.

வங்காளத்தில் வைணவத்தின் பக்தி மறு மலர்ச்சிக்குக் காரணமான சைதன்யர் (1485-1533) திருவட்டாறு ஆலயத்துக்கு கி.பி. 1510 அளவில் வந்திருக்கிறார். இவருக்கு இவ்வூரில் பிரம்மஸம்ஹிதையின் பாடபேதம் இல்லாத மூலப் பிரதி கிடைத்தது. இதன் ஐந்தாம் அத்தியாயத்திற்கு இங்கிருந்தே உரை எழுதினார்.

ஆதித்யவர்ம சர்வாங்கநாதன் என்ற வேணாட்டு அரசன் ஆதிகேசவனைப் புகழ்ந்து பாடியுள்ளான். மேலும் கோட்டயம் அரசன் வீரகேரளவர்மா என்பவன் மலையாளத்திலும், பிள்ளைப் பெருமாள் அய்யங்கார், ராமானுஜதாசர், அனந்தகிருஷ்ண அய்யங்கார் போன்றோர் தமிழிலும் பாடி உள்ளனர்.

ஆதிகேசவன் ஐந்து தலைகளுடன் கூடிய ஆதிசேஷனின் மூன்று மடிப்புப் பாம்பணை மேல் சமசயன நிலையில் பள்ளிக் கொண்டிருக்கிறார். கடுசக்கரை திருப்படிமமாகத் தென் வடலாகக் கிடந்த கோலத்தில் ஆதிகேசவன் காட்சி தருகிறார். இவரது வடிவம் 16008 சாளக்கிராமத்தால் ஆனது.

கருவறையில் பூதேவி, ஸ்ரீதேவி, ஹாதளேய முனிவர் ஆகியோரின் கடுசக்கரை உருவங்களும் அர்ச்சனா படிமங்களும் உள்ளன.

திருவண்ணாமலையில் தங்கரதம் வெள்ளோட்ட விழா



திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் ரூ.87 லட்சம் மதிப்பீட்டில் தங்கரதம் அமைக்கப் பெற்று அதன் வெள்ளோட்ட விழா 16.3.2006 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. நம் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் **திருமிகு த.பிச்சாண்டி இ.ஆ.ப** அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். திருக்கோயில் அரங்காவலர் குழுத் தலைவர் **திருமிகு ஏ.சி.முத்தையா அவர்களும்**, துணை ஆணையர்/செயல் அலுவலர் **திருமிகு சி.ஜெயராமன் எம்.ஏ.பி.எல்,** அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

கோவிலின் மேற்குப் பிரகாரத்தில் வட மேற்கில் திருவம்பாடி கோவில் உள்ளது. இக்கோவில் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இக்கோவிலின் கருவறைத் தெய்வம் புல்லாங்குழல் இசைக்கும அருள்மிகு வேணுகோபாலன்.

கோவிலுக்கு 4 திசைகளிலும் வாசல் உண்டு. கருவறைக்குச் செல்லும் முக்கிய வாசல் மேற்குப் பார்த்தது. கோவிலின் நான்கு சுற்றுப்பிரகாரங் களிலும் 224 பாவை விளக்குத்தூண்கள் உள்ளன. இந்தத் தூண்களில் இராமாயணம், பாகவதம் தொடர்பான சிற்பங்கள் உள்ளன.

மேற்குப் பிரகாரத்தில் துஜஸ்தம்பம் எதிரே உள்ள ஸ்ரீபலி மண்டபத்தில் உள்ள 12 தூண்களிலும் மிக அற்புதமான சிற்பங்கள் உள்ளன. கர்ணன், கங்காளர், நர்த்தன காளி, குறவன், ஊர்த்துவ தாண்டவர் ஆகியோரின் ஆளுயரச் சிற்பங்கள் இக்கோவிலுக்குப் பெருமை அளிப்பவை.

ஸ்ரீபலி மண்டபத்தை அடுத்து நாலம்பலம் உள்ளது. இது 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இங்கு உள்ள ரதி மன்மதன் சிற்பங்களும் கலைநுட்பத்துடன் உள்ளன.

நாலம்பலத்தின் எதிரே உதய மார்த்தாண்ட மண்டபமும் அடுத்து ஒற்றைக்கல் மண்டபமும் உள்ளன. இவை மரவேலைப்பாடுள்ள சிற்பங்களை உள்ளடக்கியவை. ஒற்றைக் கல் மண்டபம் 6x6x1 மீட்டர் அளவுள்ள ஒரே கல்லால் ஆன தரையை உடையது. இந்த மண்டபத்தை அடுத்துக் கருவறை உள்ளது.

ஆதி கேசவன் உறைந்திருக்கும் உண்ணாளி (ஸ்ரீகோவில்) செவ்வக வடிவிலானது. கேசவன் பள்ளி கொண்டிருப்பதால் இது இவ்வடிவத்தில் உள்ளது. விமான சாய்வுக்கூரை செம்புத் தகடால் வேயப்பட்டுக் கேரளக்கலைப் பாணியில் அமைந்தது. இதில் தங்கமுலாம் பூசப்பட்ட ஐந்து கலசங்கள் உள்ளன. இந்த விமானத்தை அஷ்டாங்க விமானம் என்பர்.

ஆதிகேசவர் கோவிலில் ஐப்பசி, பங்குனி ஆகிய இரண்டு மாதங்களில் திருவிழா நடக்கும். இக்கோவிலின் அதிசயங்களில் ஒன்று புரட்டாசி 3 முதல் 9 வரையிலும், பங்குனி 3 முதல் 9 வரையிலும் அஸ்தமன சூரியனின் செங்கதிர்கள் கர்ப்பக் கிரகத்தின் உள்ளே விழும் நிகழ்ச்சி ஆகும்.

இக்கோவிலின் பூஜை, விழா எல்லாம் பெருமளவு கேரள ஆகம முறைகளையே சார்ந்து நிகழ்கின்றன. இக்கோவில் வழிபாட்டு முறை தாந்திரி ஆகமம் சார்ந்தது.

சிறப்பாசிரியர் மற்றும் வெளியிடுவோர் : திருமிகு **த. பிச்சாண்டி**, இ.ஆ.ப., ஆணையர்.
: தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034. தொலைபேசி : 28334811/12/13
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : குணசுந்தரி மாடர்ன் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை -21. தொலைபேசி : 25967929

அருள்மி[redacted] கள்ளழகர் [redacted]க்கோயில்

[redacted]ர்கோயில்,மதுரை மாவட்டம்

தலத்தின் சிறப்பு

''தென்னவன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும்'' என்று திருவேங்கடமலைக்கு இணையாகப் போற்றப்படும் திருமலை இது. சிலப்பதிகாரம் முதலிய சங்க நூல்களால் புகழப்பட்டது. திருமால் திருவடிச் சிலம்பிலிருந்து புனிதத் தீர்த்தம் பெருகி ஆறாகிப் பாய்ந்தோடுகிறது. இது சிலம்பாறு (நூபுரகங்கை) என்று வர்ணிக்கப்படுகிறது. இந்தத் தீர்த்தம் உலகிலேயே தனிச்சுவையும் வினை தீர்க்கும் மருந்துமாய்ச் சிறந்து விளங்குகிறது. இதுபோல் ஆயிரம் ஆறுகளும் கனைகள் பல ஆயிரமும் இம்மலையில் இருக்கிறதாகப் புராதனப் பாடல்கள் கூறுகின்றன. நம்மாழ்வார்,

திருமங்கையாழ்வார், ஸ்ரீ ஆண்டாள், பெரியாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் இவர்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்றுள்ளது.

பூஜைக் கட்டணம்

அருள்மிகு சுந்தரராசப் பெருமாள் திருமஞ்சனக் கட்டணம்	-	ரூ. 2000/-
அருள்மிகு சக்கரத்தாழ்வார் திருமஞ்சனக் கட்டணம்	-	ரூ. 500/-
அருள்மிகு யோக நரசிம்மர் திருமஞ்சனக் கட்டணம்	-	ரூ. 500/-
அருள்மிகு சுந்தரராசப் பெருமாளுக்குத் திருக்கல்யாணம் காணிக்கை பக்தர்கள் விரும்பும் நாளில்	-	ரூ. 1000/-
உச்சிக்காலப் பூஜை நிரந்தர வைப்பு நிதி உ பயதாரர் குறிப்பிட்ட தினத்தில் 100 நபர்களுக்குப் பிரசாதம் வழங்குதல்	-	ரூ. 3000/-
ஆறுகாலப் பூஜை நிரந்தர வைப்பு நிதி	-	ரூ. 25000/-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்னதானத்திட்டம் நன்கொடை விவரம்

நாள் 1க்கு 100 நபர்களுக்கு மதியம் 1 வேளை அன்னதானம் வழங்க	-	ரூ. 1200/-
நிரந்தர வைப்பு நிதித் திட்டம்	-	ரூ. 15000/-

(வருடத்தில் ஒரு நாள் உபயதாரர் விரும்பும் நாளில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்க)

தல்லாகுளம் அருள்மிகு பிரசன்ன வெங்கடாசலபதி கோயிலில் நாள் 1க்கு 50 நபர்களுக்கு மதியம் ஒரு வேளை அன்னதானம் வழங்க - ரூ. 600/-

Website: www.alagarkovil.org.
e-mail id : alagarkovil madurai @ sancharnet.in.

பா.பாரதி, பி.எல்,
துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி

டாக்டர் **சௌமினிரமேஷ்**
தலைவர், அறங்காவலர்குழு.

அறங்காவலர்கள்:

என்.முத்துராமலிங்கத் தேவர், ஆர்.ராஜேஸ்வரி,
ஆ.வீரணன், எம்.கண்ணன்.

பதிவு எண் : TN / PMG / (CCR) / 707 / 06-08 / WPP No. 451/06-08

தம் ம... ...ருள்மிகு
அருணா...
மீனாட்சி சுந்...கரதம் அ...ர் திருக்கோயில்,
3.2006
ம...ர்.

சித்திரைப் பெருவிழா அழைப்பிதழ்

29-04-2006 தேதி முதல்
11-05-2006 தேதி வரை

முக்கிய திருநாட்கள் விபரம்

30-04-2006 ஞாயிறு	-	கொடியேற்றம் - காலை 10-30 மணிக்குமேல் 10-54 மணிக்குள்
07-05-2006 ஞாயிறு	-	அருள்மிகு மீனாட்சியம்மன் பட்டாபிஷேகம் - மாலை 6-44 மணிக்குமேல் 6-58 மணிக்குள்
08-05-2006 திங்கள்	-	அருள்மிகு மீனாட்சியம்மன் திக்குவிஜயம்
09-05-2006 செவ்வாய்	-	அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம்- காலை 8-26 மணிக்குமேல் 8-50 மணிக்குள்
10-05-2006 புதன்	-	அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருத்தேர் - காலை 6-00 மணிக்கு வடம் பிடித்தல்

தரிசன வழி விபரங்கள்

பொது வழி தரிசனம்	-	கட்டணம் இல்லை
சிறப்பு வழி அனுமதிக் கட்டணம்	-	ரூ. 15/- (சந்நிதி ஒன்றுக்கு) ரூ. 25/- முக்கிய விஷேட தினங்களில் (சந்நிதி ஒன்றுக்கு)

நெய்வேத்திய பிரசாத விற்பனை

இத்திருக்கோயிலின் சார்பில் நெய்வேத்திய பிரசாதங்களாக, தேன்குழல் - ரூ. 5/-, லட்டு - ரூ. 5/-, புளியோதரை - ரூ. 5/-, சர்க்கரைப் பொங்கல் - ரூ. 5/-, அப்பம் - ரூ. 5/- முதலானவை திருக்கோயில் மூலம் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்டு 1. தெற்குக் கோபுர நுழைவுவாயில், 2. மேற்குக் கோபுர நுழைவு வாயில், 3. அம்மன் சந்நிதி மீனாட்சி நாயக்கர் மண்டபம், 4. வடக்குக்கோபுர நுழைவு வாயில், 5. சுவாமி சந்நிதி நுழைவு வாயில் (திருக்கல்யாண மண்டபம் அருகில்) ஆகிய ஐந்து இடங்களில் உள்ள பிரசாத விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அன்னதானத்திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட **அன்னதானத்திட்டம்** எல்லோராலும் பாராட்டும் வண்ணம் சிறப்பாக இத்திருக்கோயிலில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நல்ல சுகாதார முறைப்படி உணவு தயாரிக்கப்பட்டு பசியோடு வரும் வெளியூர் மற்றும் உள்ளூர் பக்தர்களுக்கு நண்பகல் 12-15 மணிக்கு பரிமாறப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் உபயதாரர் கீழ்கண்டுள்ள விபரப்படி தொகை செலுத்தினால் அவரது பிறந்தநாள், திருமண நாள், மற்றும் முன்னோர்களின் நினைவுநாள் அல்லது உபயதாரர் குறிப்பிடும் நாள் இவற்றில் ஏதேனும் ஒரு நாளில் அன்னதானம் வழங்கப்படும்.

திருக்கோயில் விபரம்	ஒருநாள் அன்னதானம் வழங்க	வருடத்தில் ஒருநாள் அன்னதானம் செய்ய ஒரே முறை நிரந்தர முதலீடு செய்தல்
1. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை. (300 நபர்கள்)	ரூ. 2500/-	ரூ. 20,000/-
2. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தெப்பக்குளம், மதுரை. (100 நபர்கள்)	ரூ. 1500/-	ரூ. 15,000/-
3. அருள்மிகு திருவாப்புடையார் திருக்கோயில், செல்லூர், மதுரை. (100 நபர்கள்)	ரூ. 1500/-	ரூ. 15,000/-

சேவைக்கட்டண விபரம்

1.	உபய திருக்கல்யாண உற்சவக் கட்டணம்	-	ரூ. 1501/-
2.	தங்கரதம் புறப்பாட்டுக் கட்டணம்	-	ரூ. 1501/-
3.	அம்மன் மற்றும் சுவாமி ஒரு கால அபிஷேகக் கட்டணம்	-	ரூ. 1300/-
4.	அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணிவிநாயகர் அபிஷேகக் கட்டணம் (சந்நிதி ஒன்றுக்கு)	-	ரூ. 1000/-
5.	அருள்மிகு தட்சிணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை சரஸ்வதி போன்ற தெய்வங்களுக்கு அபிஷேகக் கட்டணம் (சந்நிதி ஒன்றுக்கு)	-	ரூ. 550/-
6.	அருள்மிகு தட்சிணாமூர்த்தி, மகாலெட்சுமி, துர்க்கை சரஸ்வதி போன்ற தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் (சந்நிதி ஒன்றுக்கு)	-	ரூ. 1000/-
7.	அருள்மிகு பத்ரகாளி, முக்குறுணிவிநாயகர் போன்ற தெய்வங்களுக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்ய கட்டணம் (சந்நிதி ஒன்றுக்கு)	-	ரூ. 2250/-
8.	பிரார்த்தனைத் துலாபாரக் கட்டணம்	-	ரூ. 5/-
9.	இலவச உச்சிக்கால இலவச பிரசாத நெய்வேத்திய கட்டணம் (வருடத்தில் ஒருநாள் நிரந்தர முதலீடு)	-	ரூ.5000/-
10.	அம்மன் சுவாமி ஒரு கால அபிஷேகம் மற்றும் பூஜை திட்டம் (வருடத்தில் ஒருநாள் நிரந்தர முதலீடு)	-	ரூ. 20,000/-
11.	சித்தர் சந்நிதி பூக்சவடாரச்சேவைக் கட்டணம்	-	ரூ. 500/-

நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி

இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி
அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை - 1. தபால் பெட்டி எண் - 100
தொலைபேசி எண்கள் : அலுவலகம் 0452 - 2344360, உள்துறை 0452 - 23449868, பிர்லா தங்கும் விடுதி 0452 - 2345503
இணைதளம் : www. Maduraimeenakshi.org.
மின்அஞ்சல் : Meenakshitemple-jc@sancharnet.in.

பக்தர்கள் வருக!

அம்மன் சுவாமி அருள் பெறுக !!

கருமுத்து தி. கண்ணன்
தலைவர், அறங்காவலர் குழு

பா. பாஸ்கரன் பி.எஸ்சி., பி.எல்.,
இணை ஆணையர் / நிர்வாக அதிகாரி

அறங்காவலர்கள்
பி.கே.எம். செல்லையா, அ. துரைப்பாண்டி, எல்.ஆர். உமாபதி